விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பயணத்தை நிறுத்தினார் 9

சிங்களவருக்கு வாரி இறைப்பு 11

யாழ்ப்பாணத்து திருவிழா 15

நூலானது இந்தியா 17



பக்கங்கள்: 28

★ உதயன்

சுடர் 27 கதிர் 49

வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 29 சனிக்கிழமை (14/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# பொறுப்புக்கூறத் தவறியது நல்லிணக்க ஆணைக்குழு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு 105 பக்கங்களில் தயாராகிறது பதில் அறிக்கை

கொழும்பு, ஜனவரி 14

இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுதல் என்ற கடப்பாட்டில் இருந்து முழுமையாகத் தவறிவிட்டது அரசின் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு.

இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைக்கு கூட்டமைப்பின் கருத்துத் தொடர்பான பதில் தற்போது தயாராகிவருகிறது. அந்த பதில் அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு பிரதானமாக முன்வைக்கப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.

105 பக்கங்களைக் கொண்டதாக இந்தப் பதில் அறிக்கை கூட்டமைப்பினால் தயாரிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் நாளை பொங்கல் தினத்தன்று அல்லது மறுநாள் இந்த அறிக்கையின் சாராம்சம் முழுமையாக வெளியிடப்படும் எனவும் தெரியவருகிறது. ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து தனது அவதானங்களை கூட்டமைப்பு இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்

» 19

# சர்வதேச குற்றச்சாட்டுகளுக்கு ஆணைக்குழுவிடம் பதிலில்லை

## கனடாவைத் தொடர்ந்து பிரிட்டனும் திருப்தியீனம்

கொழும்பு, ஜன. 14

ஜனாதிபதி நியமித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையானது பல இடைவெளிகளுக்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்கத் தவறியுள்ளது என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச சமூகம் எழுப்பிய கேள்விகளுக்கு அறிக்கையில் பதிலில்லை என்பதையே பிரிட்டன் இவ்வாறு குறிப்பிட்டுக் கூறியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தும் எண்ணம் இலங்கை அரசிடம் கிடை

» 19

# ஆயுதப் போராட்டத்தை விட மக்கள் எழுச்சியே சிறந்தது

கொழும்பு,ஜன 14

ஆயுதப் போராட்டத்தைவிட பொதுமக்கள் எழுச்சியானது மக்களுக்கு வெற்றி கிடைக்கக்கூடிய வழியாக அமையும் என ஜே.வி.பி. கூறியுள்ளது.

ஆயுதப் போராட்டத்திற்கூடாக அரசைக் கவிழ்ப்பதற்கு இலங்கையில் வழி இல்லை எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறி சில நாள்களின் பின் ஜே.வி.பி. இவ்வாறு கூறியுள்ளது.

சிறிய மூளை கொண்டவர்கள்

» 19

# குற்றம் புரிந்த படையினரை அரசே தண்டிக்க வேண்டும்

## கைவிரிக்கிறது ஐ.நா.

கொழும்பு,ஜன 14

ஹெய்ட்டியில் சிறுமிகளைப் பாலியல் ரீதியாக துன்புறுத்திய இலங்கைப் படையினர் மீது இலங்கை அரசே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நியுயோர்க்கில் கருத்து வெளியிட்ட ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெஸ்ர்க்கி,

» 19

# கூட்டமைப்புடன் பேச இணங்கியது அரசு

## 17ஆம் திகதி திட்டமிட்டபடி பேச்சு

கொழும்பு,ஜன 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - அரசு இடையிலான பேச்சு தொடர்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அதன்படி 17ஆம் திகதி பேச்சுவார்த்தை இடம்பெறும் எனவும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வராவிட்டால் கூட்டமைப்புடன் பேசமாட்டோம் என அரசு தெரிவித்து வந்த நிலையில் அமைச்சர் கெஹலிய இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் இது ஒரு சாதகமான சமிக்ஞை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு முறிவடையும் நிலையில் இருப்பது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சைத் தொடர்ந்து முன்னெடுக்காது ஒதுங்குவதாக அறிவித்து வந்துள்ளது. திம்புப் பேச்சு முதல் அந்தக் கட்சி இவ்வாறு செயற்பட்டு வந்துள்ளது.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைத் தர வேண்டும் என்று தமிழ்த்

» 19

# அந்தப் 'பிரகிருதி'க்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 14

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் எனக் கூறி யாழ். பல்கலைக்கழக மாணவரை விசாரணை செய்த நெடுந்தீவைச் சேர்ந்த இளைஞரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

''போருக்குப் பின்னரான காலத்தில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அகிம்சை வழியே சிறந்தது'' எனும் தலைப்பிலான ஒப்படை ஒன்றை வைத்திருந்த போதே மாணவனை நீண்ட நேரமாக விசாரணைக்குட்படுத்தியுள்ளார் அந்தப் பிரகிருதி.

இது பற்றிப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட பின்னர் மாணவனை விடுவித்ததோடு நெடுந்தீவைச் சேர்ந்த பிரஸ்தாப நபரை நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தி இருந்தனர்.

இவருக்குச் சார்பாக சட்டத்தரணி எஸ்.செலஸ்ரீன் வாதாடினார். யாழ். பொலிஸார் இந்த வழக்கை மன்றில் தாக்கல் செய்திருந்தனர். (ஒ-4)

### சட்டத்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம்

இலங்கை அரசுக்கும், கட்டார் அரசுக்கும் இடையே சட்டத்துறை தொடர்பில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக நீதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். கட்டார் அமீர் ஷேய்க் ஹமட் பின் கலீபா அல் தானியின் இலங்கை விஜயத்தின் போது இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதற்கான அங்கீகாரத்தை நேற்று புதன்கிழமை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பர ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்வதுடன் சட்ட நிபுணத்துவ சேவையையும் பரிமாற முடியும் எனக் குறிப்பிட்டார்.

### முதலாம் வகுப்பு அனுமதி

2012ஆம் ஆண்டில் பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கான மாணவர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன. இதன் பிரதான நிகழ்வு கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன தலைமையில் மத்துகமவில் நடைபெறவுள்ளது. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதலாம் ஆண்டு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதுவரையில் தமது பிள்ளைகளுக்கான பாடசாலைகள் கிடைக்கப்பெறாத பெற்றோர், மேன்முறையீடு செய்ய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

### 17 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இடமாற்றம்

17 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய மாத்தறை, பேருவளை, அளுத்கம, பெந்தொட்டை, மகாவெல, நானுஓய மற்றும் உடபுசல்லாவ பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இடம் மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டார். இதனைவிட பலாங்கொடை, பேலியகொடை, வீரக்கெடிய, அக்மன, வெலிகந்த, கல்கிஸ்ஸ, கதிர்காமம், கெக்கிராவை மற்றும் திக்வெல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் மாற்றப்பட்டுள்ளனர்.

### மிரட்டுகிறது தொழிற்சங்க கூட்டமைப்பு

தமது கோரிக்கைக்கு இணங்க சம்பள உயர்வு வழங்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போகிறோம் என்று மின்சார சபையுடன் இணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. கடந்த மூன்று வருடகாலத்திற்கு சம்பள உயர்வு வழங்கப்படாததால் 45 வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று அச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், 18 சதவீத சம்பள உயர்வை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் தெரிவித்தார். (ஒ-சி)

# 'தைபஸ்' காய்ச்சல் பரவுகிறது மக்களுக்கு அபாய அறிவிப்பு

## அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியசாலையை நாடுங்கள்

யாழ்ப்பாணம்,ஜன 14

தற்போது 'தைபஸ்' காய்ச்சல் வேகமாகப் பரவிவருகிறது. யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் மட்டும் 57 பேர் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சல், தலையிடி, உடல் அலுப்பு, சில வேளைகளில் குமட்டல், [illegible] [illegible] போன்றவை இந்தக் காய்ச்சலுக்கான அறிகுறிகள்.

இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று யாழ். பிராந்திய சுகாதார

» 19

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்னும் 6 நாட்களில் JITF

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'டைனமெற்' பயன்படுத்தியதாகக் கைதான

# 8 மீனவர்கள் உட்பட 10 பேர் நேற்று பிணையில் விடுவிப்பு

சுமார் ஆயிரத்து 700 கிலோகிராமுக்கும் அதிகமான பாரை மீன்களை 'டைனமெற்' மூலம் அவர்கள் பிடித்தனர் எனக் கூறப்பட்டது.

யாழ்பாணம், ஜன.14

'டைனமெற்' வெடி பொருளைப் பயன்படுத்திக் கடலில் மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் எட்டுப் பேரையும், அந்த மீன்களை விற்பதற்கு உடந்தையாகச் செயற்பட்டனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட வாகன சாரதிகள் இருவருமாக 10 பேரும் யாழ்.நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸ் வாதாடினார். விசாரணையின் போது 10 பேரும் தம்மீதான குற்றச்சாட்டை மறுத்தனர். இதனால் வழக்கு விசாரணைக்கென ஒத்தி வைக்கப்பட்டது. அதேசமயம் ஒவ்வொருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒவ்வொரு ஆள் பிணையில் விடுவித்தது மன்று.

சுமார் ஆயிரத்து 700 கிலோகிராமுக்கும் அதிகமான பாரை மீன்களை 'டைனமெற்' மூலம் அவர்கள் பிடித்தனர் எனக் கூறப்பட்டது. கரைக்குத் திரும்பியபோது கடற்படையினரிடம் இவர்கள் அகப்பட்டுக் கொண்டனர்.

அவர்கள் யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கு அறிவித்ததை அடுத்து 10 பேரும் கைதாகி யாழ்.சிறைச்சாலையில் வைக்கப்பட்டு நேற்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். (ஒ-4)

ட்றோலர்களுக்கு அனுமதிப் பத்திரம் இல்லை:

## குருநகர் மீனவர் 10 பேருக்கும் 66 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.14

ட்றோலர் படகுகளில் பதிவு இலக்கம் இன்றியும், 2012 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரம் இன்றியும் கடலுக்குச் சென்று மீன் பிடித்த குற்றத்தை ஒப்புக்கொண் குருநகர் மீனவர் 10 பேருக்கும் 66 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்றம்.

யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் சந்தேகநபர்கள் 10 பேரும் நேற்று சமூகம் தந்தனர். அவர்களுக்கு எதிராக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் வழக்குப் பதிவு செய்திருந்தது.

விசாரணையின்போது ட்றோலர் படகுகள் இரண்டுக்கு பதிவு இலக்கம் இன்றியும் மற்றும் 2012 ஆம் ஆண்டுக்கான மீன்பிடி அனுமதிப் பத்திரம் என்பன இல்லாத குற்றத்தை அவ்விரு படகுகளிலும் சென்றிருந்த எட்டு மீனவர்களும் மன்றில் ஒப்புக் கொண்டதை அடுத்து ஒவ்வொருவருக்கும் தலா ஏழாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மற்றைய படகுக்கு 2012 ஆம் ஆண்டுக்கான மீன்பிடி அனுமதிப் பத்திரம் இல்லாத காரணத்தால் அதில் கடலுக்குச் சென்றிருந்த இருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான்.

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள தலைமையகத்தினருடன் யாழ்.கிளையினரும் இணைந்து குருநகர் இறங்குதுறையில் நேற்றுமுன்தினம் காலை மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போதே இந்த மூன்று படகுகளைக் கைப்பற்றி, மீனவர்களும் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜாவிடம் அன்றைய தினம் முற்படுத்தியபோது அவர்களைத் தலா 150 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## மேர்வினுக்கு காளி சாபம்



அமைச்சர் மேர்வின் அம்பாளிடம் மன்னிப்புக் கோராவிட்டால், காளி தாயின் சாபம் அவரின் தலைமுறைகளையும் வாட்டி வதைக்கும் என முன்னேஸ்வரம் காளி கோயிலின் பூசகர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

பாவம் செய்தவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதா அல்லது இல்லையா என்பதை அம்பாளே தீர்மானிப்பாள் என்றும், நாம் தீர்மானிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் மேர்வினுக்கு இறைதண்டனை வேண்டி நாம் தொடர்ந்தும் யாகம் செய்வோம் என அந்தக் கோயிலின் பூசகர் மகேந்திரன் சாமி தெரிவித்தார்.

தான் ஒருபோதும் யாரிடமும் மன்னிப்புக் கோரப் போவதில்லை என அமைச்சர் மேர்வின் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டிருந்தார்.

அமைச்சரின் கூற்றுத் தொடர்பாக கருத்துக் கேட்டபோதே பூசகர் மகேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மேர்வின் சில்வாவின் சாம்ராஜ்யத்திலேயே அவருக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. துர்க்காதேவியின் சாபம் அடிமட்டத்திலிருந்து அவரை ஆட்டம் காண செய்துள்ளது.

அம்பாளிடம் அவர் பகிரங்கமாக மன்னிப்புக்கோர வேண்டும். இல்லையேல், அவரின் தலைமுறையையும் காளிதேவியின் சாபம் வாட்டி வதைக்கும்.- என்றார்.

## உலகின் மிகப் பெரிய குர் ஆன்



உலகின் மிகப் பெரிய குர் ஆன் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் முக்கிய மதப் பிரமுகர்கள் முன்னிலையில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. 7 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட இப்புனித நூல், 218 பக்கங்களைக் கொண்டுள்ளதுடன், 30 வகையான எழுத்துவடிவங்களையும் உள்ளடக்கியுள்ளது. மொஹமட் சபீர் யகோட்டி ஹுஸைனி கேத்ரி என்பவர் தலைமையிலான குழுவினர் இந்நூலை உருவாக்கியுள்ளனர். இதை உருவாக்குவதற்கு சுமார் 5 வருடங்கள் தேவைப்பட்டுள்ளன.

## கணவனால் அச்சுறுத்தல் மனைவி நீதிமன்றில் சரண்

யாழ்ப்பாணம், ஜன.14

கணவனால் தனக்கும் தனது இரண்டு பிள்ளைகளுக்கும் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறித் தாயும் இரு பிள்ளைகளும் யாழ்.நீதிமன்றில் சரணடைந்தனர்.

இந்த மூவரையும் நம்பிக்கை இல்லம் ஒன்றில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிட்ட நீதிவான் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் மன்றுக்கு சமுகம் தருமாறு பணித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரஸ்தாப பெண், தனது இரண்டு பிள்ளைகளுடன் யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். அதை அடுத்தே அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸார் மூவரையும் நேற்று மன்றில் முன்னிலைப் படுத்தினர்.

தனது கணவர் தன்னை விட்டுச் சென்று மறுமணம் புரிந்துள்ளார் எனவும் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்படுகிறார் எனவும் தனது முறைப்பாட்டில் பிரஸ்தாப பெண் தெரிவித்துள்ளார். இந்த நிலையிலேயே அவர்கள் மூவரும் நம்பிக்கை இல்லமொன்றில் தங்க வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-4)

## ரயில் பாதைவாசிகளுக்கு அரச காணியில் வீடுகள்

யாழ்ப்பாணம், ஜன.14

ரயில் பாதைக் காணியில் குடியிருப்பவர்களை வேறு பிரதேச செயலகங்களில் உள்ள அரச காணிகளில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது:

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள ரயில் பாதைக் காணியில் 74 குடும்பங்கள் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். இவர்களில் 13 குடும்பங்கள் தெல்லிப்பழைப் பிரதேச செயுலகர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்தவர்கள். 3 குடும்பங்கள் காரைநகர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்கள். மிகுதி 58 குடும்பங்கள் எமது பிரதேச செயலகர் பிரிவிலிருந்து அத்துமீறிக் குடியிருக்கின்றன.

கடந்த ஒன்றரை வருடங்களாக இவர்களை வேறு இடங்களுக்கு வெளியேறிச் செல்லுமாறு அறிவித்ததை அடுத்துப் பலர் வெளியேறியுள்ளனர்.

இவர்களுக்குத் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள குட்டியபுலம் கிராமத்தில் உள்ள அரச காணிகளில் தற்காலிக வீடுகள் வழங்கப்படும் என அறிவித்த போதும் எவரும் அங்கு செல்ல முன்வரவில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14)

## கூட்டமைப்பின் அரசியல் நேர்மையைச் சந்தேகப்பட 'உத்தமன்' என்ற அங்கீகாரம் அரசுக்கு இல்லையே

### சுட்டிக் காட்டுகிறார் விக்கிரமபாகு

அரசியல் தீர்வுப்பேச்சு தொடர்பாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ள கருத்துகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

கொழும்பு, ஜன.14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நேர்மையில் சந்தேகம் கொள்வதற்கு அரசு இன்னும் 'உத்தமன்' என்ற அங்கீகாரத்தைப் பெறவில்லை. அரசின் செயற்பாடுகள் மீதே நாம் சந்தேகிக்கின்றோம்.

- இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

அரசு - கூட்டமைப்பு பேச்சில் எட்டப்படும் இணக்கப்பாட்டை பரிசீலிப்பதாகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமையவேண்டும். இல்லையேல், இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைக் காண முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் தீர்வுப்பேச்சு தொடர்பாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ள கருத்துகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்றும், இன்றும், என்றும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

புலிகள் இருந்தபோதும், மறைந்தபோதும் அவர்கள் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பதை நிறுத்தவில்லை. எனவே, கூட்டமைப்பு மீது சந்தேகம் கொள்ளும் அளவுக்கு அவர்கள் எந்தவொரு தவறையும் புரியவில்லை. மாறாக, அரசு, தான் வழங்கிய உறுதிமொழிகளை மீறி அடாவடித்தனமாகச் செயற்பட்டுவருகின்றது.

அரசு மீதுதான் நாம் சந்தேகம் கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி, கூட்டமைப்பு மீது சந்தேகம் கொள்ளும் அளவுக்கு அரசு இன்னும் உத்தமன் என்ற அங்கீகாரத்தைப் பெறவில்லை என்பதையும் புரிந்து செயற்பட்டால் நல்லது எனக் கருதுகின்றோம்.

தீர்வுத் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்கு தெரிவுக்குழு அனுமதிக்கப்பட்டால் அக்குழுவால் ஆராய்வதற்கு ஒன்றும் இருக்காது. எனவே, அரசு - கூட்டமைப்பு பேச்சில் எட்டப்படும் இணக்கப்பாட்டை தெரிவுக்குழுவில் பரிசீலிப்பது உகந்தது. அதுவே, அரசியல் சாணக்கியம் - என்றார். (ஒ-சி)

## பதவி விலகுகிறாராம் ஆஸாத்

கொழும்பு, ஜன.14

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து தான் விலகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாநகர சபை அங்கத்தவரான ஆஸாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையின் பிரதி எதிர்க் கட்சித் தலைவராக மொஹமட் மஹ்ரூப்பை மிலிந்த மொரகொட நியமித்தமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே தான் பதவி விலகவுள்ளதாக அவர் கூறினார். (10)

## சபாநாயகராக டியூ?

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அரசியல் வட்டாரத்தில் பல ஊகங்கள் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் டியூ குணசேகரவிற்கு சபாநாயகர் பதவி வழங்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. எனினும், எந்தவொரு சூழ்நிலையிலும் சபாநாயகர் பதவியைத் தான் ஏற்கப் போவதில்லை என டியூ குணசேகர தெரிவித்துள்ளார். (10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய தேற்றங்களும் வாய்ப்பாடுகளும் இனித் தாராளமாகத் தொடரும்...!

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுமக்களின் ஆயிரம் சொத்துக்கள் படையினர் வசமாகி உள்ளன. அவற்றில் 550 வீடுகளும் அடங்கும். இதனால் 809 குடும்பங்களைச் சேர்ந்த 2519 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு பலர் தமது வருமானங்களையும் இழந்துள்ளனர். படையினர் மற்றும் பொலிஸார் பயன்படுத்தும் சொத்துக்கள், உயர் பாதுகாப்பு வலயப் பகுதியைக் கொண்ட வலி.வடக்குப் பிரதேச சபை தவிர்ந்த ஏனைய இடங்களைச் சேர்ந்தவை என்று புள்ளிவிவரங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இந்தச் சொத்துக்கள், காணிகள், வீடுகள், கடைகள் என்ற வகையறாக்களைச் சேர்ந்தவை. யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவம் நிலைகொண்டது முதல், கடந்த பதினாறு வருடங்களாக மக்களின் கணிசமான அசையாச் சொத்துகள் அவர்களிடமிருந்து கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றில் சிலவற்றுக்கு உரிமையாளர்களின் விருப்பத்துடன் வாடகை வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, வடக்கு, கிழக்கில் உள்ள (அனேகமாக) எல்லா மாவட்டங்களிலும் பாதுகாப்புத் தேவைக்கெனத் தெரிவித்து, கடல் சார்ந்த பகுதிகளில் கடற்படையினர் மற்றும் இராணுவத்தினரின் தேவைகளுக்காக மக்களின் குடியிருப்புப் பிரதேசங்கள் பாதுகாப்பு அமைச்சினால் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதுகுறித்து இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளோம்.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவட்டம் தோறும் தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகள் வாடகைக்கு என்றும் அரசின் தேவைகளுக்கு என்றும் கையகப்படுத்தப்படுவது, இப்போது பொல பொலவென அதிகரித்து வருகிறது.

இரண்டு மாகாணங்களிலும் அரசியல் அதிகாரம் என்ற பெயரில் காணிகள் அரசினால் சுவீகரிக்கப்படுகின்றன. உறுதிப்பத்திரமுள்ள தனியார் காணிகளும் கிழக்கில் சுவீகரிக்கப்படுகின்றன- என்று கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் எஸ்.பிரசாந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேபோன்று, கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை, பொதுமக்கள் குடியிருக்கும் காணிகள் மட்டுமே மாகாண சபைக்குச் சொந்தமான காணிகள் என்ற நிலை உண்டாகலாம் என்று கிழக்கு மாகாண சபையின் மற்றொரு உறுப்பினரான இரா.துரைரத்தினம் ஆபத்தைத் தெளிவுபடுத்தி உள்ளார்; எச்சரித்துள்ளார்.

வடக்கில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் பாதுகாப்புத் தேவைகளுக்கு என்று மக்களின் குடியிருப்பு விவசாயக் காணிகள், கடலோரக் காணிகள், பாதுகாப்புப் படையினரின் தேவைகளுக்கு கையகப்படுத்தப்பட்டு வருவது குறித்து இப்பத்தியில் அவ்வப்போது, விவரமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைத்தால் போன்று, வன்னிப் போரினால் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதியாது, முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 650 ஏக்கர் காணியை முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பயன்பாட்டுக்கென, பாதுகாப்பு அமைச்சு கையகப்படுத்தி உள்ளது.

அதேபோன்று, மன்னார் மாவட்டத்தில் மரமுந்திரித் தோட்டங்கள் அமைந்திருந்த கஜுவத்த பகுதியில் அகன்று விரிந்த நிலப்பரப்பில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாமல், படைத்தரப்பினரும், அவர்களின் குடும்பங்களும் குடியிருக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் நீண்ட காலத்துக்கு முன்னரே வெளியாகியிருந்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரச காணிகளைத் தனியாருக்கோ, நிறுவனங்களுக்கோ குத்தகைக்குத் தானும் வழங்கக் கூடாது என்று ஜனாதிபதி செயலணி அறிவித்திருப்பதனையும், மக்களின் காணிகளை, வீடுகளைப் படையினரின் தேவைக்குக் கையகப்படுத்துவதும் ஒன்றோடு மற்றது தொடர்புடையது என்பது மலை மேல் ஏற்றிய விளக்குப் போன்று மறைப்பின்றித் தெரிகிறது.

வடக்கு, கிழக்கில் தேவையற்ற இடங்களில் இருந்து படையினரை வெளியேற்றி உள்ளோம்- என்று பாதுகாப்புத் துறையின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இவ்வாரமுற்பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

இலங்கை, இராணுவ அடக்குமுறையின் கீழ் உள்ளதாகச் சர்வதேசம் குற்றம் சாட்டுகிறது. ஆனால் நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காகவும் அவர்களின் நலன்களுக்காகவுமே இராணுவத்தினரைப் பயன்படுத்த உள்ளோம் என்று விளக்கம் கொடுத்தார்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் மேற்கூறியதற்கு ஆதாரமாக-

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் தமது செயற்பாட்டை அனைத்துலக ரீதியில் மீளமைப்பதற்கு முயன்றுவருகின்றனர். இவர்களால் இலங்கைக்கு அச்சுறுத்தல் இருந்துகொண்டே இருக்கிறது.-

எனவே அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டெழுவதைத் தடுப்பதற்கு நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது - என்று பாதுகாப்புச் செயலாளர் நியாயப்படுத்தி உள்ளார்.

இத்தகைய ஒரு பின்னமைவு உள்ளபோது, வடக்கு, கிழக்கில் படையினரின் தேவைகளுக்கு மக்களின் காணிகளைக் கையகப்படுத்தும் செயற்பாடுகள் நியாயப்படுத்தப்பட்டு, அமுக்கப்பட்டுவிடும். அதற்கான சமன்பாடுகளை அல்லது தேற்றங்களை இயற்றுவது, உருவாக்குவது ஒன்றும் அரசுக்குக் கடினமானதல்லவே. ஐயகோ, தமிழினமே! நிர்க்கதியற்ற நீ, என் செய்வாய்; யாரிடம் சொல்லி அழுவாய்?!

# வவுனியாவில் கடத்தப்பட்டது டொல்பின் பொலிஸார் மீட்டனர் மிருசுவிலில்!

வவுனியா, ஜன.14

ஆயுதம் தாங்கிய கொள்ளையர்களால் வவுனியாவில் கடத்தப்பட்ட டொல்பின் வாகனத்தை வவுனியா பொலிஸார் மிருசுவிலில் வைத்துக் கைப்பற்றினர்.

பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனக்கூறி கடந்த டிசெம்பர் 24 ஆம்திகதி இரவு வவுனியா வேப்பங்குளம் பிரதேசத்தில் வைத்து இந்த வாகனத்தை வாடகைக்கு அமர்த்திய கொள்ளையர்கள் பின்னர் அதனை ஆயுத முனையில் கடத்தினார்கள். சில மணி நேரத்தின் பின்னர் வாகனத்தின் சாரதி விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து வவுனியாப் பொலிஸாரினால் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் மிருசுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்த அந்த வாகனம் வவுனியாப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது. இந்தப் புதிய வாகனத்தின் பெறுமதி 40 லட்சம் ரூபா எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்குச் சில தினங்களுக்கு முன்னர் சந்தேக நபர்களால் மேலுமொரு வாகனம் கடத்திச் செல்லப்பட்டதாகவும் இதன் போது வாகனத்தின் சில்லொன்று கழிவுநீர் வாய்க்காலொன்றில் சிக்கிக் கொண்டதால் அவர்கள் அதனைக் கைவிட்டுச் சென்றதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தச் சந்தேக நபர்களில் இருவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் வர்த்தகர் ஒருவர் கப்பம் கோரிக் கடத்தப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர்கள் எனவும் அவர்கள் விளக்கமறியலிலிருந்து சில மாதங்களுக்கு முன்னரே பிணையில் விடுதலையானவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

வவுனியா குற்றப் பிரிவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (த-22)

## கைதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ். சிறையில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் சிறைச்சாலையில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கடந்த டிசெம்பர் மாத இறுதியில் 240 கைதிகள் வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த மாதம் அது 250 ஆக உயர்ந்துள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் கூறின.

குடாநாட்டில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளமையே கைதிகள் அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

திருட்டு மற்றும் கோஷ்டி மோதல் ஆகியவற்றில் ஈடு பட்டேஅதிகளவு கைதிகள் சிறைச் சாலைக்கு வருவதாக மேலும் கூறப்பட்டது. இதனால் சிறைச்சாலையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. (த-14)

## 250,000 சிமெந்துப் பைகள் சங்கங்கள் மூலம் விற்பனை

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் கடந்த ஆண்டு சுமார் இரண்டரை லட்சம் வரையான சிமெந்துப் பைக்கற்றுக்களைத் தருவித்துச் சங்களுக்கு விநியோகித்துள்ளதாகச் சமாசத்தின் பொது முகாமையாளர் எஸ்.கெங்காதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஆண்டில் கூட்டுறவுக்கிராமிய வங்கி சமாசத்தினால் 2லட்சத்து50 ஆயிரம் வரையிலான சிமெந்துப் பைக்கற்றுக்கள் யாழ்ப்பாணத்துக்குத் தருவிக்கப்பட்டு சங்கங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் இவ்வாறு ஆகக்கூடுலான சிமெந்துப் பைக்கற்றுக்களைச் சமாசம் தருவித்துள்ளது.

இந்தச் சிமெந்துப் பைக்கற்றுக்கள் அனைத்தும் சங்கங்கள் ஊடாக மக்களுக்கு நியாயமான விலையிலேயே விற்பனை செய்யப்பட்டன.

இந்த ஆண்டிலும் சிமெந்துப் பைக்கற்றுக்களைக் கூடிய அளவில் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிமெந்துப் பைக்கற்றுக்களைத் தினமும் கனரக வாகனங்கள் மூலம் எடுத்து வரும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன- என்றார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது சிமெந்துக்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தச் சிமெந்துத் தேவையை பூர்த்தி செய்வதற்குத் தினமும் பெரும் எண்ணிக்கையான சிமெந்துப் பைக்கற்றுக்களைத் தனியார் வர்த்தகர்களும் வாகனங்கள் மூலம் எடுத்து வருகின்றனர். (த-17)

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விவரம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.14

வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து வன்னி, தீவக வலயங்களுக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இது தொடர்பான மேன்முறையீடுகளை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு வலிகாமம் கல்வி வலய இடமாற்ற சபைத் தலைவர் ஏ.ஜே.குரூஸ் அறிவித்துள்ளார். (த-313)

## 3,447 வாகனச் சாரதிகளை காட்டிக் கொடுத்தது ‘கமரா’!

### நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜன.14

கொழும்பு நகரின் பல்வேறு இடங்களிலும் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராக்கள் மூலம் பெறப்பட்ட பதிவுகளில் இருந்து குற்றம் புரிந்துள்ள வாகனச் சாரதிகளை இனங்கண்டு 3 ஆயிரத்து447 வழக்குகள் கடந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுடன் இணைந்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு நகருக்கு உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் இடங்களிலும் நகரின் முக்கிய மையங்களுக்கு அருகிலும் 105 பொலிஸ் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றின் மூலம் வீதி ஒழுங்குகள் மற்றும் குற்றச் செயல்கள் என்பன கண்காணிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை3 ஆயிரத்து 447 சாரதிகள் குற்றம் புரிந்துள்ளமை இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (த-22)

## நிகழ்வுகள் இன்று

**கண் பரிசோதனை**

சமூக சேவை அடிப்படையில் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இலவச கண்பரிசோதனையும்காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (த-313)

**இசை நிகழ்வு**

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜேர்மன் கிளவுன்ஸ் நிறுவனத்தினர் வழங்கும் இசை நிகழ்வு பிற்பகல் 4 மணிக்கு வேலணை அம்பிகை நகரில் இடம்பெறவுள்ளது.(த-313)

**பழைய மாணவர் கூட்டம்**

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

**தெரிவுப் பரீட்சை**

யாழ்ப்பாணம், ஜன.14

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்தியத்தினால் சட்டமாணிக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப் பரீட்சை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் அனைவரையும் 9மணிக்கு மண்டபங்களுக்கு சமுகம் தருமாறு யாழ்.திறந்த பல்கலைக்கழக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (த-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவுக் கடலில் தெற்கு மீனவர் அடாத்து

### தொழில் செய்ய முடியா அவலத்தில் தமிழ் மீனவர்கள்

முல்லைத்தீவு, ஜன. 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய்ப் கடற்பிரதேசங்களில் திருகோணமலை மற்றும் தென்பகுதி மீனவர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக தாம் தொழிலில் ஈடுபட முடியாதுள்ளது என அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று இந்தப் பிரதேசத்துக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறீதரன் ஆகியோரைச் சந்தித்து மக்கள் தமது குறைகளை முன்வைத்தனர்.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, புளியமுனை போன்ற பகுதிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் சென்றிருந்தனர்.

இதன் போது இந்தப் பிரதேசத்தின் மக்கள் தாம் அனுபவித்து வரும் இன்னல்களை எடுத்துக்கூறினர்.

குறிப்பாக புளியமுனை, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி போன்ற கிராமங்களிலுள்ள கடற்றொழிலாளர்கள் தாம் தொழில் செய்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் கூறினர். திருகோணமலை மற்றும் தென்பகுதியில் இருந்து வரும் முஸ்லிம், சிங்கள மீனவர்கள் இயந்திரப் படகுகள், கூட்டுவலைகள் என்பவற்றைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மீன் பிடியில் ஈடுபடுகின்றனர்.

> நேற்று இந்தப் பிரதேசத்துக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் மக்கள் தமது குறைகளை முன்வைத்தனர்.

எங்களிடம் 'குல்லா' போன்ற சிறியவகைப் படகுகளே உள்ளன. ஆழமற்ற இந்த கடற்பிரதேசத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் மீனவர்கள் சிறிய கண் வலைகளைப் பயன்படுத்தி மீன் குஞ்சுகளையும் அள்ளிச் செல்வதால் எங்களால் தொழிலில் ஈடுபட முடியவில்லை என முறையிட்டனர்.

அத்துடன் சிங்கள, முஸ்லிம் மீனவர்கள் தமது வலைகளையும் நாசம் செய்வதால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகத் தெரிவித்தனர்.

அத்தோடு யூ.என்.டீ.பீ. நிறுவனம் போரில் பாதிக்கப்பட்ட படகுகளைத் திருத்தி கொக்கிளாய்ப் பிரதேசத்தில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள் மீனவர்களுக்கு வழங்கியுள்ளது. எங்களுக்கு இதுபோன்ற எந்த உதவியும் கிடைக்கவில்லை.

இந்தப் பகுதியில் உள்ள வயல் நிலங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு இதுவரை அனுமதிக்கப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர். உத்தராயன்குளம், ஆமையன்குளம், பூவாமடுக்கண்டல், எரிஞ்சகாடு, நாயடிச்சமுறிப்பு, தட்டாமலை, சகலாசுவெளி, சுகந்தமுறிப்புப் போன்ற பகுதிகளில் உள்ள ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் இதுவரை பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்படவில்லை.

இதனால் வாழ்வாதார ரீதியாகத் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக அந்த மக்கள் தெரிவித்தனர். கருத்துக்களைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடுவதாகத் தெரிவித்துள்ளனர். (ஒ-10-426)

# அழகுபடுத்த வேண்டிய குளம் அசுத்தமாக மாறிய அவலம்

வவுனியா, ஜன.14

வவுனியா இறம்பைக்குளம் வீதியில் அழகுபடுத்தும் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள வவுனியாக் குளம் அசுத்தத்தின் மறு உருவமாகக் காட்சி தருகின்றது.

அழகுபடுத்தும் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட இந்தக்குளம் அசுத்தம் காரணமாக அவலட்சணமாகக் காணப்படுவது இங்குள்ள மக்களுக்கு வேதனையளித்துள்ளது.

இந்தக் குளம் குப்பை கூழங்கள் நிறைந்து அசுத்தமாகக் காட்சியளிக்கின்றது. இதனால் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கின்றது.

அத்துடன் பல்வேறு நோய்களைப் பரப்பும் நுளம்புகளின் புகலிடமாகவும் இது காட்சியளிக்கின்றது.




மேலும் நோய்க்கிருமிகளும் காணப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

இந்தக் குளத்துக்கு அருகிலுள்ள வீதியால் தினமும் செல்லும் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பாதசாரிகள் வரை துர்நாற்றத்தைச் சகிக்க முடியாமல் மூக்கைப் பொத்தியவாறு சொல்வதைக் காண முடிகிறது.

எனவே உரிய அதிகாரிகள் இதனைச் சீர் செய்ய வேண்டுமெனப் பல தரப்பாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-421)

## ஊக்குவிக்கக் கூடாது

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதை அரசியல் தலைவர்கள் ஊக்குவிக்கக்கூடாது என அஸ்கிரிய பீடாதிபதி அதி.வண. உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர் கூறியுள்ளர்.

அஸ்கிரிய பீடாதிபதியை ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதற்கு நான் எதிரானவன் அல்ல என்றார்.

# ட்றோலர் தொழிலுக்கு அனுமதிக்குமாறு கோரிக்கை

அக்கராயன், ஜன.14

தமக்கும் ட்றோலர் படகுகள் மூலம் மீன்பிடிக்க அனுமதி வழங்குமாறு பூநகரி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பகுதியிலுள்ள கடற்பரப்பில் வெளியிடங்களைச் சேர்ந்த மீனவர்கள் ட்றோலர் படகுகள் மூலம் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படுவதோடு, நாமும் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளோம்.

இந்த நிலையில் எமக்கு ட்றோலர் படகுத் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். கடந்த வாரம் இடம்பெற்ற சமாசக் கூட்டத்திலேயே மீனவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (க-410)

# மன்னார் மாவட்ட அரச பஸ்களில் நாளுக்கு நாள் நிலைமை படுமோசம்

மன்னார், ஜன.14

மன்னார் மாவட்டத்தில் சேவையிலீடுபடும் அரச பஸ்கள் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுகின்றன.

இங்கு உள்ள பல கிராமங்களுக்கு அரசபஸ்களே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் அவை பல்வேறு குறைபாடுகளுடன்காணப்படுவதால் ஒழுங்கான சேவைகளை மேற்கொள்வதில்லை.

தலைமன்னார், தாழ்வுபாடு, நானாட்டான், முருங்கன் ஆகிய கிராமங்களுக்கும் அரச பஸ்கள் சேவையிலீடுபட்டு வருகின்றன. ஆனால் இந்த பஸ்வண்டிகள் அடிக்கடி நடு வீதியில் நின்று விடுகின்றன. பயணிகள் கீழே இறங்கித் தள்ளினால் மட்டுமே இவை மீள இயங்குகின்றன. பணத்தைக் கொடுத்துப் பயணிக்கும் பயணிகள் நடு வீதியில் பஸ்ஸைத் தள்ளிச் செல்ல வேண்டிய அவலத்துக்கு ஆளாகியுள்ளனர்.

சில தரிப்பிடங்களில் பஸ்கள் நிறுத்தப்படும் போது அவற்றை மீண்டும் இயக்கிச் செலுத்துவதில் பஸ் சாரதிகள் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டாலும் அது சாத்தியமில்லாது போவதையும் காணமுடிகின்றது.

மேலும் இரவு வேளைகளில் கிராமங்களுக்குச் செல்லும் பஸ்கள் காலையில் மீண்டும் மன்னாருக்குத் திரும்பி வரமுடியாத நிலையும் காணப்படுகிறது.

இந்த பஸ்களில் பயணம் செய்வோர் குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாத அவலத்துக்கும் ஆளாகின்றனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலை அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தித் தமது போக்குவரத்து இன்னல்களைக் களைய வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (க-601)

### பட்டப் படிப்பைத் தொடர அனுமதிக்காமைக்கு ஆட்சேபம்

# முல்லைத்தீவு மாணவியின் வழக்கில் பிரதிவாதிக்கு பெப். 29 வரை அவகாசம்

பல் வைத்திய விஞ்ஞான பட்டப்படிப்பை தொடர அனுமதிக்கப்படாமைக்கு எதிராக முல்லைத்தீவைச் சேர்ந்த அனுஜா யோகநாதன் என்ற மாணவி தொடுத்த வழக்கில் பிரதிவாதியான மற்றொரு மாணவி வி.ஜயவதனி ஆட்சேபம் தெரிவிப்பதற்கு பெப்ரவரி 29 ஆம் திகதிவரை மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

''முல்லைத்தீவை சொந்த இடமாகக்கொண்ட தான், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் பல்கலைக்கழகத்தில் பல்மருத்துவப் பட்டப் படிப்பைத் தொடர்வதற்கு அனுமதிக்காமல் முல்லைத்தீவைச் சேராத ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என அனுஜா யோகநாதன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, அதன் மேலதிகச் செயலாளர் டாக்டர் பிரியந்த பிரேமகுமார, பல்கலைக்கழக பல்வைத்திய விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரிவான பரீட்சார்த்தியான வி.ஜயவதனி ஆகியோரை அவர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ.. சாதாரண தரப் பரீட்சையில் தான் எட்டு அதிவிசேட சித்திகளைப் பெற்றதுடன், 2008ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதியுள்ளார் எனவும் மனுதாரர் அனுஜா யோகநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடவை மிருக வைத்திய பீடத்திற்குத் தான் தெரிவாவதற்கு தகுதிபெற்ற போதிலும், மருத்துவப் பீடத்திற்குத் தெரிவாக விரும்பியதால் மீண்டும் பரீட்சை எழுதத் தீர்மானித்தார் எனக் கூறியுள்ளார்.கடும் இராணுவ மோதல் காரணமாக தானும் தனது குடும்பத்தினரும் அங்கிருந்து தப்பிச்சென்று வவுனியா மாவட்டத்திலுள்ள மெனிக் பாம் இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்தார் என்றும் 2009ஆம் ஆண்டு வீரபுரம் இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்த நிலையில் உயர்தரப் பரீட்சை எழுதினார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான பின்னர் பேராதனைப் பல்கலைக்கழத்தில் மிருகவைத்திய விஞ்ஞானப் பிரிவில் பாடநெறியைத் தொடர்வதற்கு தான் தகுதி பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டதாக அந்த மாணவி குறிப்பிட்டுள்ளார். இந்தப் பாடநெறியைத் தொடர்வதற்கு 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டார்.

2003ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறையில் உயர்தர மாணவியாக இருந்த மூன்றாவது பிரதிவாதியான ஜெயவதனி, 2007ஆம், 2008 ஆம் ஆண்டுகளில் மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து, பரீட்சைக்குத் தோற்றுவதைத் தவிர்த்து 2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றினார் என மனுதாரர் அனுஜா கூறியுள்ளார்.

மருத்துவம், பல்மருத்துவ பாடநெறிகள்ஆகியவற்றிற்கான இஸட் ஸ்கோர் வெட்டுப்புள்ளி கிளிநொச்சிக்கு அடுத்ததாக முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இரண்டாவதாகக் குறைவாகவுள்ளது என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவில் ஜி.சீ.ஈ. உயர்தரப் படிப்பை மேற்கொண்ட மாணவர்கள் தமது பல்கலைக்கழக அனுமதிக்குக் கூடுதலாக முன்னேற்றமடைந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் படிப்பை மேற்கொண்ட மாணவர்களுடன் போட்டியிடவேண்டும் என எதிர்பார்ப்பது முறையற்றதும், நியாயமற்றதுமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஓகஸ்ட் மாதப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி, மூன்றாவது பிரதிவாதியான ஜெயவதனி, முல்லைத்தீவு மாவட்ட பரீட்சார்த்தியாக உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டால், தான் பல்வைத்தியத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பார் எனவும் மனுதாரரான அனுஜா தெரிவித்துள்ளார்.

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நாளை மறுதினம் முதல்

மன்னார், ஜன.14

மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் முழுவீச்சில் செயற்படவுள்ளன.

கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்த நிலையில் காணப்பட்டது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களிலேயே டெங்கு நோய் அதிகரித்துக் காணப்பட்டது.

இதன் காரணமாக 06 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்ததோடு பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர்.

> கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்த நிலையில்

இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் மன்னார் பிரதேச செயலகம், மாவட்ட வைத்திய அதிகாரி காரியாலயம், உள்ளூராட்சி மன்றம், பொலிஸ் திணைக்களம் ஆகியவை இணைந்து எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் இடம்பெறவுள்ளது.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 31 கிராம சேவையாளர் பிரிவுகளை 07 வலயங்களாகப் பிரித்து எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையிலான 07 தினங்களுக்குள் தனித்தனியாக டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் மேற்கொள்ள விருப்பதாக நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் எ.ரி.அன்புராஜ லெம்பேட் தெரிவித்தார். (க-601)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒட்டகப்புலத்தில் 20 ஏக்கர் காணியை 'பறிக்கிறது' பாதுகாப்பு அமைச்சு

யாழ்ப்பாணம், ஜன.14

வயாவிளான் கிழக்கு, ஒட்டகப்புலத்தை அண்டிய பிரதேசத்தில் பொதுமக்களின் 20 ஏக்கர் காணியை பாதுகாப்பு அமைச்சு தனக்கு 'பராதீனப்படுத்துமாறு' காணி அமைச்சின் ஊடாக மாவட்ட செயலகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது:

கடந்த வருட இறுதியில் காணி அமைச்சால் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அனுப்பட்டுள்ள கடிதத்தில் தற்போது உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக உள்ள ஒட்டகப்புலத்தின் 20 ஏக்கர் காணியில் படையினர் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நிலைகொண்டுள்ளனர்.

**படையினர் கோரியுள்ள காணிகள் அனைத்தும் தனியாருடையவை. அத்துடன் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்வதற்கு இதுவரையில் 200 இற்கும் அதிகமான குடும்பங்கள் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன**

எனவே இந்தக் காணி அரச காணி. அதனை உடனடியாக தெல்லிப்பழை பிரதேச செயலகம் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு பராதீனப்படுத்தித் தருமாறு கோரப்பட்டுள்ளது.

இருப்பினும் படையினர் கோரியுள்ள காணிகள் அனைத்தும் தனியாருடையவை. அத்துடன் இந்தப் பிரதேசத்தில் மீளக் குடியமர்வதற்கு இதுவரையில் 200 இற்கும் அதிகமான குடும்பங்கள் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இந்த நிலையில் இந்த விடயங்களை உள்ளடக்கி காணி அமைச்சுக்கு பதிலனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலும் தற்போது மக்கள் பாவனைக்கு விடப்படாது படையினர் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில், நகரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் முகாம்கள் அமைக்கப்பட்டு நிரந்தரமாக்கும் வேலைகளும் இடம்பெற்றுவருகின்றன.

கடந்த வருடம் டிசெம்பர் 18ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ, சகல அமைச்சுகளிலிருந்தும் தமிழ் மொழியிலேயே சுற்று நிருபங்களும் கடிதங்களும் அனுப்பப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இருப்பினும் காணி அமைச்சால் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்ட மேற்படி கடிதம் முழுக்கமுழுக்க சிங்கள மொழியிலேயே எழுதப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-15)

## மேலாடை இன்றி உணவு தயாரிப்பு கடை உரிமையாளருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.14

கோண்டாவிலில் உள்ள உணவகம் ஒன்றில் உடல் நலத்துக்குக் கேடான வகையிலும், மேலாடை இன்றியும் உணவுத் தயாரிப்பில் ஈடுபட்ட குற்றத்துக்காகக் குறித்த கடை உரிமையாளருக்கு யாழ்.நீதிமன்றம் நேற்று முன்தினம் 3ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

குறித்த கடை உரிமையாளருக்கு எதிராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் யாழ் நீதிமன்றில் இதுபற்றி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது உடல்நலத்துக்கு ஒவ்வாத வகையிலும், மேலாடை இன்றியும், வெற்றிலை சாப்பிட்டவாறும் உணவு சமைத்த குற்றத்தை உரிமையாளர் ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

இது தவிர அரியாலைப் பகுதியில் அனுமதி பெறாது பட்டாசு விற்பனை செய்தமை அல்லது காட்சிக்கு வைத்திருந்த குற்றத்துக்காக இதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் வியாபார நிலையத்தின் பெயர்ப்பலகையை வீதியில் வைத்திருந்த குற்றத்துக்காக யாழ். கே.கே.எஸ். வீதியிலுள்ள வியாபாரி ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.


புதுவருட தினத்தன்று வாகனவரிப் பத்திரம் இன்றியும், ஏனைய வாகனங்களுக்கு இடையூறாகவும் யாழ்.நகரில் வாகனம் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான். (த-4)

## மணியந் தோட்டத்துக்கு மின் விநியோகப் பணிகள்

கொழும்புத்துறை, ஜன.14

மணியந்தோட்டப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின்னிணைப்புப் பணிகள் இலங்கை மின்சார சபையால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்த வாரம் இப்பகுதியின் பிரதான வீதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



நெடுங்குளம் சந்தியில் இருந்து உயர் மின்வலு இணைப்புகள் மணியந்தோட்டம் வரை ஏற்படுத்தப்பட்டு 4ஆம் குறுக்குப் பகுதியில் மின்மாற்றி பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பிரதான வீதியின் மின் விநியோகத்தை அடுத்து மின் கம்பங்கள் நடப்பட்ட உள்ளக வீதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தப் பகுதி மக்கள் தமது வீடுகளுக்கு மின்னிணைப்பு வேலைகளை மெற்கொள்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகிறது. (ம-315)

## அதிக விலையில் குளிர்பானம் ஐந்து பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.14

நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைக்குக் குளிர்பானங்களை விற்பனை செய்த குற்றத்துக்காக வியாபாரிகள் ஐவருக்கு யாழ்.நீதிமன்றம் 29ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. அத்துடன் பனடோலை ஒரு ரூபாவினால் விலைகூட்டி விற்றவரும் 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

யாழ்.மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபையினரால் கடந்த வருட இறுதியில் யாழ்.நகரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே குளிர்பானங்களை அதிக விலைக்கு விற்பனைசெய்த வியாபார நிலையங்கள் கண்டறியப்பட்டன. இதனையடுத்து யாழ்.நீதிமன்றில் இதுபற்றி முறைப்பாடு செய்யப்பட்டது. யாழ். நீதிமன்றினால் இவர்களுக்கு அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜாவிடம் அவர்கள் நேற்று முன்தினம் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இதன்போது 32 ரூபா விலை பொறிக்கப்பட்ட 400 மில்லிலீற்றர் குளிர்பானத்தை 35 ரூபாவுக்கு விற்பனை செய்த குற்றத்துக்காக இரண்டு பேருக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. 25 ரூபா பொறிக்கப்பட்ட குளிர்பானத்தை 35 ரூபாவுக்கு விலை கூட்டி விற்பனை செய்தவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. 30 ரூபா பொறிக்கப்பட்ட 300 மில்லிலீற்றர் குளிர்பானத்தை 40 ரூபாவுக்கு விலை கூட்டி விற்றவருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. 30 ரூபா பொறிக்கப்பட்ட குளிர் பானத்தை 35 ரூபாவுக்கு விலைகூட்டி விற்றவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இது தவிர 27 ரூபா பெறுமதியுடைய ஒரு காட் பனடோலை 28 ரூபாவுக்கு விற்பனை செய்த வியாபாரிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இந்த அபராதத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை யாழ்.செயலக பாவனையாளர் அதிகார சபைக்கு வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-4)

## கொலை சூத்திரதாரிகளுக்கு வீடு வழங்கியவருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜன.14

கடந்த வருட இறுதியில் அச்சுவேலியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய கொலைச் சூத்திரதாரிகள் தங்குவதற்கு வீடொன்றை வழங்கித் தஞ்சமளித்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மீசாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் யாழ்.நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நிலுவையில் இருந்துவரும் இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுள் நான்காவது சந்தேக நபரான மீசாலையைச் சேர்ந்தவரே நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார். இவர் 30 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் செல்லஉத்தரவிட்ட நீதிவான் பிணையாளிகளில் ஒருவர் அரச உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் எனவும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்.நீதிமன்றுக்குச் சமுகமளித்து காலை 9 மணிக்கும் மதியம் 12 மணிக்கும் இடையில் கையெழுத்திடவேண்டும் எனவும் பணித்தார்.

நான்காவது சந்தேக நபர் குற்றவியல் தண்டனைக் கோவைச் சட்டத்தின் பிரிவு 209 இன் கீழ் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கொலைச் சந்தேகநபர்களுக்குப் புகலிடம் வழங்கியிருக்கவில்லை என்று அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் நீதிவான் கவனத்துக்குக் கொண்டுவந்ததை அடுத்து அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-4)

## காசநோய்த் தாக்கம் குறித்து விழிப்புணர்வு

தென்மராட்சி, ஜன.14

தென்மராட்சிப் பிரதேசத்தில் காசநோய்த் தாக்கம் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் வெளிக்களப் பணியாளர்கள் ஈடுபடவேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள காலாண்டுக்குரிய செயற்பாட்டுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்ட விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், பிராந்திய தாய்சேய் சிகிச்சைப் பிரிவுப் பொறுப்பதிகாரி, பிராந்திய தொற்றுநோயியலாளர், பிராந்திய மலேரியா தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி, பிராந்திய பற்சிகிச்சை நிபுணர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், பிரதேச செயலக பிரதிநிதி, சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலக பிரதிநிதி, சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் உட்பட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் கடந்த காலாண்டு காலத்தில் வைத்திய அதிகாரி பணிமனையினரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை பணிமனை உத்தியோகத்தர்கள் திருப்திகரமாகச் செயற்படுத்தியமைக்கும் இதற்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் நல்கிய சாவகச்சேரி நகரசபை, பிரதேசபை ஆகியவற்றின் தலைவர்களுக்கும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

எதிர்வரும் காலாண்டுக்குரிய காலத்தில் உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகம், கால்நடை வைத்தியர் அலுவலகம் ஆகியவற்றின் உதவிகளைப் பெற்று மேலும் சிறந்த முறையில் செயற்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## தென்மராட்சி பிரதேச செயலகத்தால் 635 பேருக்கு உதவித் திட்டங்கள்

தென்மராட்சி, ஜன.14

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் 635 பேருக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் கடந்த வருடத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**பிரதேச செயலகத்தில் ஏற்கனவே பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்ற 3ஆயிரத்து 41 பேரின் கொடுப்பனவுத் தொகை கடந்த ஒகஸ்ட் மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது**

கடந்த வருடம் பொதுசன மாதாந்த உதவிப் பணம் கோரி விண்ணப்பித்தோரில் 311 பயனாளிகள் இணைக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் பிரதேச செயலகத்தில் ஏற்கனவே பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்ற 3ஆயிரத்து 41 பேரின் கொடுப்பனவுத் தொகை கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 104 புற்று நோயாளர்களுக்கும் நான்கு தொழுநோயாளர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 29 பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் சுய தொழில் உதவிக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதார அதிகரிப்புக்கு வழி வகுக்கப்பட்டது. புயல், காற்று, மழை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளைச் சீரமைக்க 19 குடும்பங்களுக்குத் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டன.

விசேட தேவையுடையவர்களால் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் பிரகாரம் மூவருக்குச் செயற்கைக் கால்களும், மூவருக்கு முச்சக்கர வண்டிகளும், மூவருக்கு மூக்குக் கண்ணாடிகளும், இருவருக்கு ஊன்றுகோல்களும், ஒருவருக்கு சக்கர நாற்காலியும் கடந்த வருடம் வழங்கப்பட்டன.

விசேட தேவையுடைய 34 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மிகவும் வறுமைக்கு உட்பட்ட 16 வயதுக்குட்பட்ட மாணவர்களைக் கொண்ட நான்கு குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் யுனிசெப் நிறுவனத்தினால் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டன. மருத்துவ சிகிச்சைக்கான போக்குவரத்துக்கு நிதி வசதியின்றி கஷ்டப்படும் 12 குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் யுனிசெப் நிறுவனத்தினால் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களில் ஏற்பட்ட மழையினால் பாதிப்படைந்த 105 குடும்பங்களுக்கு கூரை விரிப்புகளும் 25 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டன.

பிரதேசத்தைச் சேர்ந்த 142 முதியோருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதுடன் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியம் பெறுவதற்காக 69 பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ளார்கள். கைதடி நவீல்ட் பாடசாலைக்கு பரிமாணநன்கொடையாக 11 லட்சத்து 95 ஆயிரத்து 500 ரூபா கடந்த வருடம் வழங்கப்பட்டது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டில் 408 பேர் பதின்ம வயதில் கர்ப்பம்

வடமராட்சி, ஜன.14
கடந்த 2011ஆம் ஆண்டு 408 பேர் பதின்ம வயதில் கர்ப்பம் தரித்துள்ளதாக யாழ். மாவட்ட செயலகப் புள்ளிவிவரத் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 159 பேரால் அதிகரித்துள்ளது. இந்தப் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த 2010ஆம் ஆண்டு 249 பேர் பதின்ம வயதில் கர்ப்பம் தரித்துள்ளனர். அது 2011ஆம் ஆண்டு 408 ஆக உயர்வடைந்துள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டில் திருமணமாகாமல் 127 பேர் கர்ப்பம் தரித்துள்ளனர்.

நெடுந்தீவு, வேலணை, காரைநகர், மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவில் பதின்ம வயதுக் கர்ப்பம் தரித்தல் எதுவும் இடம்பெறவில்லை.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட பிரதேசத்தில் 35 பேரும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் 70 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 16 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 32 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 34 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 26 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 33 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 22 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 64 பேரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 26 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 50 பேரும் பதின்ம வயதில் கர்ப்பம் தரித்துள்ளனர். இவ்வாறான அதிகரிப்புக்கான காரணங்கள் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களிடம் கேட்டபோது:

எமது சமூகம் தற்போது மாற்றமடைந்து வருகின்றது. நெருக்கமாக இருந்த சமூகக் கட்டமைப்பு உடைக்கப்பட்டதனாலேயே இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

# கோரம் இல்லாமையால் நிறுத்தப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

தென்மராட்சி, ஜன.14
மாதர் கிராம அபிவிருத்திச்சங்க மீள் நிர்வாகிகள் தெரிவுக் கூட்டத்துக்கு கோரம் இல்லாமையால் கூட்டம் தற்காலிகமாக நிறுத்தப் பட்டது.

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத் தெரிவுதொடர்பாக நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டமே இவ்வாறு இடை நிறுத்தப்பட்டது.

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த நவம்பர் 21 ஆம் திகதி நடைபெற்றபோது கலந்து கொண்ட 159 அங்கத்தவர்களில் 13 பேர் கொண்டநிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்க யாப்பின் உப விதிகளின் பிரகாரம் பிரதான பதவிகளில் இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது என்பதை பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் மாகாண கிராம அபிவிருத்தி அலுவலருக்கு முறையிட்டு அதன் பிரதியை சங்கத்துக்கு அனுப்பி வைத்தார்.

இதனால் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தனது பதவியை ராஜினாமாச் செய்தார். புதிய செயலாளர் தெரிவு தொடர்பாக பின்னர் நடைபெற்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில்சங்கத் தலைவி மற்றும் பொருளாளர் தவிர்ந்த ஏனையோர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத் தெரிவுதொடர்பாக நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டமே இவ்வாறு இடை நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் சங்கத்துக்குப் புதியநிர்வாகிகள் தெரிவு தொடர்பாக நேற்று முன்தினம் பிற்பகல் சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளி மண்டபத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கூட்டத்துக்கு பிரதேச செயலரும் வருகை தருவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த நேரத்துக்கு அங்கு வந்த கிராமஅபிவிருத்தி அலுவலர் விசாரித்தபோது தலைவி, பொருளாளர் உட்பட 5 அங்கத்தவர்களே கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து கூட்டத்தை நிறுத்தியதாக கூறிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

# நெல்வயல்களுக்கு இரவில் காவல்

யாழ்ப்பாணம், ஜன.14
அரியாலை கிழக்கில் உள்ள வயல் நிலங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களுக்கு இரவில் விவசாயிகள் காவல் புரிந்து வருகின்றனர்.

இந்தப் பகுதியில் இரவு வேளையில் உலாவும் கட்டாக்காலிக் கால் நடைகள் நெற்பயிரை மேய்ந்து நாசம் செய்கின்றன. இதனையடுத்தே விவசாயிகள் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளபோதும் அவை இரவு வேளைகளில் நடமாடி நெற்பயிர்களை மேய்ந்து நாசம்செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# வந்தது திரவத் தார்

யாழ்ப்பாணம், ஜன.14
வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பவுசர் மூலம் நேற்று முன்தினம் திரவத் தார் எடுத்து வரப்பட்டுள்ளது.

8 ஆயிரம் லீற்றர் திரவத் தார் பவுசர் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் திரவத் தார் கீரிமலை சேந்தாங்குளம் வீதிக்குப் போடப்பட்டு அந்த வீதியைச் சீர் செய் யும் பணிகள் நடைபெறுகின்றன.

இதேவேளை தார்க்கலவை இதுவரை வந்துசேராமையால் பிரதான வீதிகளில் ஏற்பட்ட சேதங்களைச் சீர்செய்ய முடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# வாகனங்களை நிறுத்த இடமின்றி தவிக்கும் நோயாளர்கள்

அளவெட்டி, ஜன.14
தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவரும் நோயாளர் தமது வாகனங்களையோ சைக்கிள்களையோ உரிய பாதுகாப்பு நிலையம் இல்லாததால் பாதுகாப்பாக நிறுத்த முடியவில்லையென்று கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் அங்குள்ள வாகனத் தரிப்பிடங்களில் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்த இடவசதியின்மையால் அவற்றை உரிய பாதுகாப்பின்றியும் நிறுத்திவைக்க குறித்த இடம் ஒதுக்கப் படாததால் வெயிலிலும் மழை யிலும் நிறுத்த வேண்டியுள்ளது.

போக்குவரத்துச் சாதனங்களுக்கு உரிய பாதுகாப்புடன் இடம் ஒதுக்கித் தருவதற்கு வைத்தி யசாலை நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (வ-36)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சோதிலிங்கம் மனோன்மணி

தோற்றம்
23★11★1932

மறைவு
26★12★2010

திதி:ஷஷ்டி

ஓர் ஆண்டு சென்றாலும் எங்கள் இதயத்தை விட்டு
நீங்காத எங்கள் ஆருயிர் அம்மா
பாசமாய் வளர்த்து பாரினிலே போற்ற
வழிகாட்டிய அன்புத் தெய்வமே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்களை மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

462,கே.கே.எஸ்.றோட்,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

சோதிலிங்கம் (கணவர்)
குடும்பம்

(13060)(2-6-7)

## மரண அறிவித்தல்

### டானியல் யேசுதாசன்

நவாலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பம்பலப்பிட்டியில் வசித்தவருமான டானியல் யேசுதாசன் (பொறியியலாளர்) 12.01.2012 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அடைக்கலம் டானியல் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ் சென்றவர்களான சவரிமுத்து - அன்னம்மா தம்பதியரின் மருமகனும், மேரிதிரேசா (லல்லி)யின் அன்புக் கணவரும், அருள்ராஜன், திருமதி ரஜனி புவன், அமல்றஜீவன், கிறிசாத் பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இம்மானுவேல், தம்பிநாயகம், ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் சேவியர் மற்றும் பிரான்சிஸ்கா, றெஜினா, மேரிதிரேசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னத்துரை, யேசுரட்ணம் காலஞ்சென்ற விக்கிரமசிங்க ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும் தகவல்:

இல. 63,மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமதிP.F. சின்னத்துரை
(ஓய்வுபெற்ற அதிபர்)

## மரண அறிவித்தல்



திருமதி. லீலாவதி இராசையா

வட்டு-கிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி இராசையா நேற்றுமுன்தினம் (12.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி. இராசதுரையின் மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி. சிதம்பரப்பிள்ளையின் மருமகளும் பத்மாவதி, காலஞ்சென்ற மாணிக்கசிங்கம் மற்றும் இராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாரதா, ஜெகதா (டென்மார்க்), சிறீகாந்தா, சிவானந்தா (கனடா), வசந்தா (இந்தியா), முகுந்தா (ஆஸ்திரேலியா) ஆகியோரது பாசமிகு அன்புத் தாயும் காலஞ்சென்ற திலீப்குமார், சுரேஸ் (டென்மார்க்), ரேனுஜா (கனடா), சிறீதர் (இந்தியா), சிவானந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரது பாசமிகு மாமியும் நிவேதிகா, நிஷாந்தன், சிவானு, வைஷ்ணவி, ராகுள் ஆகியோரது பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.01.2012) சனிக்கிழமை காலை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 4.00 மணிக்கு கல் கிஸ்சை இந்து மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்
தொடர்பு:-மகன் சிறீகாந்தா (ரவி)

அழகு தொடக்கம் ஆரோக்கியம் வரையிலான சிகிச்சைகள்
சானியா கேபல் கெயர்
262, செம்மணி வீதி, நாயன்மார் கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை
நல்லூர், யாழ்ப்பாணம்.
◆ ஒரே வாரத்தில் உங்கள் கருமைநிறம் நீங்கி அழகிய நிறம்!
முகப்பருக்கள், கரும்புள்ளிகள், சுருக்கங்கள், தழும்புகள், கருவளையம், பள்ளங்கள், உதடு கருமை சிகிச்சைகள்
◆ முடி உதிர்வு, இளநரை, பொடுகு, முடி கருமையாக்கல் சிகிச்சைகள்
◆ பனி காலங்களில் முகம், உடல் வரட்சி தடுப்பதற்கான சிகிச்சைகள்
◆ ஒட்டிய கன்னங்கள் மற்றும் உடல் அழகிற்கான சிகிச்சைகள்
◆ உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்
◆ இடுப்பு, வயிறு, கை, கால், தசை குறைப்பு சிகிச்சைகள்
மேலும் பல சிகிச்சைகள்......
'WE CARE ALWAYS'
முற்பதிவு அவசியம் அழையுங்கள் 0777351954

## மரண அறிவித்தல்

### செல்லப்பா கிருஸ்ணபிள்ளை (மணியம்)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கிருஸ்ணபிள்ளை (12.01.2012) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகதேவியின் அன்புக் கணவரும், விஜியதாசன் (பிரான்ஸ்), நிர்மலதாசன் (பிரான்ஸ்), அகிலதாசன் (கொழும்பு), கமலதாசன் (பிரான்ஸ்), சிவப்பிரியா (வவுனியா), கிருஸ்ணபவிதா (வவுனியா), சிவதாசன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராணி, இராஜேஸ்வரி, ரதிகலா, சரஸ்வதி, சணா, நேசராசா ஆகியோரின் அன்பு மாமனும், பத்மநாதனின் (கிளிநொச்சி) அன்புச் சகோதரனும், விதுசா, சதுசா, விதுசன், கோபிகா, சத்தியா, ரஜிகரன், தேன்மொழி, கிஷாந், கிந்துசன், நிருஜன், நாகவேணனி, தரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவஞானம் (அனலைதீவு) மற்றும் பத்மராணி ஆகியோரின் மைத்துனரும், இரத்தினத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.143/25, லக்சபான வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(13017)(5,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவம் விட்ட தவறே தமிழர் சீர்குலைவுக்குக் காரணம்

**இன்று அரசியல் அதிகாரம் என்ற ரீதியில் காணிகள் சுவீகரிக்கப்படுவது இனங்களுக்கிடையே வீண்முறுகலை ஏற்படுத்தும் என்கிறார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன்.**

மட்டக்களப்பு,ஜன.14

தமிழ் தலைமைத்துவம் அன்று விட்ட தவறு தமிழ் சமுதாயத்தை சீர்குலைத்தது. அதே போல் இஸ்லாமியர் என்று கூறிக்கொண்டிருக்கும் சிலரின் தவறு அனைத்து சமூகத்தையும் சீர்குலைக்க இடம்கொடுக்க கூடாது என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் காணிப்பிரச்சினையில் மூவின மக்களும் சிக்குண்டுள்ளார்கள். இதில் மூன்று இனங்களுக்கும் நியாயம் கிடைக்கப்படவேண்டும். பத்திரிகைகளில் அறிக்கை விடுவதனால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை.மாறாக சமூகங்களுக்கிடையே வீண் மனக்கசப்புக்களே உருவாகும்.

எந்தளவு முஸ்லிம்களின் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றதோ அதே அளவுக்கு தமிழ் மக்களின் காணிகளும் சுவீகரிக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக உறுதியுள்ள தனியார் காணிகள் சுவீகரிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அன்று பயங்கரவாதம் என்ற போர்வையில் காணிகள் பறிக்கப்பட்டன. இன்று அரசியல் அதிகாரம் என்ற ரீதியில் காணிகள் சுவீகரிக்கப்படுவது இனங்களுக்கிடையே வீண்முறுகலை ஏற்படுத்தும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சரினாலும் கட்டியெழுப்பப்பட்டுவரும் இனங்களுக்கு இடையிலான சமாதானம் சீர்குலையும். இதற்கு யாரும் இடம் கொடுக்கக்கூடாது.

ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் கட்டியாள முற்படக்கூடாது. நீண்ட கால எல்லைப் பிரச்சினையின் விளைவாக ஆரையம்பதி, காத்தான்குடி பிரதேசத்தில் இந்து வணக்கஸ்தலங்கள் உடைக்கப்படுவதும் சீர்குலைக்கப்படுவதும் இதன் மூலம் இன உறவை குழப்பி சில அரசியல் தலைமைகள் குளிர்காய முற்படுவதும் எதிர்காலத்தில் உகந்த சூழலை ஏற்படுத்தாது.

ஆரையம்பதி எல்லைப் பிரதேசத்தில் வைக்கப்பட்ட சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை திட்டமிட்ட முறையில் சேதமாக்கப்பட்டுள்ளது. ஒரு சிலரின் தவறு ஒட்டுமொத்த சமூதாயத்தை சீர்குலைக்கும்.

உலகின் சிறந்த வழிகாட்டியாக இருந்த விவேகானந்தரின் சிலை உடைக்கப்பட்டது ஒட்டு மொத்த இந்துக்களின் மனோநிலையில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. (ச)

## விவேகானந்தர் சிலை உடைப்பு; இன முறுகல் ஏற்படலாம்

மருதமுனை, ஜன.14

மட்டக்களப்பு, ஆரையம்பதியில் வைக்கப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் சிலை உடைப்பு இன முறுகலைத் தோற்றுவிக்கும் ஒரு செயலாகவே பார்க்கவேண்டியுள்ளது. இந்தச் சிலை உடைப்பு வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும்.

-இவ்வாறு பாண்டிருப்பு 'அகரம்' சமூக அமையத்தின் தலைவர் எஸ்.துஷ்யந்தன் தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தரின் சிலை உடைப்பு தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு இடையில் இன நல்லுறவு துளிர்விடும் இச்சந்தர்ப்பத்தில் குழப்பவாதிகள் இவ்வாறான சம்பவங்களை ஏற்படுத்துவதை எவரும் அனுமதிக்கக்கூடாது.

சுவாமி விவேகானந்தர் எல்லா சமயத்தவர்களாலும் மதிக்கப்பட்டவர்; எல்லா சமயங்களையும் மதித்து நடந்தவர்; அவருடைய போதனைகள் எல்லா இன மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் அமைந்திருந்தன.

**சுவாமி விவேகானந்தர் எல்லா சமயத்தவர்களாலும் மதிக்கப்பட்டவர்; எல்லா சமயங்களையும் மதித்து நடந்தவர்; அவருடைய போதனைகள் எல்லா இன மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் அமைந்திருந்தன.**

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் அவர் ஆற்றிய உரையொன்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான உலகம் போற்றிய சமயத்துறவியின் சிலை உடைக்கப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

சிலை உடைப்புடன் சம்பந்தப்பட்டவர் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 50 ஆகியும் கவனிப்பு இல்லை


மூதூர், ஜன. 14

ஐம்பது வருடங்கள் கடந்தும் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மூதூர் அல்மினா மகாவித்தியாலயம் இயங்கிவருவது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயர்தரப் பாடசாலைக்கு இருக்கவேண்டிய எந்த அடிப்படை வசதிகளும் இங்கு இல்லை.

ஐம்பது வருடங்கள் கடந்த நிலையிலும் இன்று வரை மூன்று கட்டடங்களோடு மட்டும் இப்பாடசாலை உள்ளது. உயர்தரப் பாடசாலை ஒன்றுக்கு இருக்க வேண்டிய விஞ்ஞான கூடம், அதிபர் அலுவலகம், விளையாட்டு மைதானம், தளபாடவசதி ஆகியன எதுவுமின்றி இப்பாடசாலை காணப்படுகின்றது. சுற்றுமதில்கூட இல்லாத நிலையில் இப்பாட சாலை இயங்குகின் றமை பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

இந்தப் பாடசாலை மீது கிழக்கு மாகாண அரசியல் வாதிகளின் கவனம் ஈர்க்கப்படுமா? என்று மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)



கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்ரமவை கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப் கடந்த புதன்கிழமை சந்தித்துள்ளார்.

## ஹெரோயின் விற்ற பெண் கைது

பதுளை, ஜன.14

பதுளை நகரில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து பதுளைக்கு அண்மித்த பகுதியில் வைத்து இந்தப் பெண் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்படும்போது இவரிடமிருந்து 230 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## துவேஷத்தைத் தூண்டும் செயல்: இந்து மாமன்றம் கண்டனம்

மட்டக்களப்பு,ஜன.14

கல்முனைப் பிரதான வீதியில் ஆரையம்பதி பிரதேச சபையால் நிறுவப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் சிலை கடந்த திங்கட்கிழமை இரவு சேதப்படுத்தப்பட்டமைக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

இந்து மக்களின் சார்பில் இந்நாட்டின் இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பான அகில இலங்கை இந்துமாமன்றம் இந்தச் செயலைக் கடுமையாகக் கண்டிக்கின்றது.

வேதனைகளையும், சோதனைகளையும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் துவேஷ உணர்வுகளால் வாடுகின்ற இந்த நாட்டில் மதத்துவேஷத்தைக் கிளப்பும் வகையிலான இந்த அழிவுச் செயலைச் சகலரும் கடுமையாகக் கண்டித்து மீண்டும் இப்படியான நிகழ்வுகள் நடை பெறாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தரமுயர்த்த தீர்மானம்

அம்பாறை,ஜன.14

அம்பாறை நகரசபை 32 வருடங்களின் பின்னர் மாநகர சபையாகத் தரமுயர்த்தப்படவுள்ளது.

மாநகரசபையாகத் தரமுயர்த்துவதற்கான உரிய பரிந்துரைகளை வழங்கும் பொருட்டு, அமைச்சர் அதாவுல்லாவால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் பரிந்துரை கிடைக்கப்பெற்றவுடன் அம்பாறை நகர சபையை மாநகரசபையாகத் தரமுயர்த்தும் வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் அதாவுல்லா வெளியிடுவாரென அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.(ச)

## பதியாத வர்த்தகர்களை மடக்கும் நடவடிக்கை

மட்டக்களப்பு,ஜன.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்படாது அழகுசாதனப் பொருள்களை விற்பனை செய்வோரைத் தேடிப்பிடிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சோதனை நடவடிக்கைகள் மட்டக்களப்பு நகரிலும் காத்தான்குடியிலும் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சுகாதார திணைக்களத்தின் உணவு, மருந்து பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து பொலிஸாரும் இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின்போது தீங்கு விளைவிக்கும் என்று சந்தேகிக்கப்படக்கூடிய அழகுசாதனப் பொருள்கள் பல கைப்பற்றப்பட்டதாக பொதுச்சுகாதார பரிசோத கர் என்.தேவநேசன் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட இந்த அழகுசாதனப் பொருள்களின் மாதிரிகளை கொழும்பிலுள்ள இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இது குறித்த முடிவுகள் கிடைத்த தும் விற்பனை செய்தவர்கள் மீது வழக்குத் தொடரமுடி யும் என்று அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் உத்தரவுக்கமைய மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச)

## காத்தான்குடியில் டெங்கு அச்சுறுத்தல்; இழுத்து மூடப்பட்டது பாடசாலை

மட்டக்களப்பு,ஜன.14

டெங்கு அச்சுறுத்தலால் காத்தான்குடி அல் - அமீன் வித்தியாலயம் காலவரையறையின்றி கடந்த புதன்கிழமை தொடக்கம் மூடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள இந்தப் பாடசாலை சுகாதார அதிகாரிகள் குழுவொன்றினால் கடந்த புதன்கிழமை திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.இந்தப் பாடசாலையில் பெருமளவிலான டெங்கு நுளம்புகள் மற்றும் டெங்கு நுளம்புக் குடம்பிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இதையடுத்து, குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த மட்டக்களப்பு பிராந்திய தொற்று நோயியல் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி கௌரிபாலன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எம்.சதுர்முகம் மற்றும் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.நசீர்தீன் ஆகியோர் பாடசாலையையும் அதன் சுற்றுப்புற சூழலையும் பரிசோதித்த பின்னர் பாடசாலையை காலவரையறையின்றி மூடுமாறு உத்தர விட்டனர்.

இந்தப் பாடசாலையின் பின்புறமாகக் கட்டப்பட்டு மூடப்படாமலுள்ள கழிவுக் குழியொன்றினுள்ளேயே நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டுள்ளன.அதனை உடனடியாக சுத்தம்செய்து மூடிவிடுமாறு உத்தரவிட்ட சுகாதார அதிகாரிகள், பாடசாலையில் புகை விசிறுவதற்கும் உத்தர விட்டனர்.

இதனையடுத்து, இந்தப் பாடசாலையின் ஆசிரியர்களுக்கு டெங்கு நோய் தொடர்பாக ஆலோசனை வழங்கும் கூட்டம் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.நசீர்தீன் தலைமையில் நடைபெற்றது.

காத்தான்குடி அல் - அமீன் வித்தியாலயத்தின் சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தி சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் பரிசோதனை செய்த பின்னரே இந்தப் பாடசாலையைத் திறக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்று காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நசீர்தீன் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையை சூழவுள்ள ஆறு பேருக்கு டெங்குநோய் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிவலிங்கம் குகதீசன்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் குகதீசன் நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவலிங்கம் - குணவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - சரஸ்வதி (கோண்டாவில்) மற்றும் இளையதம்பி தங்கம்மா (நாவற்குழி) ஆகியோரின் பேரனும், பிரகதீசன் (பிரித்தானியா), சுபதா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தம்பியும், உமா, ஜெயானந்தன் ஆகியோரின் மைத்துனரும், திவ்வியனின் சித்தப்பாவும் மற்றும் காவியனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01 .2012) சனிக்கிழமை அவரது கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று மு.ப.10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (13021)(2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.


# மர்மப் பொருள் வெடித்து மாட்டின் வாய் சிதறியது!

## இறைச்சிக்கு விலைபோனது அது!!

யாழ்ப்பாணம், ஜன. 14

மர்மப் பொருள் வெடித்து காளைமாட்டின் வாய்ப்பகுதி சிதறியது.

இந்தச் சம்பவம் மட்டுவில் வடக்கு புளியடிப்பிட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

காலையில் உழவு வேலை முடிந்து பின்னர் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்தவேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தப் பகுதியில் கடந்தவாரம் இவ்வாறான மர்மப் பொருள்கள் வெடித்ததில் இரண்டு பன்றிகள் முகப்பகுதி முற்றாகச் சேதமடைந்து உயிரிழந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதிமிக்க இந்த மாட்டின் வேதனையைச் சகிக்க முடியாத மாட்டின் உரிமையாளர் இறைச்சிக்காக 'அறாவிலை'க்கு விற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## பொங்கல் தினத்தன்று மக்கள் வங்கி திறப்பு

சாவகச்சேரி, மக்கள் வங்கிக்கிளை தைப் பொங்கல் தினமானநாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை திறந்திருக்கும் என்று வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார். நாளை மறுதினம் வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதால் வாடிக்கையாளர் நலன்கருதி பொங்கல் தினத்தன்று வங்கி திறந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-207)


### வீடு, கட்டடம் வாடகைக்கு தேவை

கொழும்பின் பிரபல கல்வி நிறுவனம் தனது கிளையை யாழ் நகரின் மையப் பகுதியில் திறப்பதற்கு இடம் உடன் தேவை
தொடர்பு: 077 5114873
(13083) (7-6-45)

### ஸ்ரீ கரன் புக் சென்ரர்

புதிய வெளியீடு 2012 சந்திரகுமாரின் சகல வகுப்புக்கான பயிற்சி புத்தகங்கள்
A ì µ 2011
A/L, (A. Level)
பாஸ் பேப்பர் புத்தகங்கள்
விற்பனையாகின்றன

கே.கே.எஸ். றோட், சுன்னாகம்.
ஸ்ரீ கரன் புக் சென்ரர், புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

### அறைகள் வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் இரண்டு அறைகள் தனியான குளியலறை வசதிகளுடன் வாடகைக்குண்டு.
தொடர்புக்கு: 0750424159

### நிலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

யாழ்.மானிப்பாய் வீதி, ஒட்டுமடம் சந்திக்கு அருகில் 4 பரப்பு காணி வாடகை/குத்தகைக்கு உடன் விடப்படவுள்ளது.
தொடர்புக்கு: 0777283811

### வாகனம் விற்பனைக்கு

LX 30 மொடல் ஹயஸ் வாகனம் NANO CX KO இலக்கமுடைய TATA கார் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:
0776007775
0778727624
(சி/7599)(2-6-7)

## Computer Express
Institute of Information Technology

**A/L பரீட்சை முடிவுகள்.....???**
**O/L பரீட்சை முடிவுகளுக்கு காத்திருக்கும் மாணவர்களே !!!**
**அடுத்த காலடிகளை வெற்றிப்பாதையில் நகர்த்துங்கள்**

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

புத்தாண்டில் ஓர் புதிய பரிணாமம்
Certificate in Multi IT
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரிகளால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I 14-01-2012:- 9 am or 3Pm Batch II 18-01-2012:- 9 am or 3Pm
Batch III 20-01-2012:- 9 am or 3Pm Batch IV 21-01-2012:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி




**ஜனவரி 20ம் 21ம் 22ம் திகதிகளில்**
**துரையப்பா விளையாட்டரங்கில்**
**மு.ப 10.00 தொடக்கம் மாலை 07.00 வரை**

**Jaffna International Trade Fair**
**20th - 22nd of January 2012 at the Duraiyappa Stadium**

காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளவை
உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கைத்தொழில் கருத்தரங்குகள் மற்றும் முதலீட்டு அரங்கம்
கட்டிட பொருட்களும் உபகரணங்களும்
விசேட உணவுகள் மற்றும் உங்கள் வீட்டுக்கு தேவையான அனைத்து உபகரணங்களும்

ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED | Co-Organized by FCCISL | Supported by SRI LANKA CONVENTION BUREAU | In Association with CCIY | Partner Country INDIA | Gold Sponsor dimo TECHNOLOGY | Official Banker Indian Bank | Co-Sponsors

## MANIPAL COLLEGE OF MEDICAL SCIENCES, NEPAL

Manipal INSPIRED BY LIFE

**MBBS**
**SPOT ADMISSIONS 2012**



**SPOT ADMISSIONS IN JAN 2012**

**Venue:** Taj Samudra Colombo
**Date:** Jan 14th Sat & 15th Sun 2012
**Time:** 8AM - 6PM

**Venue:** Hotel Topaz, Kandy
**Date:** 16th Jan 2012
**Time:** 10AM - 5 PM

**Featured in the World Health Organisation's Directory of Accredited Medical Schools, MCOMS makes your dream of serving humanity through medicine come true.**

**Highlights**

- Established in 1994 on a 38-acre campus and affiliated to Kathmandu University
- On campus, 825 bed multi-speciality teaching hospital
- Admissions based purely on merit
- Prepares graduates to appear for international licensing examinations - ERPM (Sri Lanka), USMLE (USA & Australia), PLAB (UK) and FMGE (Govt of India) exams among others
- Recognised by The British Columbia & Ontario Student Assistance Program ( BCSAP & OSAP ), Canada, and accredited by the California & New York State Medical Boards
- **Recognized by Sri Lankan Medical Council**
- **MCOMS, Nepal has a record of consistently turning out high pass percentages in the (ERPM) / ACT 16 Exams**

**Eligibility**

- Minimum of credit pass ('C' Grade ) in Physics, Chemistry and Biology at the 'A' level or equivalent examination
- Minimum of credit pass ('C' Grade ) in English at AS/'O' level or equivalent examination

**For more details**
00977 61 440387 / 440600 (Between 08:30 am - 04:30 pm)
Secretary, Sri Lankan Parents Association (SLPA):
Cell No: 0094-773047625
mcoms@manipal.edu.np
www.manipal.edu.np

MANIPAL EDUCATION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துபாய் பயணத்தை நிறுத்தி திரும்பி வந்தார் சர்தாரி !

இஸ்லாமாபாத், ஜன.14

பாகிஸ்தானில் அரசியல் ரீதியான பதற்றநிலை அதிகரித்திருக்கும் நிலையில் அதிபர் சர்தாரி நேற்று முன்தினம் துபாய் புறப்பட்டார். ஆனால் நேற்று திடீரென்று துபாய் பயணத்தை பாதியிலேயே கைவிட்டு நாடு திரும்பியதாகத் தெரியவருகிறது.


பாகிஸ்தான் அரசியலைத் தனது கைக்குள் வைத்துள்ள பெரும் சக்தி வாய்ந்த, பலவீனமான பாகிஸ்தான் அரசுக்கும் இடையே பெரும் மோதல் வெடித்துள்ளது. நாட்டில் ராணுவப் புரட்சி வெடிக்கும் என்ற அச்சம் நிலவுகிறது. அத்துடன் சர்தாரிக்கு எதிராகப் போராட்டங்களும் வெடித்துள்ளன. உடனடியாக சர்தாரியை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று முன்னாள் கிரிக்கெட் வீரரும் அரசியல்வாதியுமான இம்ரான் கான் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் சர்தாரி திடீரென துபாய்க்குப் புறப்பட்டார். ஆனால் அவர் சென்றது. ராணுவப் புரட்சி நடந்தால் அதில் தான் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக என்று பேசப்பட்டது. தற்போது சர்தாரி பாகிஸ்தானுக்குத் திரும்பியதை அடுத்து மீண்டும் பாகிஸ்தான் அரசு மற்றும் ராணுவத்துக்கு இடையே மோதல் வலுக்கும் என்று கருதப்படுகிறது. (ந)



தற்போது சர்தாரி பாகிஸ்தானுக்குத் திரும்பியதை அடுத்து மீண்டும் பாகிஸ்தான் அரசு மற்றும் ராணுவத்துக்கு இடையே மோதல் வலுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜப்பானில் நிலநடுக்கம் தப்பியது அணு நிலையம்



டோக்கியோ,ஜன.14

ஜப்பானின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது.

தெற்கு புகுஷிமாவின் இவாகி பகுதியில் இருந்து 22 கிலோமீற்றர் தொலைவில் கடலுக்குள் 9 மைல் ஆழத்தில் மையமாக கொண்ட இந்த நிலநடுக்கம் 5.7 புள்ளியாகப் பதிவானது. எனினும் அணுமின் நிலையத்துக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்று அதை நிர்வகிக்கும் டோக்கியோ எலக்ட்ரிக் பவர் நிறுவனம் தெரிவித்துள்ளது. சுனாமி ஏற்பட வாய்ப்பில்லை என்று ஜப்பான் புவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் கடந்த ஆண்டு மார்ச் 11ஆம் தேதி பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. ரிச்டரில் 9 புள்ளியாக பதிவான பூகம்பத்தால் சுனாமி அலைகள் தாக்கின. அதில் 19 ஆயிரம் பேர் பலியாகினர். புகுஷிமா நகரமே தரைமட்டமானது. அங்குள்ள அணுமின் நிலையத்தின் 3 அணுஉலைகள் அடுத்தடுத்து வெடித்து சிதறியமை குறிப்பிடத்தக்கது. (ந)

### வானத்தில் பறந்த சுறா மீனால் விமானி அதிர்ச்சி

நியூசிலாந்து விமானி 7 ஆயிரம் அடி உயரத்தில் விமானத்தில் பறந்து கொண்டிருந்தபோது வானத்தில் 5 அடி நீளமுள்ள சுறாமீன் மின்னிக் கொண்டு பறப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

உடனே கிறிஸ்ட்சர்ச் சர்வதேச விமான நியைத்துடன் தொடர்பு கொண்டு விமானத்தைத் தரை இறக்கியவர், வானத்தில் மிதந்து வந்த சுறாமீன் பற்றிய தகவலைத் தெரிவித்தார். ஆனால் விமான நிலைய அதிகாரிகள் அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் அவரை சமாதானம் செய்தனர். காரணம் வானத்தில் மிதந்தது உண்மையான சுறா மீன் அல்ல. அது தானியங்கி மூலம் காற்றில் பறக்கவிடப்பட்ட பொம்மை ஆகும். (ந)



ஈரான் நாட்டு அதிபர் அஹமதி நிஜாத் வெனிசுலா, நிகராகுவா, கியூபா ஆகியநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அதன் ஒருபகுதியாக கியூபாவுக்கு வருகை தந்த அஹமதி நிஜாத்தை வரவேற்கிறார் கியூபா அதிபர் ரசல்.

## கனடாவின் வளர்ச்சிக்கு இரு நகரங்கள் உறுதுணை

கனடாவின் மேற்குப் பகுதியில் உள்ள நகரங்கள் அடுத்த இரண்டாண்டுகளில் நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதார சிறப்புக்கும் உறுதுணையாக விளங்கும் என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

சஸ்கட்டூன், கேல்கரி, எட்மண்ட்டன் மற்றும் ரெஜினா ஆகிய நகரங்கள் விரைவில் முன்னேறி வருகின்றன. வான்கூவரும் இந்த வரிசையில் இடம்பெறுவது உறுதி. ஐந்தாம் இடத்துக்கு ரெஜினாவும், டொரொண்ட்டோவும் போட்டியிடலாம்.

இயற்கை வளம், புலம் பெயர்ந்தோரைக் கவரும் திறம், வீட்டு வசதி, நுகர்வோர் செலவிடும் வாய்ப்பு எனப் பலவகைகளிலும் இந்த நகரங்கள் நன்மை பெறுகின்றன. இவற்றின் மூலம் 40 ஆயிரம் பேருக்குப் புதிதாக வேலை கிடைத்துள்ளது. (ந)

### ஒரு குற்றவாளியைத் தேடும் 13 ஆயிரம் பொலிஸார்

சீனாவில் கொலை, கொள்ளை சம்பவங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த குற்றவாளியைப் பிடிப்பதற்காக 13 ஆயிரம் காவல் துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சீனாவைச் சேர்ந்தவர் ஜெங்காய்குய் என்பவர் கடந்தவாரம் கிழக்கு ஜியாங்சு மாகாணம் நான்ஜிங் நகரில், வங்கியில் இருந்து பணம் எடுத்து வந்த ஒருவரை சுட்டுக் கொன்றுவிட்டு, அவரிடம் இருந்த 31 ஆயிரம் டொலர் பணத்தை கொள்ளையடித்து தப்பினார்.

இதுதவிர மேலும் 6 கொலை மற்றும் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் அவருக்குத் தொடர்பு இருப்பதால், கடந்த 8 ஆண்டுகளாக காவல்துறை அதிகாரிகள் அவரை தேடி வருவதும் விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து அவரை பிடிக்க 13 ஆயிரம் காவல் துறை அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 2 ஹெலிகொப்டர்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளன. பேருந்து நிலையம், ரயில்நிலையம், கடைகள், ஹோட்டல்கள் என அனைத்து இடங்களிலும் அதிகாரிகள் அவரைத் தேடி வருகின்றனர் (ந)

## சுவிற்சர்லாந்தில் புதிய அரச அதிகாரிகள் நியமனம்

சுவிற்சர்லாந்து புதிய அரசு அதிகாரிகளை தற்போது நியமனம் செய்து வருகிறது. வெளியுறவுத் துறை பீற்றர் மாரெரிடம் இருந்து ரோஸியருக்குக்கை மாறியுள்ளது.

ரோஸியர் இதற்கு முன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் குழுத் தலைவராய் பணியாற்றினார். 51 வயது நிரம்பிய ரோஸியர் இனி 150 நாடுகளிலுள்ள சுவிஸ் துதுவர்களின் அலுவலகப் பணிகளை நெறிப்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

இவர் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் மத்திய சமூகப் பாதுகாப்புத் துறையின் தலைவராகவும் இருந்திருக்கிறார். சுவிஸின் வெளியுறவு விவகாரங்களை இவர் நிர்வகிப்பார். பிரஸ்ஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் சுவிஸ் அலுவலகத்தின் தலைவராகவும், ஒன்றியத்தின் சுவிஸ் பிரதிநிதியாகவும் ரொபர்ட்டோ பால்ஸரெட்டி பொறுப்பேற்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சுவிஸ் ஜனாதிபதிக்கான சுழல் பதவியை வகித்து வந்த ஈவ்லின் விட்மெர் சுவிற்சர்லாந்துக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவராகப் பொறுப்பேற்றுள்ளார். (ந)

## உலகின் மிகச் சிறிய நாய்




உலகிலேயே மிக சிறிய வகை நாய் என்ற பெருமையை பெற்றுள்ள லூசி கின்னஸ் சாதனை படைத்துள்ளது. இந்த நாயின் மொத்த எடை 2.5 இறாத்தல் தான்.

# நேபாளத்தின் ‘தெய்வச் சிறுமி’



பருவமெய்தும் வரையில், வாழும் தெய்வமாக ஒரு சிறுமி இருப்பார். அவர் பருவமெய்தியதும் அவருக்குப் பதிலாக இன்னொரு சிறுமி தேர்ந்தெடுக்கப்படுவார்.

நேபாளத்தின் வாழும் பெண் தெய்வம் அல்லது குமாரியாக" இருந்து வரும் 4 வயது சிறுமி காத்மண்டில் நேற்று நடைபெற்ற வருடாந்த சங்கு நாராயண் விழாவில் கலந்து கொண்டார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு, நேபாளத்தின் புதிய வாழும் பெண் தெய்வம் அல்லது குமாரிதேவியாக மூன்று வயது சிறுமியான மதினா ஷாக்யா தெரிந்தெடுக்கப்பட்டார். குமாரியாக இருக்கும் காலத்தில் வருடத்துக்கு 13 தடவைகள் மாத்திரமே வெளியுலகில் பொதுமக்களுக்கு காட்சியளிக்கும் இவர் ஏனைய நாள்களில் ஆலயத்திலேயே தங்கிவிடுவார்.

குமாரி என்றால் புனித மானவர் என்று பொருள். பௌத்தமத இனத்தவர்களால் இவ்வாறு குமாரிகள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். குமாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சிறுமிகள் 32 பிரிவுகளில் தகுதியானவராக இருத்தல் வேண்டும். பருவமெய்தும் வரையில், வாழும் தெய்வமாக ஒரு சிறுமி இருப்பார். அவர் பருவமெய்தியதும் அவருக்குப் பதிலாக இன்னொரு சிறுமி தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் வாழும் தெய்வமாக இருக்கும் காலத்தில் அவருக்கான கல்வி, மனித உரிமைகள் மறுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுவ்தாக எழுந்த முறைப்பாட்டை அடுத்து நேபாளத்தின் மேன்நீதிமன்றம் இந்தச் சிறுமிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படி அரசுக்கு உத்தரவிட்டது.


வாழும் தெய்வமாக இருக்கும் காலத்தில் அனைவராலும் மதிக்கபட்டும், கவனிக்கப்பட்டு வரும் இந்தச் சிறுமிகள் பருவமெய்திய பின்னர் அநாதரவாக விடப்பட்டு விடுவதாகவும், அவர்களைத் திருமணம் செய்துகொள்ள எவரும் முன்வருவதில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் சில பெற்றோர் தமது பிள்ளைகளை வாழும் தெய்வமாகத் தேர்ந்தெடுக்கப்படும் படி ஆலய நிர்வாகத்துக்கு பெருமளவில் அன்பளிப்பு பணம் வழங்குவதாகவும் கூறப்படுகிறது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் பூதவுடலை பாதுகாக்க வடகொரியா முடிவு

**அவரது பிறந்தநாளான பெப்ரவரி 16 ஆம் திகதியை மின்னும் விண்மீனின் நன்னாள் என்று குறிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.**



பியான் கியாங், ஜன.14

மறைந்த முன்னாள் அதிபர் கிம் ஜோங் இல்லின் உடல் தலைநகரான பியான் கியாங்கில் உள்ள அரண்மனையில் என்றென்றும் பாதுகாக்கப்படும் என்று அர செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் கிம் ஜோங் இல்லுக்கு நினைவுத்தூண் எழுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரது பிறந்தநாளான பெப்ரவரி 16 ஆம் திகதியை மின்னும் விண்மீனின் நன்னாள் என்று குறிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனெனில் இவர் காலத்தில் வடகொரியாவில் உருவான ஏவுகணைகளுக்கு மின்னும் விண்மீன் என்று பெயரிடப் பட்டது.

இவரது கட்சி இவர் மீது கொண்டிருக்கும் பெரு மதிப்பின் காரணமாகவும், தீராத ஆசையினாலும் இவரை இந்தக் கட்சியின் உன்னதத் தலைவராகப் போற்ற வேண்டும் என்பதாலும் இவர் உடலைப் பாதுகாக்க முடிவு எடுக்கப்பட்டது.

இவரது தந்தை கிம் ஐஐ சுங் வாழ்ந்து வந்த அரண்மனையை அருங்காட்சியகமாக மாற்றி அவரது பொன்னுடலைப் பாதுகாக்கின்றனர். இதனால் அவர் வடகொரி யாவின் அழியாத அதிபராகப் போற்றப்படுகிறார். தந்தையைப் பாதுகாப்பது போலவே இவரது மகன் கிம் ஜோங் இல் உடலையும் பாதுகாக்க விரும்புகின்றனர் அந்த நாட்டு மக்கள். (ந)

# நாளொன்றுக்கு 40 பேர் சிரியாவில் படுகொலை

வாஷிங்டன்,ஜன.14

சிரியாவில் அரபு லீக் பிரதிநிதிகள் நிலவரத்தை நேரில் பார்வையிடத் தொடங்கிய நாள் முதல், இதுவரை 400 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அங்கு சராசரியாக நாள் ஒன்றுக்கு 40 பேர் வீதம் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் ஐ.நா தகவல் வெளியிட்டுள்ளது.

சிரியாவில் கடந்தாண்டு மார்ச் முதல் அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிராக மக்கள் போராடி வருகின்றனர். அவர்கள் மீது சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதுவரை ஐயாயிரம் பேர் இந்தப் போராட்டத்தில் பலியாகியுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது. இரு வாரங்களுக்கு முன், 165 அரபு லீக் பிரதிநிதிகள் அடங்கிய குழு, நிலவரத்தை நேரில் பார்வையிட சிரியாவுக்குச் சென்றது. இந்நிலையிலும் கூட சிரியா தனது அடக்குமுறையைக் கைவிடவில்லை.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்த 15 நாடுகள் பங்கேற்ற பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் பேசிய அமெரிக்க தூதர் சன்ரைஸ்,

'அரபு லீக் கண் பாணிப்பிலும் சிரியாவில் இதுவரை, 400 பேர் கொல்லப் பட்டுள்ளனர். சராசரியாக ஒரு நாளைக்கு 40 பேர் வீதம் பலியாகியுள்ளனர். அரபுலீக் பரிந்துரைத்த ஒப்பந் தத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம், வன்முறைக்கு முடிவு கட்டுவதற்குப் பதிலாக மேலும் மேலும் வன்முறையில் சிரியா ஈடுபட்டு வருகிறது எனத் தெரிவித்தார். இதற் கிடையில், சிரியா நிலவரம் குறித்து அரபு லீக் தனது அறிக் கையை, இந்த மாதம் 19ஆம் திகதி தாக்கல் செய்யவுள்ளது. (ந)

# ரஷ்ய விண்வெளி ஆய்வு தோல்வி வெளிநாட்டு சதிகளே காரணமாம்

ரஷ்யாவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் சார்பில் கடந்த ஓராண்டாக மேற்கொள்ளப்படும் ஆய்வுப் பணிகள் தொடர்ந்து தோல்வியிலேயே முடிவடைகின்றன. இதன் பின்னணியில் வெளி நாடுகளின் சதி இருப்பதாக ரஷ்ய விண்வெளி ஆய்வுமையத்தின் தலைவர் விளாடிமிர் போபோவ்கின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவால் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கோள் பூமியின் சுற்றுவட்டப் பாதையைத் தாண்டியதும் செயலிழந்து விட்டது. அதுபோல கடந்த நவம்பர் மாதத்தில் போபாஸ் கிரண்ட் திட்டமும் தோல்வியடைந்தது. இதனால் ரஷ்யாவுக்கு ரூ. 600 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டது.

ரஷ்ய ராடார்களின் பார்வையில் இருந்து விண்கலம் கடந்து சென்றதும் அவற்றின் மீது ஏதோ ஓர் அன்னிய சக்தி செயற்படுகிறது என அவர் கூறினார். (ந)

# ஒளிநாடா ஏற்படுத்திய பரபரப்பு

அமெரிக்க கடற்படை வீரர்கள் தலிபான்களின் உடல்கள் மீது சிறுநீர் கழிப்பது போன்று வெளியான ஒளிநாடா பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெளியான ஒளிநாடாவில் சுட்டு வீழ்த்தப்பட்ட தலிபான் தீவிரவாதிகளின் உடல்கள் கீழே கிடக்கின்றன. அவற்றின் மீது அமெரிக்க கடற்படை வீரர்கள் சிறுநீர் கழிப்பது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது இது அமெரிக்காவிலும் ஆப்கன்-பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் செயலைக் கண்டித்து இஸ்லா மிய நல்லுறவுக் குழு அமெரிக் கப் பாதுகாப்பு அமைச்சர் லியோன் பெனட்டாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் போர் விதிமுறைகளை மீறும் வகையில் அமெரிக்க வீரர்கள் செயற்பட்டிருப்பது அநாகரிகமாக கண்டிக்கத்தக்க வகையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி பென்டகன் செய்தி தொடர்பாளர் ஜோன் கிர்பி மற்றும் கடற்படை செய்தித் தொடர்பாளர் ஸ்டீ வர்ட் அப்டன் தெரிவித்ததாவது;

காட்சியை யார் ஒளிப் பதிவு செய்தது ?யார் இணையத்தளத்தில் வெளியிட்டது? என்பது தெரியவில்லை. போர் விதிமுறைகளில் மிகவும் கண்ணியம், நேர்மையைப் பின்பற்றும் நாடு அமெரிக்கா. அதை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இணையத்தளத்தில் வெளியான காட்சி உண்மையாக இருக்கும் பட்சத்தில் பாரபட்சமின்றி அமெரிக்க வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்றார்.

ஒளிநாடா காட்சி மற்றும் அதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அமெரிக்க வீரர்கள் தொடர்பாக அமெரிக்கக் கடற்படையின் குற்றவியல் புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்த உத்தரவிடப் பட்டுள்ளது. (ந)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வங்கதேச பிரதமருக்கு முனைவர் பட்டம்



டில்லி,ஜன.14

இந்திய மாநிலமான திரிபுரா மத்திய பல்கலைக்கழகம் வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா அரசு முறைச் சுற்றுப் பயணமாக இந்திய மாநிலம் திரிபுராவுக்கு வந்துள்ளார்.


இதையடுத்து திரிபுரா மத்திய பல்கலைக்கழகம் வங்க தேசப் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

ஆசிய துணைக்கண்டத்தில், ஜனநாயகம் மற்றும் அமைதிக்கு பெரும் பங்காற்றியதை கௌரவிக்கும் விதமாக முனைவர் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக திரிபுரா மத்திய பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இந்தியத் துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி, வங்க தேசப் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு முனைவர் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார். (வ)

# சிங்களவருக்கு வாரி இறைத்து விட்டு தமிழக மக்களுக்கு சோளப்பொரியா?

## சீமான் குற்றச்சாட்டு



**மத்திய குழுவின் மதிப் பீட்டின் அடிப் படையில் 50 சதவீதத்தை இடைக் கால நிவாரணமாக உடனடியாக வழங்க மத்திய அரசு முன்வரவேண்டும்**

சென்னை,ஜன.14

இலங்கையில் சிங்களவர்கள் வாழும் பகுதிகளில் நிறைவேற்றப்படும் ரயில்வேத் திட்டங்களுக்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளிக்கும் இந்திய மத்திய அரசு, தனது நாட்டில் இயற்கை பேரிடரால் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்காக வெறும் 500 கோடியை மட்டும் ஒதுக்கியுள்ளதாக சீமான் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்த அறிக்கையில் தெரிவித்ததாவது:

பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்தைப் போக்க உடனடி நிவாரணமாக ரூ.2,000 கோடியை அளித்து, அதனை பொங்கலுக்கு முன்னர் மக்களைச் சென்றடையும் வகையில் வழங்க வேண்டும்.

தானே புயலால் கடும் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட மத்திய அரசு அறிவித்துள்ள ரூ.500 கோடி இடைக்கால நிவாரணம் மிகவும் குறைவானதாகும்.


தானே புயல் ஏற்படுத்திய பாதிப்பால் கடலூர், விழுப்புரம், நாகை உள்ளிட்ட பல மாவட்டங்களில் வாழ்ந்துவரும் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பும், ஏழை, எளிய மக்களின் வாழ்விடங்கள் புயல், மழையால் சிதைவுக்குள்ளாகியுள்ளதும் அங்கு இயற்கை ஏற்படுத்திய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று கூறி, மொத்த இழப்பு 5 ஆயிரத்து 175 கோடி ரூபாய் என்றும், அதனை முழுமையாக வழங்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை வைத்துள்ளது.

இந்த நிலையில், மத்திய அரசு இடைக்கால நிவாரணமாக வெறும் ரூ.500 கோடியை அறிவித்திருப்பது ஏமாற்றமளிக்கிறது.

மத்திய குழுவின் மதிப்பீட்டின் அடிப் படையில் 50 சதவீதத்தை இடைக்கால நிவாரணமாக உடனடியாக வழங்க மத்திய அரசு முன்வரவேண்டும்.

- என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# முன்பிணை கோருகிறார் சுப்பிரமணிய சுவாமி



**மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் தூண்டுதலால் என்னை டில்லி பொலிஸார் கைதுசெய்ய வாய்ப்புள்ளது**

டில்லி, ஜன.14

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் தூண்டுதலால் என்னை டில்லி பொலிஸார் கைதுசெய்ய வாய்ப்புள்ளது. எனவே முன்பிணை தர வேண்டும் என்று கோரி டில்லி உயர்நீதிமன்றத்தில் ஜனதாக் கட்சித் தலைவரும், 2ஜி வழக்கைத் தொடர்ந்தவருமான சுப்பிரமணிய சுவாமி மனு தாக்கல் செய்துள்ளார்.

அண்மையில் 2ஜி வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் ப.சிதம்பரத்துக்கு எதிரான ஆவணங்களை சுவாமி தாக்கல் செய்தார் என்பது நினைவிருக்கலாம். மேலும் இந்த வழக்கில் ப.சிதம்பரத்திற்கு எதிராகவும் அவர் சாட்சியம் அளிக்கவுள்ளார்.

சுவாமி தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் ப.சிதம்பரம் நிதியமைச்சராகவும், ராசா தொலைத் தொடர்புத் துறை அமைச்சராகவும் இருந்த போது இருவருக்கும் இடையே ஸ்பெக்ட் ரம் ஒதுக்கீடு தொடர்பாக நடந்த கடிதப் பரிவர்த்தனை உள்ளிட்டவற்றை இணைத்துள்ளார். மேலும் இந்த வழக்கில் ப.சிதம்பரத்தையும் ஒரு குற்றவாளியாகச் சேர்க்க வேண்டும் என்று நீதிமன் றில் கோரிக்கை விடுத்துள்ளார் சுவாமி. தனது வழக் குக்கு வலுச்சேர்க்கும் வகையில், எதிர்வரும் 21ஆம் திகதி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் வாதிடவும் உள்ளார்.

இந்தப் பின்னணியில் தான் அவர் முன்பிணை கோரி மனு தாக்கல் செய்துள்ளார். (வ)



தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில முதல்வர் ஷீலா தீட்சித் மத்திய குடும்ப நலத்துறை அமைச்சர் குலாம்நபி ஆசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அணை நீரிலும் மின்சாரத்திலும் சம உரிமை கேட்கிறது கேரளா

முல்லைப் பெரியாறு அணை நீரிலும், அதன் மூலம் உற்பத்தி செய்யப் படும் மின்சாரத்திலும் தமக்கும் சம உரிமை வழங்கப் படவேண்டும் என்று கேரள அரசு, முன்னாள் நீதிபதி ஆனந்த் தலைமையிலான உயர்மட்டக் குழுவிடம் பிரமாண பத்திரம் சமர்ப்பித்துள்ளது.

முல்லைப் பெரியாறு பிரச்சினையை, உச்ச நீதி மன்றம் முன்னாள் நீதிபதி ஆனந்த் தலைமையிலான உயர்மட்டக் குழு விசாரித்து வருகிறது. இந்தக் குழுவிடம், கேரள அரசு சார்பில், வழக்கறிஞர் ரமேஷ்பாபு நேற்று முன்தினம் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

முல்லைப் பெரியாறு அணைக்கட்டு பகுதியில் சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கவும், நதியில் மீன்களை வளர்க்கவும் கேரள அரசுக்கு உரிமை உள்ளது.

அணை நீரைப் பங்கீடு செய்வது குறித்து உச்ச நீதி மன்றம் முடிவு எடுக்கலாம். அணை நீரைப் பயன்படுத்தி, தமிழகம் உற்பத்தி செய்து வரும் மின்சாரத்தில் கேரளாவுக்கும் பங்குண்டு.

அணை பலமற்றது என்பதற்கான தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆதாரங் கள் இல்லை என்றாலும், அணையைச் செயற்படாமல் செய்ய கேரளாவுக்கு அதிகாரமுண்டு.

இந்த விடயத்தில், உச்ச நீதிமன்றம் நியாயமான முடிவு எடுக்க வேண்டும். - என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

# சமூக வலைத் தளங்களுக்கு எச்சரிக்கை

டில்லி, ஜன.14

சமூக வலைதளமான பேஸ்புக், மற்றும் கூகுள் இணையதள்ங்களில் உள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்களை நீக்குமாறு டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக நீதிபதி கூறியதாவது :

வலைதளங்கள் அவற்றில் உள்ள ஆட்சேபனைக்குரிய கருத்துக்களை உடனடியாக நீக்கவேண்டும். அவ்வாறு உடனடியாகச் செய்யவில்லை என்றால் சீனாவை போல பேஸ்புக், கூகுள் இணைய தளங்களை தடை செய்ய நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# 30,000 கோழிகளை அமுக்க முடிவு



இந்திய மாநிலமான ஒரிசாவில் பறவைக் காய்ச்சல் நோய் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக 30 ஆயிரம் கோழிகளை அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக மாநில கால்நடைத் துறையைச் சேர்ந்த கோபால் திரிபாதி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் அறிவுரைப்படி செயற்பட்டு வருவதாகவும், கெரங்கா சுற்று வட்டார பகுதிகளில் இரண்டு பறவகள் இறந்துள்ளதாகவும் அதன் மூலம் எச்5 என்1 வகை வைரஸ் நோய்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகள் பத்திரமாக வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பறவையினங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 50 கால்நடை வைத்தியர்கள் உட்பட 120 பேர் இதற்கான பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் திரிபாதி தெரிவித்துள்ளார். (வ)

# சிலைகளை மூடுவது நியாயமற்றது

லக்னோ, ஜன.14

உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதியின் சிலைகள் மற்றும் யானைச் சிலைகளை மூட, தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது நியாயமற்றதாகும் என்று பகுஜன் சமாஜ் கட்சி தெரிவித்துள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சதீஷ் சந்திர மிஸ்ரா கூறியதாவது:

பகுஜன் சமாஜ் கட்சியின் நினைவுச் சின்னத்தை மறைப்பது என்ற முடிவு சமாஜ்வாதி கட்சி, காங்கிரஸ், பாரதீய ஜனதா ஆகியவைகள் எடுத்த முடிவு. இது தலித்துகளையும் பிற்படுத்தப் பட்டவர்களையும் ஏமாற்றும் செயல் ஆகும்.

இந்த முடிவு நியாயமற்றதும் அரசியலமைப்புச் சட்டத்தையும் மீறியதுமாகும். இதேபோன்ற முடிவுகள் ஏனைய கட்சிகளுக்கு எதிராகவும் எடுக்கவேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் 'எங்கள் யானை' மீது ஆட்சேபனை கூறியது, சமாஜ் வாதி கட்சியின் சின்னம் சைக்கிள், பா.ஜ.க. தாமரை, மற்றும் ராஷ்டிரிய லோக் தளம் கைபம்ப் ஆகியவை குறித்தும் ஆட்சேபனை தெரிவித்திருக்க வேண்டும். கை பம்ப் அரச செலவுகளில் எல்லா இடங்களிலும் நிறுவப்படுகிறது.

மாயாவதி தலித்துகளின் மகள். அவர் 4 முறை முதல்வராக இருந்துள்ளார். பகுஜன் சமாஜ் கட்சியின் யானை சின்னம் வாக்காளர்களை எந்த வழியிலும் பாதிக்காது. - என்றார் அவர். (வ)

# தீவிரவாத எதிர்ப்பு நிலையம் அமைக்க அமைச்சரவை ஒப்புதல்

டில்லி, ஜன.14

இந்தியாவில் பாதுகாப்புக்கான அமைச்சரவை குழு தீவிரவாத எதிர்ப்பு நிலையம் அமைக்க நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் பா.சிதம்பரத்தால் தீவிரவாத எதிர்ப்பு மையம் அறிமுகம் செய்யப்பட்டது.

பின்னர் இந்த அமைப்பு சில [illegible]களால் 2 வருடங்களாக நிலுவையில் இருந்து வந்தது. இந்த நிலையில் பாதுகாப்புக்கான அமைச்சரவை குழு தீவிரவாத எதிர்ப்பு நிலையம் அமைக்க நேற்றுமுன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த அமைப்பானது தகவல்களை ஆராய்ந்து ஒப்பிட்டுப்பார்த்து நடவடிக்கை எடுக்கத்தக்க புலனாய்வுத் தகவல்களை மொழி பெயர்க்கும் பணியை மேற்கொள்ளும்.

மேலும் இந்த அமைப்பு உள் துறை அமைச்சகத்தின் கீழ் தனித்து செயற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

### கேள்வி அறிவித்தல்
### பாவித்த கூரை ஓடுகள்

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் பாவித்த கூரை ஓடுகள் விற்பனை செய்யப்படவுள்ளன

முதலாம் தர கூரை ஓடுகள் - அண்ணளவாக - 26000
இரண்டாம் தர கூரை ஓடுகள் - அண்ணளவாக - 8000

எனவே, இவற்றைக் கொள்வனவு செய்யவிரும்புவோர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவில் ரூபா 100 செலுத்தி 16.01.2012 இல் இருந்து விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாக எமது பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ 25.01.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் இடவேண்டும். குறிப்பிட்ட திகதி நேரத்திற்கு பிந்திக்கிடைக்கும் எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

மேலதிக விவரங்களை நேரடியாகவோ அல்லது 0243244029 என்ற தொலைபேசி யூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
முல்லைத்தீவு. (சி/7598) (45-7-6)

## வாகன விற்பனை

57 - xxxx கயஸ் டொல்பின் G.L. மொடல் நீளம், 4 கதவு.
தொடர்பு:
0750394091
(13010)(2-6-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் தலைவர்
பேராசிரியர் ப.சிவநாதன்
அவர்களின் அன்பு மாமா
பொன்னையா
சிறிநடராஜ்
அவர்கள் சிவபதமடைந்தமையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செயலாளர்,
ஆளுநர் சபை உத்தியோகத்தர்கள்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.
(சி/7594)(2-7)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகில் கே.கே.எஸ். பிரதான வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: 0783016906

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## நன்றி நவில்கின்றோம்

கலாபூஷணம் விருது பெற்ற சிற்பக் கலைஞர் கோண்டாவில் தாவடியூர் விஸ்வ பிரமஸ்ரீ சின்னத்தம்பி நாகராசா அவர்களைப் பாராட்டி 10.01.2012 அன்று தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் பாராட்டு விழாவிற்கு வருகை தந்த இசைக்கலைஞர்கள், கலாரசிகர்கள், அந்தண சிரேஷ்டர்கள் மற்றும் அருளுரை வழங்கிய நல்லை ஆதீனகுருமணி, ஆசியுரை வழங்கிய சிவாச்சாரியார்கள் பாராட்டுரை வழங்கிய நல்லூர் பிரதேச செயலர் மற்றும் கலாசார பிரிவைச் சேர்ந்தோர், தலைமை வகித்த கோப்பாய் சிவம் அவர்களையும் இசைவிருந்து அளித்த இந்திய, இலங்கைத் தவில் நாதஸ்வரக் கலைஞர்களையும், விழா நாயகர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டபோது பூரண கும்ப மரியாதைகள் செய்து உபசரித்த எங்கள் ஊர் அன்புள்ளங்களுக்கும் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்த அன்புள்ளங்களுக்கும் பாராட்டு மடல் வழங்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இப்பெருவிழாவை ஏற்பாடு செய்து வெகு சிறப்பாக எம்மைக் கௌரவித்து ''பேரீ வாத்ய விஸ்வ பிரமன்'' எனும் விருதும் வழங்கி மகிழ்வித்த அகில உலக தவில் நாதஸ்வர கலைஞர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
(13061)(2-6-7)

கலாபூஷணம் சி.நாகராசா குடும்பத்தினர்.




## முதலாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஜனார்த்தனன் - சுகந்தினி தம்பதியினரின் செல்வப் புதல்வன் சுவேஸ்
தனது பிறந்தநாளை இன்று (14.01.2012) சனிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும் செல்வன் சுவேஸ் அவர்களை அப்பா ஜனார்த்தனன்,
அம்மா சுகந்தினி, அண்ணன் ஜெனிஸ் மற்றும் அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, தாய்மாமன், மாமி, அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார் மற்றும் மச்சான், மச்சாள்மார் அனைவரும்பல்லாண்டு காலம் சீரும், சிறப்பும் பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்.
அப்பா- ஜனார்த்தனன்,
அம்மா - சுகந்தினி,
அண்ணா - ஜெனிஸ்.

நடைபெறும் இடம்:
மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.
[12856][2-6-7]

## திருமண சேவை

★ 65 இல் பிறந்த 7இல் செவ்வாய் 30 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று வந் துள்ள மணமகனுக்கு படித்த, அழகான மண மகள் தேவை (சீதனம் எதிர்பார்க்கப்பட மாட் டாது).

★ 83 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 25 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

★ 64 இல் பிறந்த 4இல் செவ்வாய் 35 பாவ முடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மண மகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது).

★ 28 வயது உடைய செவ்வாய் இல்லாமல் 15 பாவமுடைய பல் டாக்டர் மணமகளுக்கு படித்த லண்டனில் உள்ள மணமகன் எதிர் பார்க்கப்படுகின்றது.

★ 29 வயது உடைய செவ்வாய் இல்லாமல் 30 பாவமுடைய பல் டாக்டர் மணமகளுக்கு டாக்டர் மணமகன் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
171/7, மனோன்மணி அம்மன்கோயிலடி, நல்லூர்.
18.01.2012 இல் இருந்து -
இல.320, கோயில் வீதி, நல்லூர்.
இதில் தொடர்பு கொள்ளவும்.
T.P 077 6070862
(13053)(45-7-6)



## சித்தன்கேணி
அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய
வருடாந்த தைப்பொங்கல்
பெருவிழா - 2012

தைப்பொங்கல் நாளை (15.01.12) ஞாயிற்றுக்கிழமை பெருவிழாவும், 12 மணியளவில் தீ மிதிப்பு வைபவமும் இடம்பெறும்

★ கிரியைகளை சிறப்புற நிகழ்த்துபவர்
ஆலய பிரதம சித்த ஞானகுரு இந்திரன் ஐயா

★ சைவச் சொற்பொழிவு
அருளாசியுரை
ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

விடயம்- ''உலகனைத்தும் சக்தி மயம்''
நிகழ்த்துபவர் - சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர், செ. கந்த சத்தியதாசன் M.A. J.P (வலிகாம ஆசிரிய ஆலோசகர்)

விடயம் - ''சைவநெறி பண்பு நெறி''
நிகழ்த்துபவர் - சைவப்புலவர்- க. நித்திய தசீதரன்

விடயம்: - ஆலய வழிபாடு
நிகழ்த்துபவர் - இளஞ்சைவப் புலவர் - கைலைநாதன் (ஆசிரியர்)

நன்றியுரை - சதாசிவம் ஐங்கரன் M.A., J.P

விளம்பர அனுசரணை: Subra (14) கல்வி நிறுவனம்
சித்தன்கேணி: கிளை - வட்டுக்கோட்டை.
(13008) (45-7-6)

## அகவை நூறில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




### வேலுப்பிள்ளை தம்பு (14.01.1912)
### இடைக்குறிச்சி வரணி

வளம் கொளிக்கும் வரணிப்பதி இடைக்குறிச்சி கிராமமதில்
கிடைக்கரிய பொக்கிசமாய் தம்பு மகான் வாழ்கின்றார்
மாறாப்பலத்துடனும் நூறாண்டு வாழும் செம்மல்
பிள்ளை, பேரர், பூட்டரோடு பேறான அகவை நூறை
உவகையோடு கொண்டாடிட உலகமே வாழ்த்தட்டும்
அப்பாவே எங்கள் அன்பான மாமாவே ஆயிரம் கோடி வாழ்த்துக்கள்
பாட்டப்பா எங்கள் பூட்டப்பாவே பணிவோடு வாழ்த்துகின்றோம்
பதினான்காம் தேதி இன்று உங்கள் வாழ்வு பத்தரைமாற்று தங்கமையா
பங்கமில்லாத் தங்கமே இனும் பத்தாண்டு வாழ வாழ்த்துகின்றோம்
வாழி நல் வளத்தோடு வாழி உடல் நலத்தோடு நீடூழி வாழி! வாழி!.

(13006)(2.6.7)

பிள்ளைகள், மருமக்கள்
இடைக்குறிச்சி, வரணி. பேரப்பிள்ளைகள்.

## G.C.E (O/L) 2011 மாணவர்களுக்கான
# விசேட சலுகைகளுடன்
### புதிய பிரிவுகள் ஆரம்பம்



**14.01.2012**
சனிக்கிழமை - காலை 10 மணி

- ICDL - INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE
- e - Citizen
- Diploma in MS Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Hardware Technology
- Certificate course in MS Office
- Certificate course in Photoshop CS 4
- Certificate course in Photoshop CS 4

மேலதிக விவரங்களுக்கு :

**IT ISLAND GATEWAY CENTRE**
*Center for Information & Communication Technology*
347, Kasthuriyar Road, Jaffna - Phone : 021 567 5555 / 021 222 7967

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரத்தில் சிலவற்றை பகிர்ந்து கொள்வதற்குத் தயார்

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு காணி மற்றும்பொலிஸ் அதிகாரங்களை கோருகிறது. இந்தநிலையில் பேச்சுக்களில் இருந்து இடையில் விலகிச்செல்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்கிறார் கெஹலிய ரம்புக்வெல.

கொழும்பு,ஜன.14

பொலிஸ் அதிகாரத்தின் சில விடயங்களை மாத்திரம் மாகாணசபைகளுக்கு பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் பேச்சுக்களில் பங்கேற்பது அவசியம்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் அரசுக்கு பிரச்சினைகள் உள்ளன. அதுதொடர்பில் பேச்சுக்களை நடத்த அரசு தயாராக உள்ளதாக அண்மையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கோருகிறது. இந்த நிலையில் பேச்சுக்களில் இருந்து இடையில் விலகிச் செல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியத்தல்ல. திம்பு பேச்சு முதல் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்கின்றன

பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கத் தயார். பொலிஸ் அதிகாரங்களில் சில பிரிவுகளில் மாத்திரம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைய பகிர்வுகளை மேற்கொள்ள முடியும் - என்றார். (ச)

# லசந்த கொலைவிசாரணையை நடத்துவதில் என்ன தயக்கம்?

## முடியாவிடில் பொறுப்பை ஏற்க வேண்டும்

விசாரணை நடத்தி நியாயம் வழங்க அரசுக்கு உண்மையிலேயே விருப்பம் இருந்தால் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவது கடினமானதல்ல என்றார் ரணில்

கொழும்பு,ஜன.14

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்த முடியாவிட்டால் அதன் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் குற்றவாளிகளை கைது செய்யக் கூடிய ஆற்றல் இலங்கைப் பொலிஸாருக்கு காணப்படுகின்றது. இந்தநிலையில் லசந்த படுகொலையாளிகளைக் கைது செய்வதற்கு ஏன் முடியவில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதாக அரசு அறிவித்துள்ளது.

எனவே காலத்தைக் கடத்தாமல் உடனடியாக இந்தப் பரிந்துரைகளை நடை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

லசந்த படுகொலைச் சம்பவம் தொடர்பில் தேவைக்கு அதிகளவான சாட்சியங்கள் காணப்படுகின்றன.

வெளிநாட்டில் வசித்து வந்த குமரன் பத்மநாதனை பொலிஸார் கைது செய்திருந்தனர். எனவே லசந்த படுகொலையாளிகளை கைது செய்வது சிரமமாக அமையாது. விசாரணை நடத்தி நியாயம் வழங்க அரசுக்கு உண்மையிலேயே விருப்பம் இருந்தால் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவது கடினமானதல்ல- என்றார். (ச)

# யாரிடமும் மன்னிப்புக் கோரமாட்டேன்

கொழும்பு,ஜன.14

எந்தவகையிலும் தவறிழைக்காத தான் யாரிடமும் மன்னிப்பு கோரப்போவதில்லை என்று இடித்துரைத்த அமைச்சர் மேர்வின் சில்வா, மிருகபலிக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று சூளுரைத்துள்ளார்.

எந்தவொரு கடவுளும் இரத்தப் பலியைக் கோரவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், மூட நம்பிக்கையுடையவர்களே மிருகங்களைப் பலி கொடுக்கின்றனர் என்றும் கூறினார்.


முன்னேஸ்வரம் காளி கோயிலில் நடைபெறவிருந்த மிருகபலி பூஜையைத் தடுத்து நிறுத்தி, ஆலய வளாகத்தில் அடாவடித்தனத்தில் ஈடுபட்டதாலேயே காளியின் சாபம் அமைச்சர் மேர்வினை வாட்டி வதைக்கின்றது என்று காளி கோயில் பூசகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், இது தொடர்பாக அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்குத் தெரிந்தளவில் எந்தவொரு மதமோ அல்லது கடவுளோ இரத்தப் பலியைக் கோரவில்லை.

மிருகபலியை நான்தடுத்து நிறுத்தி, உயிர்களைக் காப்பாற்றியுள்ளேன் -என்றார்.(ச-சி)



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பிறந்த தினத்தை முன்னிட்டு கட்டுகஸ்தோட்டை ஸ்ரீ மஹீந்திராராம விகாரையின் பரிபாலன சபையினர் புத்தர் சிலையொன்றை அன்பளிப்புச் செய்தனர்.

# பல்கலைக்கழக பிரச்சினை குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

கொழும்பு,ஜன.14

பல்கலைக்கழகங்களில் குழப்பத்தை ஏற்படுத்த சில திட்டமிட்ட குழுக்கள் முயற்சி செய்து வருகின்றன. அவ்வாறான குழுக்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் பல்கலைக்கழக மாணவர்களை ஆத்திரமூட்டி அதன் மூலம் கிளர்ச்சிகளை வெடிக்கச் செய்ய சிலர் முயற்சிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சப்ரகமுவ, றுகுணு, ஜயவர்தனபுர, பேராதனை, ரஜரட்ட மற்றும் களனி போன்ற பல்கலைக்கழகங்களில் இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழகங்களில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சி செய்பவர்கள் பற்றி தகவல்கள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ச)

# பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில் வழுங்க முடியாது

கொழும்பு,ஜன.14

பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக அரசால் தொழில்களை வழங்க முடியாது என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

என்கோ 2012 கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் இருபதாயிரம் மாணவர்கள் வருடாந்தம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவதாகவும் அதே அளவிலான மாணவர்களுக்கு தொழில்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை இல்லை என்று அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அவர்களுக்கான ஜீவனோபாய தொழில் மார்க்கங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய தேவையுள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் அவர்கள் கொடிகளை ஏந்தியவாறு தொழில் வழங்கக்கோரி வலியுறுத்தி ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதற்கான சூழல் உருவாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, அரசியல் துறையிலுள்ள பலர் தமது அதிகாரத்தை மேம்படுத்திக்கொள்வதற்காக அத்தகைய நபர்களை இணைத்துக்கொண்டு பேரணிகளை நடத்துவதற்கு முனைவதாக அவர் தெரிவித்தார். (ச)

# புதையல் தோண்டிய மூவர் கைது

கொழும்பு,ஜன.14

நிக்கவரெட்டிய - கல்லேவ - சுதிரகம பிரதேசத்தில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டதாக நிக்கவெரட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நிக்கவரெட்டிய நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

# இலங்கையின் விமான சேவை ஆசியாவில் 4 ஆம் இடத்தில்

## சர்வதேச மட்டத்தில் முதல் பத்துக்குள்

கொழும்பு,ஜன.14

இலங்கை விமான சேவை சர்வதேச தரப்படுத்தலில் முதல் 10 ஆம் இடத்துக்குள் வந்துள்ளதுடன் ஆசியாவில் 4 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளதாகவும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் இந்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறுகையில்:

இலங்கை விமான சேவை உலக தரப்படுத்தலில் முதல் 10 இடத்துக்குள் வந்துள்ளது. எனினும் அது இன்னும் உத்தியோகபூர்வமான அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை ஆசியாவில் நான்காம் இடத்துக்கு வந்துள்ளமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொரியா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகள் ஆசியாவில் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களை வகிக்கின்றன. ஜப்பானுக்கு அடுத்ததாக இலங்கை உள்ளது. இந்த தரப்பட்டியலில் 34 நாடுகள் இடம்பெறுகின்றன.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகருக்கும் தென் கொரியாவின் சியோல் நகருக்கும் புதிதாக இலங்கையின் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆசியாவின் விமானப் போக்குவரத்தின் கேந்திர நிலையமாக இலங்கையை உருவாக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் திட்டத்துக்கமைய தற்போதுள்ள ஸ்ரீலங்கன் விமான சேவைக்குரிய 21 விமானங்கள் சுமார் 27 விமானங்களாக அதிகரிக்கப்படும்.

தற்போதுள்ள இரண்டு சீ பிளேன்களுடன் மேலும் மூன்று சீபிளேன்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படும்.

ஸ்ரீ லங்கன் விமான சேவைக்குரிய ஏ 330 ரக மற்றும் ஏ 340 ரக பழைய விமானங்கள் அனைத்தும் நவீன மயப்படுத்தப்படும். ஏ 330 ரக ஏ340 ரக விமானங்களுக்குப் புதிதாகக் கொள் முதல் செய்யப்படும். தற்போது சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள ஏயார் டெக்ஸி சேவை தினமும் 14 சேவைகளை நடத்துகின்றது.

ஏனைய நாடுகளுடன் விமான சேவை நடத்தும் போது ஏற்படும் போட்டியைச் சமாளிக்கும் விதத் தில் மத்திய கிழக்கு நாடு களுக்கான சேவையை விஸ்தரிக்கும் தேவையும் ஏற்பட்டுள்ளது. எனவே மத்திய கிழக்கில் சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கு ஸ்ரீலங்கன் விமான சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வின் போது ஹம்பாந்தோட்டை மத்தல விமான நிலையத்தின் நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படுவது நவீன தொழில்நுட்ப உதவியுடன் ஊடகவியலாளர்களுக்கு நேரடியாகக் காண்பிக்கப்பட்டது. இவ்வாறு காட்டப்படுவது இதுவே முதற் தடவையாகும். (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா
# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உறவினர்கள் சிலருடன் சேர்ந்து வெளியூர் பயணங்கள் செல்வீர்கள். பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்ட வேண்டும். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். சோம்பல் ஆள்கொள்ளும்.

**இடபம்:** நீங்களாக சில வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள். அயலாரின் பொறாமைகளுக்கு ஆள்படலாம். பெண்கள் குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும். பொறுப்பில்லாமல் செயற்படும் சிலரைக் கண்டித்துப் பேசுவீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.

**மிதுனம்:** காலை முதல் பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் எதிர்பார்த்த நேரத்தில் வராத பணவரவு ஒன்று இன்று வரலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். தவறு என்று தெரிந்தும் துணிச்சலாக சில காரியங்களைச் செய்வீர்கள்.

**கடகம்:** எங்காவது வெளியில் செல்லும் போது சில பொருள்களை மறந்துவிட்டு சென்று அவதிகளுக்கு ஆளாகலாம். அசட்டுத் துணிச்சலில் சில வேலைகளில் இறங்கி விட்டு பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள், உணவுப்பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். வழக்கத்துக்கு மாறாக நீண்ட நேரம் தூங்கலாம்.

**சிங்கம்:** மனதிற்கு சந்தோஷம் தரும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். உங்களின் திறமையான செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத்தேடி வரலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**கன்னி:** விரும்பிய ஒரு பொருளை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். மருந்துப் பொருள்கள் வாங்க கணிசமான பணத்தை செலவிடலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கும் சூழ்நிலை உருவாகலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**துலாம்:** புத்திசாலித்தனம் வெளிப்படும். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். குடும்ப உறுப்பினர்களுடன் சந்தோஷமாக, பொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும். நீங்கள் நினைத்தது போல சில காரியங்கள் நடப்பதால், சந்தோஷம், மகிழ்ச்சி அடைவீர்கள். உறவினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். விருந்து, விசேஷம் உண்டு.

**விருச்சிகம்:** தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நாள். பெண்கள் பொறுப்போடு நடந்து, குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். கடன் பாக்கி ஒன்றை கேட்டு வாங்குவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சிலரின் பாராட்டைப் பெறலாம்.

**தனுசு:** இரண்டு நாள்களாகச் செய்ய முடியாமல்போன வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். நீண்ட நாள்களாக பிற்போட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம்.

**மகரம்:** ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். எங்காவது வெளியில் புறப்படும் நேரத்தில் யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். ஒருவர் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள்.

**கும்பம்:** சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். உங்களின் தவறு ஒன்றை மற்றவர்கள் சொல்லும் ஆலோசனைகள் மூலம் திருத்திக் கொள்வீர்கள். நண்பர்கள் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகும். தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். உறவினர் ஒருவரை உபசரிக்க கணிசமாகச் செலவிடலாம்.

**மீனம்:** உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். வெளியூர்களில் இருக்கும் ஒருவரை முக்கிய விடயமாக தொடர்பு கொண்டு பேசுவீர்கள். பல மணி நேரமாகும் என்று நினைத்த காரியம் ஒன்று சில மணி நேரங்களில் முடிவடையும். புதிய விடயம் ஒன்றுக்கு அடித்தளம் அமைப்பீர்கள். இறை வழிபாட்டில் நாட்டம் செல்லும்.

## நாளை

தை 01 ஞாயிற்றுக்கிழமை 15.01.2012
திதி: ஸப்தமி பி.இ. 04.14 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ. 01.21வரை
சுபநேரம்: 09.34 - 11.04 வரை,
ராகு காலம்: 05.04- 06.34 வரை

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 3 | 7 | | | 4 | | 6 |
| | | | 5 | | 8 | | 2 | 7 |
| | | 2 | | | 6 | 8 | | 3 |
| | 3 | | | 5 | | | 4 | 1 |
| | | | 4 | | 2 | | | |
| 7 | 4 | | | 9 | | | 8 | |
| 9 | | 4 | 3 | | | 7 | | |
| 3 | 1 | | 2 | | 4 | | | |
| 6 | | 7 | | | 9 | 2 | 3 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## வேலையாள்கள் தேவை

அலுமினியம் பொருத்துநர்களும், உதவியாளர்களும் தேவை.
நியூ அசோகா அலுமினியப் பிற்றிங் சென்ரர்
இல. 63, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். T.P. 021 224 0331- 077 360 9034

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மரியாம்பிள்ளை விசாலாட்சி (துரை)
மலர்வு: 07★09★1948
உதிர்வு: 16★12★2011

எமது குடும்பத்தின் தீபமாம்
அயலவரின் நண்பியாய்
பண்பாலே உயர்ந்தவராய் வாழ்ந்து
கணப் பொழுதில் எம்மை விட்டுப்
பிரிந்தனையோ
நின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

நாளை (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை ந.ப.12 மணியளவில் நடை பெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மூளாய் வேரம். (12842) (2,7,9) பிள்ளைகள், மருமக்கள்.

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
சீனிவாசகம் பரமேஸ்வரன்
(ஓய்வுபெற்ற பொது சுகாதாரப் பரிசோதகர் (S.P.H.I)
பிறப்பு: 09★01★1924
இறப்பு: 21★12★2005
திதி: ஷஷ்டி (14.01.2012)

ஆண்டுகள் ஆறு ஆகி விட்டதப்பா
எங்கள் ஆறாத் துயரோ இன்னும் மறையவில்லை
ஆண்டவன் திருவடியை அடைந்த நீங்கள்
மீண்டும் எம்மிடம் வரமாட்டீர்களோ?

இளவேனில்,
நவக்கிரி, புத்தூர். குடும்பத்தினர் (12935) (2,7,9)

## காணி விற்பனை

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் இருந்து 100 மீற்றர் உடையார் லேனில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் 9 பரப்பு காணி விற்பனைக்குண்டு
T.P : 077 5151328, 0773621166, 077 6354229 (12573) (45-7-6)

## வாகனம் விற்பனைக்கு

709 Ex TATA கன்டர் வாகனம் (நீலநிறம்) விற்பனைக்குண்டு
வாகன இல: M P L 1 2116
பெட்டி நீளம் 14½ அடி
தொடர்பு:
தங்கராசா கௌசிகன்
A9, புத்தூர் சந்தி,
சியாமளா மில் வீதி, மீசாலை.
T.P : 077 4053391 (சி/ 2908)(45-7-6)

## காணி விற்பனை

ஏழாலை மேற்கு கோட்டைக்காடு மடத்தடிப் பிள்ளையார் கோயிலுக்கும் மடத்துக்கும் தெற்குப் பக்கமாக நில. பர 6 விஸ்தீரணமான காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
ஞானசிவம்
தொடர்புகளுக்கு:
கி. வினோதானந்தன்
851, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8640 (12926)(45-7-6)

## வேலையாள்கள் (பெண்) தேவை

விற்பனை நிலையத்தில் பில் (Bill) போடுவதற்கு சிட்டை எழுதுநர் (பெண்கள்) தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

வீனஸ் கட்டடப்பொருள் விற்பனை நிலையம், இல. 20, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி
வீனஸ் பாம், கலாசாலை வீதி, முத்துதம்பி ம.வி. அருகில் திருநெல்வேலி
077 990 5269, 077 520 1921

## முதலாம் ஆண்டு நினைவலை

தாயின் மடியில் 04 ★ 10 ★ 1934



மண்ணின் மடியில் 25 ★ 01 ★ 2011

அமரர் கிட்டிணன் சின்னத்தங்கம்
திதி: 14.01.2012

அன்னை என்னும் சொல்லெடுத்து
ஆண்டவனின் தொண்டுகள் பல செய்து
எமை வளர்த்தெடுத்த அன்புத் தெய்வமே
ஆண்டு ஒன்று சென்றாலும் உம் நினைவு
எம்மை விட்டுப் போகாது.
உமது ஆத்ம சாந்தியை வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கருணாநிதி சனசமூக நிலையத்தடி,
வல்வெட்டி. 0776510111 குடும்பத்தினர். (8644) (2,7,9)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 ★ 09 ★ 1974




உதிர்வு 14 ★ 01 ★ 2000

முதலி பகீரதன்
(முன்னாள் நகராட்சி மன்ற ஊழியர், பருத்தித்துறை)

பன்னீராண்டுகள் சென்றிடினும் - உம்மை
நாம் மறவோம்.

புலோலி மத்தி,
பருத்தித்துறை. என்றென்றும் உம் நினைவுகளுடன் வாழும் குடும்பத்தினர். (12935) (2,7,9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் காற்றுடன் கூடிய காலநிலை நிலவும். ஏனைய மூன்று மாவட்டங்களிலும் மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை காணப்படும்.

# 'யாழ்ப்பாணத் திருவிழா' நேற்று பொங்கல் கோலாகலத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.14

**1 ஆம் நாள் நிகழ்வு**

யாழ்ப்பாணத் திருவிழா 2012 நிகழ்வின் பொங்கல் வைக்கும் போட்டி நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். முனியப்பர் கோயில் முன்றிலில் நடைபெற்றது. போட்டியில் நெடுந்தீவு வேலணை உட்பட 29 இடங்களைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். போட்டியில் தமிழர் பாரம்பரியத்துக்கு அமைவாக பொங்கல் இடம்பெற்றிருந்தன.

போட்டியின் நடுவர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நேற்றைய பொங்கல் வைக்கும் போட்டியில் முஸ்லிம் குடும்பமும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**2 ஆம் நாள் நிகழ்வு**

யாழ்ப்பாணப் பொங்கல் திருவிழா பொங்கல்2012 இரண்டாம் நாள் நிகழ்வான இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆண்கள் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியுடன் ஆரம்பமாகின்றது.

நண்பகல் 12 மணிக்கு மக்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி பண்டத்தரிப்பு விளான் மைதானத்தில் நான்கு பிரிவாக இடம்பெறும். இந்தப் போட்டியில் 125 போட்டியாளர்கள் கலந்துகொள்கிறார்கள். முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், பூநகரி ஆகிய இடங்களில் இருந்தும் போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்வர்.

இன்றைய தினமும் நாளையும் கரகாட்டம், கோலாட்டம், சிலம்பாட்டம் தீப்பந்தம் போன்ற நிகழ்வுகள் இந்தியக் கலைஞர்களால் நடத்தப்படும் மெஜிக் காட்சியும் இடம்பெறுகின்றன. இந்தியக் கலைஞர்களின் பல் வேறு புதிய விடயங்களை உள்ளடக்கிய தமிழர் பாரம் பரியத்தைச் சித்திரிக்கும் நிகழ்வுகள் தென்னிந்தியக் கலைஞர்களின் இசை நிகழ் வுகள் என்பனவும் இடம்பெறும். மாலை 5மணிக்கு யாழ்.மாநகர சபை வளாகத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலக்ஸ்மி தலைமைவகிப்பார்.

பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற மு. சந்திரகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். (ந-7)

## கர்ப்பிணிகளுக்கான கிளினிக் நாள் மாற்றம்

தென்மராட்சி, ஜன.14

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரதி வியாழக் கிழமைகளில் நடத்தப்படும் கர்ப்பிணிகளுக்கான கிளினிக் நாளை மறுதினம் தொடக்கம் பிரதி திங்கட்கிழமைகளில் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (ந-207)

## வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மீண்டும் தனது சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது இதனை அடுத்து வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

கடந்த முதலாம் திகதி கட்டுவன் வீதியில் இயங்கி வரும் வைத்தியசாலை யில் நாளொன்றுக்கு சராசரியாக 400 இற்கும் மேற்பட்ட நோயாளிக்ள சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் பொது மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை இதுவரை தீர்த்து வைக்கப்படவில்லை. பஸ்ஸில் வரும் மக்கள் சுமார் அரை கிலோ மீற்றர் வந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண் டியுள்ளதாகக் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ந-36)

## வீட்டுக் குப்பைகள் வீதிகளில்

அளவெட்டி, ஜன.14

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை டெங்கு ஒழிப்பு தொடர்பாக அண்மைக் காலங்களில் தீவிர பிரசாரம் மேற்கொண்டது. அதன் பயனாக மேற்படி வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள், வர்த்தக நிலையப் பகுதிகளையும் சுத்தம்செய்துள்ளமை வரவேற்கத்தக்கது.

எனினும் தமது வீட்டு, வர்த்தக நிலையத் திண்மக் கழிவுகளை மூடை கட்டி, வீதியோரமும் சந்திகளிலும் ஒழுங்கற்ற முறையில் குவித்திருப்பது கவலைக்குரியது. கழிவு அகற்றும் வாகனம், குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் உள்ள குப்பைகளையே அகற்றுவதால் மீத முள்ள கழிவுப்பொருள்கள் வீதிகளில் தேங்கிக் காணப்படுவதுடன் பாதசாரிகளுக்கும் இடையூறு விளைவிப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் வீடுகள் சுத்தமாகலாம். ஆனால் வீதிகள் அசுத்த மடைவதுடன் நுளம்பின் பெருக்கமும் அதிகரிக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இது தொடர்பாக பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வீதியோரக் குடியிருப்பாளர்கள் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். (ந-36)

ஜெய்குருதேவ்

THE ART OF LIVING



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்
அவர்களின்
வாழும் கலை அமைப்பு
யாழ்ப்பாண மையம்

திறப்பு விழா

வாழும் கலை அமைப்பின் வடக்கு இலங்கையின் முதல்மையம் மங்கள கரமாக செட்டியார் மடம், அராலி வடக்கில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தைத் திருநாளன்று (15.01.2012)
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.05 மணி
இந்த நிகழ்வுக்கு அனைவரையும் இதயபூர்வமாக அன்போடு வரவேற்கிறோம்.

வாழும் கலை அமைப்பு - யாழ்ப்பாண மையம்
தொ.பே: 0771000750

காணி விற்பனை

யாழ்ப்பாணம், கந்தர்மடம், மணல்தரை ஒழுங்கையில் 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 071 4148255, 021 222 0748
தரகர்களும் தொடர்புகொள்ளலாம்.

கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கு வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள் 077 9086737

மணமகள் தேவை

வெளிநாட்டில் குடியுரிமையுள்ள யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 35 வயதிற் குட்பட்ட அழகிய மணமகள் தேவை
தொடர்புகளுக்கு:
001 647, 532, 2773 அல்லது
NICE talk 2012 @ Yahoo. Com,
(12929)(45-7-6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அங்கத்தவர் சு.சிவராசா அவர்கள் கலை இலக்கியத்திற்கான 'கலாபூஷண' விருதினைப் பெற்றுக் கொண்டமையையிட்டு எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாணக் கிளையினர்.
இல.219, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(13054)(2-7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த 08.01.2012 அன்று நடைபெற்ற 15 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A) பட்டம் பெற்ற கலைவாணி கல்வி நிலைய இயக்குநர்
சிவலிங்கம் அசோக்குமார்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழ நாம் உளமார வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர்கள், மாணவர்கள்
கலைவாணி கல்வி நிலையம்
வேலணை
(13001) (45-7-6)

R4R

Paranthan Junction,
Kandy Road,(A9)
Behind Cooperative Stores,
Paranthan.

We manufacture high quality concrete pipes popularly known as HUME PIPE and our products are of international standards to suit a wide range of client's requirements.



**RC Hume Pipesin varying sizesof** 9", 18" 24 ", 27" and 36" diameter of 8' lengths. Other sizes are available on request.

**Prestress Beams** and **Columns**- 4"x4" x 8', 4"x4" x 10' ,4"x4" x 12',RC Collars for above **Prestress concrete lintols** all sizes. **Concrete door and window frames**. **RC Fence Posts:** 4"x 5" x (in lengths from 6' - 10').

We are here almost at your doorstep at Paranthan. Your worry of travelling to Colombo is overcome. Please visit us once then you will be satisfied. It's only walking distance from Paranthan junction. Contact us on phone for more details: 0770503936

வேலையாள்கள் தேவை

மேசன் தொழிலில் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் கம்பி வேலை செய்யக் கூடியவர்கள். தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு:
077 7364974

வாடகைக்கு

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் 05 அறைகள் கொண்ட மற்றும் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
077 8175765

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அணி வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் வேகத்தையும், அதிரடியையும் சமாளிக்க முடியாமல் திணறி வருகின்றது. முதலாவது இன்னிங்ஸில் இந்திய அணி வழமை போன்று சொதப்பி 161 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. பதிலளித்து ஆடிய ஆஸ்திரேலிய அணி ஆட்ட நேர நிறைவில் இலக்கு நஷ்டமின்றி 149 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது இந்திய அணி. நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கெடுத்து வரும் இந் திய அணி முதலிரு டெஸ்ட் ஆட்டத்திலும் படுதோல்வியடைந்திருந்தது. இந்த நிலையில் தொடரை சமப்படுத்த வேண்டுமாயின் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இந்திய அணி நேற்று களம் புகுந்தது.

ஆஸ்திரேலிய அணியில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டது. முதலிரு ஆட்டங்களிலும் ஆடிய பற்றின்சன், நதன் லியோன் நீக்கப்பட்டு ஹரிஸ், ஸ்ரோக் இணைக்கப்பட்டனர். இந்திய அணியில் தமிழக சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் கழற்றி விடப்பட்டு வினய் குமார் இடம்பெற்றார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் கிளார்க் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

ஆஸ்திரேலிய மண்ணில் ஆஸியின் வேகத்துக்கு ஈடுகொடுக்கத் திணறிவரும் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் நேற்றைய தினமும் திணறினர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய கம்பீர், சேவாக் இருவரும் முதலாவது இலக்குக்காக 4 ஓட்டங்கள் மட்டுமே பகிரப்பட்ட



பச்சைப் பிள்ளைங்க பயப்படப் போறாங்க...
சச்சினின் ஆட்டமிழப்பைப் கோரும் சிடில்

நிலையில் சேவாக் ஓட்டமெதனையும் பெறாமல் ஹில்பென்ஹாஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நுழைந்த இந்தியாவின் தடுப்புச் சுவர் டிராவிட் வெறும் 9 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சிடிலின் பந்து வீச்சில் 'கிளீன் போல்டாகி' வெளியேறினார். சதம் அடிக்கும் கனவுடன் களமிறங்கிய சச்சின் 15 ஓட்டங்களுடன் ஹரிஸால் பவிலியனுக்குத் திருப்பியனுப்பப்பட்டார். ஆரம்பம் முதல் ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சைச் சமாளித்து நின்றாடிய கம்பீர் 31 ஓட்டங்களுடன் தனது ஆட்டத்தை முடித்துக் கொண்டார். கம்பீரின் ஆட்டமிழப்பு டன் இந்திய அணி 63 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது.

மதியபோசன இடைவேளையுடன் இணைப்பைத் தொடங்கிய லக்ஸ்மன், ஹோக்லி இருவரும் ஆஸியின் பந்து வீச்சை தடுத்தாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இவர்களது இணைப்பினால் இந்திய அணி நூறு ஓட்டங்களைத் தாண்டியது. ஐந்தாவது இலக்குக்காக 68 ஓட்டங்கள் பகிரப்பட்டதுடன் இருவரின் இணைப்புக்கு முடிவு கட்டப்பட்டது. ஹோக்லி 44 ஓட்டங்களுடன் சிடிலின் வேகத்தில் வோர்னரிடம் பிடி கொடுத்து இணைப்பாட்டத்தை முறித்துக் கொண்டார்.

தொடர்ந்து ஹோக்லியின் பிரிவைத் தாங்க முடியாத லக்ஸ்மனும் 31 ஓட்டங்களுடன் சிடிலின் பந்து வீச்சில் வெளியேறினார். அஸ்வினுக்கு பதிலாக இணைக்கப்பட்ட வினய்



ஆஸி. அணி அதிரடியில் இறங்க


# நொந்து நூலானது இந்திய அணி

**ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக எட்கோவன், டேவிட் வோர்னர் களமிறங்கினர். இரசிகர்கள் அது ஓர் டெஸ்ட் ஆட்டம் என்பதை மறந்து போனார்கள்..**


குமார் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியா 152 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்தது. அணித் தலைவர் டோனி வழமைக்கு மாறாக இரட்டை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 12 ஓட்டங்களை மாத்திரம் அணித் தலைவர் டோனி பெற்ற நிலையில் ஹில்பென்ஹாஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பின்வரிசை வீரர்கள் சகீர்கான் 2, இசாந் சர்மா 3, உமேஸ் யாதவ் 4 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 60.2 பந்து பரிமாற்றங்களில் 161 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து ஆஸியிடம் சரண் அடைந்தது.

ஆஸ்திரேலிய அணி சார்பில் பந்து வீச்சில் ஹில்பென்ஹாஸ் 4, சிடில் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு நேற்றைய தினமே தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி அபாரமாக ஆடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய எட்கோவன், டேவிட் வோர்னர் இருவரும் இந்திய அணியின் பந்து வீச்சை 'ரி - 20' ஆட்டம் போல் போட்டுத் தாக்கினர். நிலைகுலைந்த இந்தியப் பந்து வீச்சை சாதகமாக்கி ஓட்டங்களைக் குவித்தது இந்த ஜோடி.



எல்லாம் 'குறு குறு' என்று பாங்கிறாங்களே! ரொம்பத்தான் நம்பிட்டாங்களோ!!
12 ஓட்டங்களுடன் வெளியேறும் டோனி



கடவுளே! பந்து மட்டையில் பட்டிடனும்...
கண்ணை மூடிக் கலக்குகிறார் லக்ஸ்மன்

ஆட்டத்தின் பத்தொன்பதாவது பந்துப் பரிமாற்றத்தை வினய் குமார் வீச அதை டேவிட் வோர்னர் எதிர் கொண்டார். முதலாவது பந்தில் நான்கு ஓட்டங்கள் விளாசிய வோர்னர் தனது கணக்கை 95 ஓட்டங்களாக்கினார். தொடர்ந்து நான்காவது பந்தை வினய் குமார் வீச வோர்னர் 'லோங் ஒன்' திசையில் இமாலய சிக்ஸர் விளாசி தனது இரண்டாவது சதத்தை பூர்த்தி செய்தார்.

வோர்னர் 69 பந்துகளில் சதம் கடந்து டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஒருவர் குறைந்த பந்துகளில் சதம் கடந்த சாதனையை தன்னகப்படுத்தினார். அத்துடன் டெஸ்ட் வரலாற்றில் அதிவேகமாக சதம் கடந்தவர்கள் வரிசையில் நான்காவது இடத்தைப் பெற்றார்.


நேற்றைய ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலிய அணி 23 பந்து பரிமாற்றங்களில் இலக்கு நஷ்டமின்றி 149 ஓட்டங்களைக் குவித்துள்ளது. கோவன் 40, வோர்னர் 80 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 13 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 104 ஓட்டங்களைக் குவித்துள்ளார். (15)



பந்து வீச முடியலப்பா! அதனால தானே கத்துறேன்.
இசாந் சர்மா நடுவர் அலெம் டாருடன் மோதுகிறார்.

பத்து மாதங்களாகவே தன்னுடைய 100 ஆவது சதத்தை அடிக்க முடியாமல் சற்று தடுமாறி வருகிறார் சச்சின். ஆஸ்திரேலிய சுற்றுப் பயணத்திற்கு முன்பே அவர் சதம் அடிக்க வேண்டும் என்று பலரும் கருத்து தெரிவித்திருந்தனர். ஏனெனில் அப்போது தான் ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் அவருக்கு நெருக்கடி இருக்காது என்று கிரிக்கெட் விமர்சகர்களும் கூறினர். இருந்தபோதிலும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சச்சினுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது.

இந்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் சச்சின் விளையாட வேண்டுமென இந்திய கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்ததாகவும், இந்த கோரிக்கையை சச்சின் மறுத்து விட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. ஆஸ்திரேலிய சுற்றுப் பயணத்துக்கு முழு உடல்தகுதி பெறுவதற்காக இந்த முடிவை சச்சின் எடுத்ததாகவும் கூறப்படுகிறது. (15)



இதுதான் கிரிக்கெட்...
சதமடித்த டேவிட் வோர்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி ஆட்டத்துக்கு ஞானமுருகன் தகுதி

யாழ்ப்பாணம், ஜன.14

இளவாலை யங் ஹென் றீசியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஹென்றிசி யன்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட் டச் சுற்றுப்போட்டித் தொட ரின் அரை இறுதியாட்டம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற் றது.

இதில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட் டத்திற்குத் தகுதி பெற்றது.

அரைஇறுதியாட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

போட்டி ஆரம்பமானது முதல் இரு அணியினரும் அபாரமாக ஆடினார்கள்.

இடைவேளைக்காக ஆட் டம் நிறுத்தப்பட 10 நிமிடங்கள் இருக்கையில் ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி முதலாவது கோலைப் போட்டது.

ஆட்டம் இடைவேளைக் காக நிறுத்தப் பட்டபோது ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த சில நிமிடங்களில் ஞானமுருகன் அணி தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரண்டாவது கோலைப் போட்டது.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. பாடும்மீன் அணி கோல் பெறுவதற்கு கடும் முயற்சிகளை மேற் கொண்டது. ஆட்டம் முடிவுறும் நிலை யில் பாடும்மீன் அணிக்குத் தண்டனை உதை ஒன்று கிடைக்கப்பெற்றது. அதனை அந்த அணி கோலாக மாற் றியது.

ஆட்ட முடிவில் ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட் டத்திற்கு தகுதி பெற்றது. (த-23)

## வீடு வளவு விற்பனை

பருத்தித்துறை வியாபாரி மூலை மத்தியில் அழகிய மேல்மாடி வீடு வளவு ஆதனம் விற்பனைக்குண்டு.

| கடிதத் தொடர்பு | தொ.பே.இல |
|---|---|
| க. சிவபாலன் வியாபாரி மூலை, பருத்தித்துறை. | 021 300 6230<br>021 320 1637 |

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா சிறிநடராஜ்

(முன்னாள் மோட்டார் போக்குவரத்து திணைக்கள லிகிதர், மனேஜர், Cv part)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், பழம் வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சிறிநடராஜ் நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தயாபர சுந்தரியின் அன்புக் கணவரும், சசிகலா (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீகலா (தலைவர் சமஸ் கிருதத் துறை, யாழ். பல்கலைக்கழகம்), கலாராஜ் (தொழில் நுட்ப வியலாளர், மருத் துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பேராசிரியர் சிவநாதன் (தலைவர், பொருளியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்), ஜெகநாதன் (தொழில் நுட்பவியலாளர் கணிதத்துறை, - யாழ். பல் கலைக்கழகம்), ரஞ்ஜனி, (தாபனக்கிளை, யாழ். பல் கலைக்கழகம்) ஆகியோரின் மாமனும், சிவானந்தன், (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான ரத்தினம், இராசலட்சுமி, அன்ன லட்சுமி மற்றும் சித்தானந்தன், காலஞ் சென்ற மகாலட்சுமி ஆகியோரின் சகோதரரும், அபராஜிதன், அருணன், அபயன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை (பழம் வீதி, கந்தர்மடம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 55/1, பழம் வீதி,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்

(10058)

### சாமிநாதர் யூலியஸ் றூபேந்திரன்

''றூபவில்லா'' சென்.தோமஸ் லேன், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதர் யூலியஸ் றூபேந்திரன் நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சாமிநாதர் - மேரி மெற்றில்டா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற விக்ரர் ராஜமன்னர் இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், பூங்கோதையின் (மாணவி யா/ மெதடிஸ்த உயதர்தர பெண்கள் பாடசாலை) பாசமிகு தந்தையும் கவிதா (யா/ கலட்டி றோ.க.த.க. பாடசாலை), சுஜாதா (ஆசிரியை, யா/ பொலிகண்டி இ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேரி உவலியம்மாவின் பெறாமகனும், ரமணன், ஜெயந்தி, ரஜீவன், காயத்திரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.01.2012) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் தூயதோமையார் ஆலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துவரப்பட்டு பருத்தித்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''றூபவில்லா''
சென்.தோமஸ் லேன்,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வரட்ணம் பூமணி



கரம்பனைப் பிறப்பிடமாகவும், இல. 97, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் பூமணி நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், செல்வரட்ணத்தின் பாசமிகு மனைவியும், நாகேஸ்வரன் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

97, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்: நகுலேஸ்வரன்
(நகுலன்)-மகன்.

## வேலணையில் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜன.14

பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபைக்குட்பட்ட 5 விளையாட்டுக் கழகங்களுக்கு 19 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங் கள் வழங்கப் பட்டன. பிரதேசசெயலர் மு.நந்தகோபாலன் தலை மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில் வெஸ்திரி அலன்ரின் கழகங்களின் உறுப்பினர்களிடம் பொருள்களை வழங்கினார்.

பிரதேச சபைத்தலைவர்சிவராசா உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மீரா ஆகியோர் கலந்துகொண் டனர். (த)

## நாளை இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.14

இளவாலை புனித கொன் றியரசர் கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு ஹென்றிசியன் வெற்றிக் கிண்ணத்துக்காக மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற வுள்ளது.

இறுதியாட்டத்தில் ஞான முருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வென்றது அம்மன் வி.க.

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறை வையொட்டி 11 பேர் பங்கு பற்றும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டி வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வரு கின்றது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன் றில் அம்மன் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண் டது.

அம்மன் விளையாட்டுக் கழக அணி அடுத்தடுத்து 3 கோல்களைப் போட்டது. முதல்பாதி ஆட்டம் இடை வேளைக்காக நிறுத்தப் பட்ட போது அம்மன் விளையாட் டுக் கழக அணி 3:0 என்ற கோல் கோல்கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட் டம் ஆரம்பமான சிறிது நேரத்தில் அம்மன்விளையாட்டுக் கழக அணி நான்காவது கோலைப் பெற்றுக்கொண் டது.

ஆட்டமுடிவில் அம்மன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 ★ 08 ★ 1932



மறைவு
14 ★ 01 ★ 2001

### அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்) திதி: அபரபக்க ஷஷ்டி

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
எம்மை எல்லாம் வழிநடத்தி இவ் வையகத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வமாகிவிட்ட எங்கள் குடும்ப விளக்கு
அணைந்து ஆண்டுகள் பதினொன்று கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

9/1, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (12932)(2-7-9)

- குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
21.06.1956

அரக்கரின் அழிப்பில்
26.12.2010

திதி:-
சஷ்டி (14.01.2012)

### அமரர் மார்க்கண்டு சிவலிங்கம் Bsc Agri, SLEAS - II

(பிரதிக்கல்விப் பணிப்பாளர் - வலிகாமம் கல்வி வலயம்)

அம்மா ராசா என்றழைக்கும் குரல் எங்கே?
அணைத்து உறங்க வைக்கும் நெஞ்சம்தான் எங்கே?
பாடங்களும் கதைகளும் படித்த மடிதான் எங்கே?
பாசமாய் வளர்த்தெடுத்த தெய்வம் எங்கே?
காலை எழுந்தவுடன் யோகா செய்விக்கும் ஜோதியே நீ எங்கே?
காலம் தவறாமல் உணவளித்த ஆரோக்கியவான் எங்கே?
வீட்டுக்கொரு பூந்தோட்டம் அமைத்த புதுமையானவர் எங்கே?
உலகில் எப்படி உழைப்பதென்ற உழைப்பாளி எங்கே?
விவேகானந்தர் போல வீர மக்களாக்க வீறு கொண்டவர் எங்கே?
கல்விச் செல்வம் தான் எம் ஆயுத மென்ற கலங்கரையே எங்கே?
கருணையிலாது கொன்றழித்த கயவா நீ எங்கே?

பண்டிதர் வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(13011)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



08.01.2012 அன்று
கிழக்குப் பல்கலைக்கழகத்தில்
கலைமாணிப்பட்டம் பெற்ற

**சி.அசோக்குமார் B.A**

(கலைவாணி கல்வி நிலைய
இயக்குநர்-வேலணை)


என்றும் எம்முடன்
வரும் சொத்து, அதில்
மேலும் வளர்ச்சி பெற
சிற்பனையான் துணையுடன்
என்றும் எமது நல்லாசிகள்.

இந்திரா பல்பொருள் வாணிபம்
விஜயன் வேதுப்பகம்
ஞானசுதன் - சுஜாதா
(கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச்சங்கம்)
சோபிகா புடைவையகம்
நிர்மலா கஜன் மல்ரிசென்ரர்

குறிகாட்டுவன் வீதி,
வங்களாவடி, வேலணை.

(12975)(5,6,7,9)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 06 . 01 . 1950 |  | 25 . 01 . 2011 |

**அமரர் தங்கராசா ஜெயானந்தம்**

(ஜெயானந்தஸ்வரி எலக்ரிக்கல்ஸ்)

திதி: ஷஸ்டி (14.01.2012)

நீங்கள் எம்மை விட்டு இறைவனடி சேர்ந்தாலும்
உங்களின் நினைவுகள் என்றும்
எங்கள் உள்ளத்தில் கல்வெட்டாய் இருக்கும்

உங்களது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீ வாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். - குடும்பத்தினர்.

(13027)

# டெங்கு ஒழிப்புக்காக 30 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 14

2012 ஆம் ஆண்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நோய்த் தொற்றைத் தடுப்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம் என அமைச்சின் மேலதிகச் செயலாளர் பாலித மஹீபால தெரிவித்தார்.

எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரையான காலப் பகுதியை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, டெங்கு ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்தள்ளது.

# மருத்துவர் அம்பிகைபாகன் மீண்டும் கடமையில்

தென்மராட்சி, ஜன. 14

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரி ச.அம்பிகைபாகன் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு நேற்று தொடக்கம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

2002 ஆம் ஆண்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றிருந்தார். கடந்த டிசெம்பர் முதலாம் திகதி 60 வயதைப் பூர்த்தி செய்தவர்களை ஒப்பந்த சேவையிலிருந்து விலக்குவதென சுகாதார அமைச்சினால் முடிவு செய்யப்பட்டதையடுத்து அவர் ஒப்பந்த சேவையிலிருந்து இளைப்பாறினார். என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)


ESOFT
The Leader in Professional IT Education
Authorised Education Centre

Nelliyadi
கிளையினால்
10.01.12
அன்று

8ஆம் பக்கத்தில்
பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின்
வலதுபக்க மூலையில்
பதிக்கப்பட்ட வியாபார சின்னம்
தவறுதலாக மாறி
பிரசுரிக்கப்பட்டது பிழை
என்பதை அறியத்தருகிறேன்.

**பெண் விற்பனையாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கி வரும் புடைவை நிறுவனத்துக்கு பெண் விற்பனையாளர் தேவை. தொடர்பு: 0772850753 (C/7804)

**கார் வாடகைக்கு விடப்படும்**

VIP கார் (வெள்ளை நிறம்)
திருமணம் மற்றும்
விசேட சேவைகளுக்கு...
தொடர்பு:- 021 790 3634

**இன்று வெளிவந்து விற்பனையாகின்றது**

SLAS

போட்டிப் பரீட்சைக்கான விசேட வழிகாட்டி 2012 மிக மிக கிட்டிய அண்மைக்கால விடயங்களுடன் கடந்தகால வினாக்கள் விடையுடன் கூடிய மிகப் பிரமாண்டமான படைப்பு

ஆசிரியர்: P.உமாசங்கர் விலை 900/=

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். (C/7805)

**படிவம் விற்பனையாகின்றது**

கல்வி அமைச்சின் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
வெற்றிடங்கள் - 04

01. அலுவலக சேவகர் - தரம் III
02. நூலக சேவகர் - தரம் III
03. முகாமைத்துவ உதவியாளர் - தரம் III
04. முகாமைத்துவ உதவியாளர், தகவல் உதவியாளர் - தரம் III

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். (C/7804)


# கண்ணீர் அஞ்சலி

**அமரர் உயர்திரு பொன்னையா ஸ்ரீ நடராஜ்**

(அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோயில் முன்னாள் பொருளாளரும் நிர்வாகியும்)

திரு. பொ.ஸ்ரீ நடராஜ் அவர்கள் 12.01.2012 அன்று அம்பாள் பாதங்களை அரவணைத்துக் கொண்டார். அன்னாரது பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அம்பாள் அடியார்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய், பர்வதவர்த்தினி
அம்மன் கோயில், உரும்பிராய். பரிபாலன சபையினர்

# மகரஜோதி மண்டல பூசைப் பெருவிழா முடிவு

மகரஜோதி 15.01.2012 ஞாயிறு இரவு சிறப்பாக நடைபெறும் இரவு ஆபரணி பெட்டி வந்ததும் ஆபரணம் சாத்தி விசேட பூஜை இடம்பெறும் மறுநாள் ஆஞ்சனேயர் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று சாமிமார்களுக்கு மாலை கட்டப்படும்.

சபரீச ஐயப்பன் தேவஸ்தானம், கோண்டாவில்.
குருசாமி கி.ஹரிஹரசுதசாமி.

(C-7802)


அன்பர்கள், நண்பர்கள், நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் கலைரசிகப் பெருமக்கள் அனைவருக்கும்
(யாழ். ரமணனின்) "ராஜன்ஸ்" இசைக்குழுவினரின்
பொங்கல் வாழ்த்துக்கள்

நாளை (15.01.2012) ஞாயிறு இரவு யாழ். சுப்பிரமணியம் பூங்கா முன்னால் இடம்பெறும் பொங்கல் தின விழாவில் உங்கள் அனைவரையும் இசைமழையில் சந்திப்போம்.

எம்மை அழைத்து மகிழ
242, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல
0776510165


# மரண அறிவித்தல்கள்

## மரியதாசன் பார்பரா (நிர்மலா)



யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் 517/6, ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாசன் பார்பரா (நிர்மலா) 13.01.2012 கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

அன்னார் மரியதாசனின் (செல்வம்) அன்பு மனைவியும் ரமேஷ், ரகு, ராகுலன், ரஜனி, வதனி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இவரது நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

517/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
கணவர்

## திருமதி பிலோமினா தீயோகுப்பிள்ளை



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கிளாலியை வசிப்பிடமாகவும் தற்போது பெத்தானியா ஒழுங்கை கூழாவடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பிலோமினா தீயோகுப்பிள்ளை (12.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசை தீயோகுப்பிள்ளையின் அன்பு மனைவியும் பத்திநாதர் மேரி மாக்கிறேட் (பூபதி) காலஞ்சென்ற ஆரோக்கியநாதர் (திரவியம்) மற்றும் இப்பொலிற் (குணம்), மரியசீலி (வசந்தா), அருட்பணி சூசைநாதன் (ஆசீர்வாதப்பர் சபை - கண்டி) ஆகியோரின் பாசமிகு தாயும் கிறிஸ்துராசா, ஸ்கொலஸ்ரிக்கா, மேரி ஆகியோரின் அன்பு மாமியும் மேரிபமிலா, றீகன், விக்ரர், நியூட்டன், உஷாந்தினி, ஜக்சன், பெல்சியா, கிளிற்ரஸ், ஜீன்சன், டொறீசியா, டீனா விஜயகுமார் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.01.2012) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெத்தானியா ஒழுங்கை, கூழாவடி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சந்திரசேகரம் (சின்னராசா)

(வர்த்தகர் - பெரியகடை)



இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சந்திரசேகரம் நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பயரின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - லட்சுமி தம்பதியரின் மருமகனும் விஜயதேவியின் (தேவி) கணவரும் லவன் (பிரதம தபாலகம் - யாழ்ப்பாணம்), துஷிதா (ஜேர்மனி), நிரேஷ், சதீஷ், பிரசன்னா (செலிங்கோ இன்சூரன்ஸ், நெல்லியடி) ஆகியோரின் தகப்பனும் மோகனா, குருபரன் (ஜேர்மனி), துஷியந்தி ஆகியோரின் மாமனும், சஜீவா (ஜேர்மனி), தனுஜா (ஜேர்மனி), ஹிஷாலன் ஆகியோரின் பேரனும் இந்திராதேவி, காலஞ்சென்ற ஜெயராஜசேகரம் மற்றும் ஞானசேகரம் (இ.போ.ச), குணசேகரம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2012) சனிக்கிழமை பி.ப. ஒருமணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2மணி அளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்

## கந்தையா - பொன்னையா (பிரபல வர்த்தகர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னையா நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு கணவரும், மல்லிகா தேவி (றோசா - கொக்குவில்), பரமதேவன் (பிரான்ஸ்), மாலினி தேவி (சுவிஸ்), சண்முகதேவன் (சுவிஸ்), சசிகலா (லண்டன்), மேகலா (கொக்குவில்), சதீஸ் (ஜனா சிவில் என்ஜினியரிங் கென்ஸ்ரக்சன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், பரமேஸ் வரன் (அப்பையா - கொக்குவில்), கிருபராணி (பிரான்ஸ்), தியாக ராசா (சுவிஸ்), ஜெயதேவி (சுவிஸ்), சிவபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, தம்பையா, அன்னமுத்து மற்றும் சரவணமுத்து காலஞ் சென்ற இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெகன் காலஞ்சென்ற ஜெனிதா மற்றும் விந்தன், கீர்த்தனன், தர்ஷன், கெஜிதா, ஜெய்வித், நதுசன் காலஞ்சென்ற சந்தியா மற்றும் லக்ஸ் சன், மிருதுகா, திகானுகா, சுபானுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

99, பொற்பதி வீதி,
கொக்குவில்.

தகவல்:
பரமேஸ்வரன் (அப்பையா - மருமகன்) சதீஸ் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பிக்கு எதிரான வழக்கு ஏப்ரலில்

கொழும்பு, ஜன. 14

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேசப் பொறுப்பாளரும் ஆயுத கொள்வனவாளருமான குமரன் பத்மநாதனுக்கு எதிரான வழக்கு விசாரணையை அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாத நிலையில் விசாரிப்பதா இல்லையா எனத் தீர்மானிப்பதற்கு எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் கூடவுள்ளது.

பொன்னையா ஆனந்தராஜா (ஐயா) மற் றும் சுப்ரமணியம் சிவகுமார் (ராஜன்) ஆகியோருக்கான வழக்கிலேயே நீதிபதி சுனில் ராஜபக்ஷ இந்த அறிவிப்பை விடுத்தார்.

இவ்விரு சந்தேக நபர்களும் அமெரிக்கா, கனடா, மலேஷியா, நோர்வே, இலங்கை மற்றும் ஏனைய பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக நிதி திரட்டியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்விருவரும் கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனின் நிதிச் சொத்துகளுக்கு பொறுப்பாக இருந்ததாகச் சட்ட மா அதிபர் ஈவா வனசுந்தர குற்றஞ் சுமத்தியுள்ளார் என சிரேஷ்ட அரச வழக்கறிஞர் ரியாஸ் பாரி தெரிவித்தார்.

# கிருஷ்ணாவின் இஸ்ரேல் பயணத்தை கண்டிக்கிறது இந்திய கம்யூனிஸ்ட்

புதுடில்லி, ஜன.14

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் இஸ்ரே லிய விஜ



யத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்ஸிஸ்ட்) பொதுச் செயலாளர் பிரகாஷ் கராட் கடுமையாக விமர்சித்துள்ளார். இந்தப் பயணம் ஒரு தவறான சமிக்ஞையை தோற்றுவித்து விடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானுக்கு எதிராகக் கடும் அழுத்தம் கொடுக்கப்படுமென இஸ்ரேல் மிரட்டல் விடுத்துள்ள ஒரு தருணத்தில் இந்த பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இஸ்ரேல் பலஸ்தீனர்களின் எல்லைகளை ஆக்கிரமித்து வருகின்றது. அம்மக்களை ஒடுக்குகின்றது. அத்துடன், அவர்களை தீவிரவாதிகள் என்றும் அழைக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிருஷ்ணாவின் இஸ்ரேலிய விஜயம் ஓர் ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டில் அமைந்துள்ளது. ஈரானை இலக்கு வைத்து அமெரிக்காவுடன் முன்கூட்டியே கூட்டாக இஸ்ரேல் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுவருகிறது. இச்சமயத் தில் இடம்பெறும் கிருஷ்ணாவின் பயணம் உலக அரங்கில் இந்தியா மீது தப்பான வியூகத்தையே தோற்றுவிக்கும் என்றும் பிரகாஷ் கராட் சாடியுள்ளார். (ஒ-சி)

# குற்றம் புரிந்த படையினரை அரசே தண்டிக்க வேண்டும்

1 »

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஹெய்ட்டியில் அமைதி காப்புப் படையில் பணியாற்றிய இலங்கைப் படையினர் சிறுமிகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியது மற்றும் பாலியல் ரீதியான சுரண்டலுக்கு உட்படுத்தியது பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் இலங்கை அரசுக்கே உள்ளது.

இது அமைதிகாப்புப் படைக்குப் படையினரை அனுப்பும் நாடுகளைச்சார்ந்த விவகாரம். இது அவர்களின் பிரச்சினை. இது அவர்களின் இறையாண்மைக்குட்பட்ட பொறுப்பு. அவர்களின் தேசியச் சட்டங்களுக்குட்பட்டது.

அதற்காக இந்த விவகாரத்தில் ஐ.நா அக்கறைப் படவில்லை என்றோ இதன் தொடர்ச்சியைக் கவனிக்காமல் உள்ளதென்றோ அர்த்தமில்லை. ஆனால் இது அந்த நாட்டின் தேசிய அதிகாரிகளின் நீதிமுறைக்குட்பட்டது.

குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்டதாக இனங்காணப்படும் இலங்கைப் படையினர் கட்டாயம் அதற்காகத் தண்டிக்கப்பட வேண்டும். என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

2007 நவம்பரில் ஹெய்ட்டியில் அமைதிகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 950 இலங்கைப் படையினரில், 111 படையினரும் 3 அதிகாரிகளும் அந்த நாட்டுச் சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தியது மற்றும் சுரண்டலுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

# ஆயுதப் போராட்டத்தை விட மக்கள் எழுச்சியே சிறந்தது

1 »

கூட இத்தருணத்தில் அரசைக் கவிழ்ப்பதற்கும் ஆயுதப்போராட்டம் நடத்துவதற்கும் யோசிக்க மாட்டார்கள் என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

'சர்வாதிகார ஆட்சிகளை மக்கள் எழுச்சிகளும் வீதிப் போராட்டங்களும் வீழ்த்தியுள்ளன. மனித யானை மோதல், மரக்கறிகள், பழங்களை கொண்டு செல்வதற்கு பிளாஸ்ரிக் கூடைகளின் அறிமுகம் போன்ற விடயங்களில் மக்கள் வீதியில் இறங்கியபோது ஆட்சியாளர்களுக்கு டுனிஷியா, லிபியா ஆகிய நாடுகளின் மக்கள் எழுச்சிகள் நினைவுபடுத்தப்பட்டன' என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீளமைக்கப்படுவதாக கூறப்படுவது குறித்து கேட்டபோது, இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் புலிகள் தோற்கடிக்கப்பட்டபோதிலும் தமிழ் மக்களின் உண்மையான பிர்ச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் இத்தகைய் முயற்சிகள் தொடர்ந்திருக்கும் என அவர் கூறினார்.

# சர்வதேச குற்றச்சாட்டுகளுக்கு ஆணைக்குழுவிடம் பதிலில்லை

1 »

யாது என்றும் இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்கள் குறித்து முழுமையான தகவல்களை இலங்கை அரசு வெளியிடவில்லை என்றும் கனடா அரசு குற்றஞ் சாட்டிய ஒரு நாள் பின்னராக பிரிட்டனின் இந்த அறிவிப்பு வெளியாகி உள் ளது.

இதுதொடர்பாக பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் பிரிட்டிஷ் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் எழுத்து மூலம் வழங்கிய பதிலில் கூறியுள்ளதாவது:-

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை இலங்கை அரசு பகிரங்கப் படுத்தியதை பிரிட்டன் வரவேற்கிறது.

போருக்குப் பிந்திய நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு ஒன்றுக்கான ஆக்கபூர்வமான பரிந்துரைகள் பலவற்றை இந்த அறிக்கை கொண்டுள்ளதாக பிரிட்டன் நம்புகிறது.

ஆனால், இனமோதலுக்குக் காரணமான ஆட்சியிலுள்ள அரசுகள் பற்றியும் அதிகாரப் பகிர்வு குறித்தும் இந்த அறிக்கை பரிந்துரைக்கத் தவறியுள்ளது. அப்படி இருந்தபோதும் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில நல்ல பரிந்துரைகளை அரசு உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும். அதுவே இலங்கையின் முன்னேற்றத்துக்கான உண்மையான சோதனையாகும்.

சில பரிந்துரைகளை சில மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தலாம். சில வற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த கால அவகாசம் தேவைப்படும். அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை இப்போது எடுக்க முடியும்.

பொறுப்புக்கூறும் விடயத்தில் இந்த அறிக்கையின் கண்டறிவுகள் மற்றும் பரிந்துரைகள்விடயத்தில் பிரிட்டிஷ் அரசு ஏமாற்றமடைந்துள்ளது.

பல இடைவெளிகளுக்கும் கேள்விகளுக்கும் இதில் பதிலளிக்கப்படவில்லை என்று நாம் உணர்கிறோம். வேறு சில நாடுகளும் அவ்வாறே உணர்ந்திருக்கின்றன.

போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்களுக்கு கணிசமான இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் அது குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரை கூறுவதை வரவேற்கிறோம். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அனைத்துலக மனிதஉரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்கள் குறித்த பல நம்பகமான குற்றச்சாட்டுகளுக்கு, இந்த அறிக்கையில் பதிலளிக்கப்படவில்லை அல்லது பகுதியாகவே பதிலளிக்கப்பட்டுள்ளது.

காணொளிக் காட்சிகளை ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் அங்கீகரித்துள்ளதை நாம் நம்புகிறோம். இந்த மோசமான மீறல்கள் பற்றி தொழில்நுட்ப ரீதியாக மட்டுமன்றி வெளிப்படையான விசாரணைகளும் நடத்தப் பட்வேண்டும்.

மனிதஉரிமை மீறல்கள் குறித்த பரிந்துரைகளை பிரிட்டிஷ் அரசு வரவேற்பதுடன் அவற்றை உயிர்த்துடிப்புடன் நடைமுறைப்படுத்தவும் வலியுறுத்துகிறது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் வெற்றி அல்லது தோல்வி அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் படுவதன் அடிப்படையில் தான் தீர்மானிக்கப்படும்.

பொறுப்புக்கூறுதல் விடயத்தில் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது பயனுள்ள முதல் நடவடிக்கையாக அமையும். ஆனால், மோசமான மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு சுதந்திரமானதும், நம்பகமானதுமான பொறிமுறை ஒன்றின் ஊடாக விசாரணை செய்யப்படுவது முக்கியமானது என்று நாங்கள் தொடர்ந்து நம்புகிறோம்.

உறுதியான அமைதியான இலங்கை, தீவிரவாதத்தில் இருந்து விடுபட்டு கொமன்வெல்த்தைப் பின்பற்றும் ஒரு நாடாக இருக்க வேண்டும் என்பதே எமது நீண்டகால விருப்பம்.

நிலையான அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு பிரிட்டன் தொடர்ந்து ஆதரவாக இருக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

# கூட்டமைப்புடன் பேச இணங்கியது அரசு

1 »

தேசியக் கூட்டமைப்பு விடாப்பிடியாக இருந்தது. ஆனால் தொடர்ந்து பேச்சில் பங்கேற்கத் தயாரென கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவித்துள்ளார். இது சாதகமான சமிக்ஞையாகும். பொலிஸ் காணி அதிகாரங்கள் தொடர்பில் அரசு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. அவற்றில் சில சில பகுதிகளை வழங்கக் கூடியதாக இருக்கும்.

நாடாளுமன்றத்துக்கு வெளியில் எவ்வளவு தான் பேசினாலும் பிரச்சினைக்குத் தீர்வு காண, யாப்பில் திருத்தம் செய்ய நாடாளுமன்றத்துக்கு வந்தாக வேண்டும். அதனால் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றக் குழுவில் கூட்டமைப்பு அங்கம் வகிக்க வேண்டும். அதனூடாகவே தீர்வு காண முடியும். இந்த நிலைப்பாட்டிலே அரசு தொடர்ந்தும் உள்ளது.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் கடைசியாக நடந்த பேச்சின்போது அடுத்த கட்டப் பேச்சு 17 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.இதன்படி இரு தரப்பினருக்குமிடையிலான அடுத்த சுற்றுப் பேச்சு எதிர்வரும் 17 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறும் என்றார் கெஹலிய.

# 'தைபஸ்' காய்ச்சல் பரவுகிறது மக்களுக்கு அபாய அறிவிப்பு

1 »

சேவைகள் திணைக்கள தொற்று நோய் தடுப்புப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. இத்தகைய அறிகுறிகள் ஏற்படாமலும் கூட இந்தக் காய்ச்சல் இருக்கலாம் எனவே உரிய சுகாதார வசதிகளைப் பின்பற்றுமாறும் பொதுமக்களை அறிவுறுத்துகிறது சுகாதாரப் பகுதி.

இது குறித்து மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாவது:-

ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த பக்றீரியாக்களால் ஏற்படும் தொற்று நோய் இந்த 'தைபஸ்' காய்ச்சல். இந்த வகை பக்றீரியாக்கள் கடத்தப்படுவது புறவொட்டுண்ணிகள் மூலமே. இவை பெரும்பாலும் தெள்ளு, பேன், உண்ணிகள், பாலுண்ணிகள் என்பன இரத்தத்தை உறிஞ்சும் போது தொற்றுகின்றது. தவிர தோலின் மேற்பரப்பில்அவை காணப்படும் போது அவற்றின் மலம் தோலில் விடப்படுவதனால் அந்த மலம் தோலில் காணப்படும் புண்களினூடாக உட்சென்றும் நோயை ஏற்படுத்துகிறது.

பெரும்பாலான பக்றீரியாக்கள் ஒட்டுண்ணிகளினாலும், பாலுண்ணிகளினாலும், புற உண்ணிகளினாலுமே கடத்தப்படுகின்றன. பறக்கும் அணில்களில் காணப்படும் புற ஒட்டுண்ணிகளான மனித உடற்பேன்களும் ஒருவகை பக்டீரியாவைப் பரப்புகின்றன.

சமூக மட்டத்திலும், சனத்தொகை அதிகமான பிரதேசங்களிலும் உடற்பேன்கள் அதிகம் காணப்படுகின்றன. தவிர போர், வறுமை, இயற்கைப் பேரிடர் நிகழும் இடங்களில் இந்த நோய் பரவும் வேகம் அதிகமாகும்.

விசேடமாகக் குளிரான மாதங்களில் உடைகளைச் சரியான முறையில் சலவை செய்து பாவிக்காத சந்தர்ப்பங்களிலும் இந்த வகை ஒட்டுண்ணிகள் அதிகமாகத் தொற்ற வாய்ப்புண்டு.

எனவே ஒவ்வொருவரும் நன்கு சவர்க்காரமிட்டு தினமும் குளித்தல் வேண்டும். நன்கு துவைக்கப்பட்ட ஆடைகளை அணிதல் வேண்டும். கால்நடைகளுடன் பழகுபவர்கள், பற்றையுள்ள இடங்களுக்குச் செல்பவர்கள் உடன் நன்கு சவர்க்காரமிட்டு குளித்தல் வேண்டும். பற்றையுள்ள இடங்களுக்கும் தேவையற்ற வகையில் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும் - என பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (ஒ-4)

# பொறுப்புக்கூறத் தவறியது நல்லிணக்க ஆணைக்குழு

1 »

றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் பொறுப்புக் கூறுதல் என்ற கடப்பாட்டை சுட்டிக்காட்டத்தவறியுள்ள நல்லிணக்க ஆணைக் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கூட்டமைப்பு தனது பதில் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக தெரியவருகிறது.

அந்த அறிக்கையின் முக்கிய உள்ளடக்கம் வருமாறு:

இறுதிப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் 1018 பேர் சரணடைந்த பின்னர் காணாமற் போயிருப்பதாகவும் அதற்கான சாட்சியங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் நல்லிணக்க ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் சரணடைந்த பின்னர் காணாமற் போனோர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கக்கூடும். ஆணைக்குழு குறிப்பிடுவதுபோல இந்த விடயங்களை தனித்தனிச் சம்பவங்களாகக் கருத முடியாது.

2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நல்லிணக்க ஆணைக்குழு இடைக்கால அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், தடுத்து வைக்கப் பட்டுள்ளோரின் பெயர் விவரங்களை வெளியிடுதல், சட்டவிரோத ஆயுதக் குழுக்களைக் கலைத்தல் ஆகிய முக்கிய விடயங்கள் உட்பட பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. ஆயினும் அந்த பரிந்துரைகள் எதுவும் இது வரை கவனத்தில் கொள்ளப்படவில்லை. இப்போது இறுதி அறிக்கையில் குறிப்பிடப் படவுள்ள பரிந்துரைகள் வரவேற்கக்கூடியவை என்றாலும் இடைக்கால பரிந்துரைகளே இது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை இவ்வாறான நிலைமையில் இறுதி பரிந்துரைகள் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்பட போகின்றன?

- இவ்வாறு கூட்டமைப்பின் பதில் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு நல்லிணக்கத்துக்கு சர்வதேசத்தின் ஆதரவு தேவை

## இல்லையேல் ஜெனீவா மாநாடு அக்கினிப் பரீட்சையாகும்

கொழும்பு, ஜன. 14

ஜெனிவா மாநாட்டை குறிவைத்து வெளிநாட்டு இராஜதந்திரிகள் வருட ஆரம்பத்திலேயே இலங்கைக்கு படையெடுத்த வண்ணமுள்ளனர். எனவே, அரசு உடனடியாக வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இல்லையேல், ஜெனிவா மாநாடு அக்கினிப் பரீட்சையாகவே அமையும்.

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அரசுக்கு அவசர ஆலோசனையை வழங்கியுள்ளது.

ஆயுதப் போராட்டம் குறித்து அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க வெளியிட்டுள்ள கருத்து மடத்தனமானது. வடக்கில் அரசியல் நடத்தும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்று அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளின் இலங்கை வருகை, பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்கள் ஆகியன தொடர்பாக 'உதயனு'க்குக் கருத்து வெளியிடும்போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வருட ஆரம்பத்திலேயே வெளிநாட்டு இராஜதந்திரிகளின் பட்டாளம் இலங்கைக்கு படையெடுக்கவுள்ளன. மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மாநாட்டை குறிவைத்தே இந்த விஜயங்கள் அமைந்துள்ளன என்பது மட்டும் தெட்டத்தெளிவு.

எனவே, அரசு உடனடியாக வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, சர்வதேசத்தின் ஆதரவைத் திரட்டிக்கொள்ள வேண்டும். இல்லையேல், வருட ஆரம்பத்திலிருந்தே எமது நாட்டுக்கு அக்கினிப் பரீட்சை ஏற்பட்டுவிடும்.

வடக்கில் அரசியல் நடத்தும் உரிமை ஜே.வி.பியின் மாற்றுக்குழுவுக்கு மட்டுமல்ல, அனைத்து அரசியல் பிரமுகர்களுக்கும் உள்ளது. எனவே, அமைச்சர் எஸ்.பி. மடத்தனமாகக் கருத்து வெளியிடக்கூடாது. - என்றார்.

(ஒ-சி)


**பிரான்ஸ் விசா**
பிரான்ஸ்
உடனடியாகச் செல்ல
சட்ட ஆலோசனைகளுக்கு
திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
0212219016
(13016)



**கார் வாடகைக்கு உண்டு**

திருமண வைபவங்கள் மற்றும் அதிவிசேட வைபவங்களுக்கான புத்தம் புதிய 2011 HYBRID கார் (வெள்ளை நிறம்) வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0777289283 0778096873
(13030)




உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள்
**TKY 07**
(7 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆங்கிலக் கற்கை நெறி) புறஜெக்ரர் மூலம் அகலத் திரையில்
நவீன கற்பித்தல்
8 ஆவது புதிய பிரிவும் ஆரம்பம் 15.01.2012 பி.ப. 2மணி
திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016 (13014)



**ஆஸ்திரேலியா விசா**
படிக்க, வியாபாரம் புரிய, தொழில் தேட ஆலோசனைகளுக்கு
திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
0212219016
(13016)


## மீனவர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜன.14

நெடுந்தீவுக் கடலில் படகுகள் விபத்துக்குள்ளானதாகக் கூறப்படும் சம்பவத்தில் அவற்றில் பயணித்து கரையிறங்கிய நீர்கொழும்பு மீனவர்கள் ஐந்து பேரும் இந்திய மீனவர்கள் இரண்டு பேருமாக ஏழு பேர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அவர்களைப் பிணையில் விடுவித்த நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா இது தொடர்பான வழக்கு விசாரணையை நாளைமறுதினம் வரை ஒத்திவைத்தார்.

இந்தியாவைச் சேர்ந்த இருவரையும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு மன்று உத்தரவிட்டது. தூதரகத்தினர் இருவரையும் அழைத்துச் சென்றனர்.

கடந்த மாதம் கரையொதுங்கியவர்கள் மீட்கப்பட்டு கடற்படையினரால் நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் அவர்களை மன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.


ஆத்மார்த்த பிரார்த்தனைக்கு
அரோஹரா
**விரைவில்...**



திசைகாட்டியின் இனிய தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துக்கள்
அனைத்து அன்புள்ளங்களுக்கும் உரித்தாகட்டும்.
நாளை 15.01.2012 விசா ஆலோசனைகள், TKY07 ஆங்கில வகுப்புகள், வாழ்நாள் ஆங்கிலம் (Spoken English) என்பன புதிய பிரிவுகள் ஆரம்பம். விசேட கட்டணச் சலுகைகளுடன்.
திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
0212219016
(13015)



**இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள்**
சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான கற்பித்தலில் பல ஆண்டுகள் அனுபவம் மிக்க சட்டத்தரணிகளாலும் சட்டக் கல்லூரி மாணவர்களாலும் வழிகாட்டல் வகுப்புகள் வழமை போல் ஆரம்பிக்கப்படுகின்றன.
இடம் : Taste of Jaffna Restaurant கருத்தரங்கு மண்டபம்
101, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு அண்மையில்)
காலம் : 22.01.2012 நேரம் : காலை 9மணி
மேலதிக விவரங்களுக்கு: 021 222 1322, 0773236239
பதிவுகளுக்கு : Taste of Jaffna Restaurant (22.01.2012 க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்) குறிப்பு: வயதுக் கட்டுப்பாடு இல்லை.
(C-7561)



பொருளியற் கல்லூரி யாழ்.நகர், இணுவில், பாரதி - சித்தன்கேணி
அரசியல் எஸ்.கோகுலன்
A/L 2014 Day Class
ஆரம்பமாகிவிட்டன
★மூன்று நிறுவனத்திலும் மாதம் 32 மணித்தியால வகுப்புகள்
★மீட்டல் வகுப்புக்கள், வினாவிடை வகுப்புக்கள், தொடர் பரீட்சைகள்
★போலியான நிறுவனங்கள் இயங்குவதனால் நாவலர் வீதி "பொருளியற் கல்லூரி" என்றும் ஆசிரியரின் பெயரினையும் கேட்டு வாருங்கள்
(12871)



**சுவிஸ் விசா**
சுவிஸிற்கு சுலபமாகச் செல்வதற்குரிய சட்ட ஆலோசனைகளுக்கு
திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
0212219016
(13016)



**இரசாயனவியல்**
Group மற்றும் Personal வகுப்புக்கள்
சி.அனோஜன்
தொடர்பு இல.: 0770781451



**A/L ICT 2014**
புதிய பிரிவு ஆரம்பமாகின்றது
Mr R.Kumaran-B.Sc. 0776577359



தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு
நெல்லியடி
MARSHA SYSTEMS (PVT) LTD
கணணி மற்றும் கணணி உதிரிப்பாகங்கள் அனைத்தும் அதிரடி விலைக்கழிவில்....
20000.00 மட்டும் செலுத்தி தவணைக்கட்டண முறையில் (எந்த விதமான வட்டியுமின்றி) கணணியொன்றினை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்..

| | Warranty |
|---|---|
| Intel 3.0 Ghz Dual core | 36 Months |
| Asrock G41MS | 36 Months |
| 2 GB DDR III | 36 Months |
| 250 GB Sata | 12 Months |
| 19" LCD view Sonic | 36 Months |
| UPS DCP | 12 Months |
| ATX Casing | 12 Months |
| DVD Writer LITEON | 12 Months |

FREE Kaspersky Internet Security 2012

DELL 4050
Intel Core i3-350M 2.1Ghz
2GB DDRIII SDRAM
320GB HDD 7200rpm
14.2" HD LED Display
முற்பணம் : 13000.00
தவணைப்பணம் : 5950.00
மீளளிக்கும் காலம் : 10 மாதம்
64000.00

Dongle Huawei: 3800.00 (speed 7.2)
Dongle D-Link : 4800.00
Moniter (View Sonic) LED : 11500.00
Printer Epson T13 : 4500.00
Printer Samsung laser ML-1666: 7000.00
Printer HP Laser 1102 : 10500.00
Flash 4 GB Kingston : 900.00
DVD Writer : 2600.00
UPS DCP : 3700.00

WOOFERS & SPEAKERS
A4TECH AS-317 : 2500.00
A4TECH AS-303 : 4200.00
A4TECH AS-316 : 4250.00
A4TECH XS-500 : 4500.00
5.1 Home Theater 8500W : 15000.00
Super Base Light Speakers 9000W : 13000.00

ஜனவரி 31 ம் திகதி வரை மட்டுமே !
இன்றே எமது காட்சியறைக்கு விரையுங்கள்
MMV Road, Nelliady TP NO : 021 4923561





வெவ்வேறு விதமான
நண்பன்
திரைப்பட ரீ சேர்ட்டுக்களை Print செய்து பெற்றுக் கொள்ளலாம்.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 567 6722



**கணினி மலிவு விற்பனை**
IBM Dual Core மற்றும் IBM LCD Monitor அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும் 31,750/= விலையில் விற்பனைக்கு உண்டு.
Free 4 GB Pen/Web cam
SKY Computer
162, பிரதான வீதி, யாழ். / 737, K.K.S. Road,
021 222 1417, 222 4865/0750698608
ஒரு வருட உத்தரவாதம் உண்டு.
மொத்தமாக RAM 1, II, III, Power S/Y உண்டு.
(C/7550)(5)



**வீடு விற்பனைக்கு**
கொடிகாமம் - A9 வீதிக்கு அண்மையில் (கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கும் - திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கும் இடையில்) ஏழு அறைகள், பல வாகனங்கள் தரிப்பிட வசதி மற்றும் நன்னீர்க் கிணறு, பயன்தரும் பல மரங்கள் கொண்ட காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0773926063


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நெஞ்சிலே பாயவரும் ஆயிரம் ஈட்டிகளுக்கு நான் அஞ்சுவதில்லை. ஆனால் ஓர் அறிஞரின் பேனா முனைக்குப் பயப் படுகிறேன்.
**நெப்போலியன்.**


# வார வசந்தம்

01

உதயன் 14 ஜனவரி 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு


# மீண்டெழுவார்களா புலிகள்...?



வன்னி இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகள் இறந்துவிட்டார்கள். தப்பியவர்கள் இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர். உள்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலையெடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று இராணுவத் தரப்பு அறிவித்தது. ஆனால், இன்று விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுக்க வாய்ப்பு இருக்கிறது என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இரண்டரை வருடங்களுக்கு முன்னர் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் இனிமேல் மீள எழுவது சாத்தியமில்லை என்றே இராணுவத் தரப்பு கூறிவந்துள்ளது. ஆனால் இன்று இப்படிக் கூறுகிறது. அதாவது வன்னியில் அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக புலனாய்வுத் தகவல் தெரிவிக்கிறது. தடுப்பு முகாமில் இருந்து வெளியேறிய முன்னாள் விடுதலைப் புலிகளையும் , விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகிச் சென்ற முன்னாள் போராளிகளையும் அந்தப் புதிய அமைப்பு அணுகியுள்ளதாகவும் புலனாய்வுத் தகவல் மேலும் தெரிவிக்கிறது. இந்த நிலையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் நடவடிக்கை தொடர்பாக கண்காணிக்கவுள்ளதாகவும், அதனைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இந்த இரகசியத் திட்டம் குறித்து தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண அரச அதிகாரிகளை உசாா்படுத்தியுள்ளாா்.

போராட்ட காலங்களில் விடுதலைப் புலிகள் இராணுவத்துக்கு எதிராகப் போராடும் போது தமது சக்திக்கு ஏற்றவாறு போராட்ட உத்திகளையும் பயன்படுத்தி போராடும் திறமை உள்ளவர்கள். போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் பின் நகர்வுகள் அவர்களின் வெற்றிக்குக் காரணமாகவே அமைந்தது. விடுதலைப் புலிகளின் இப்படிப்பட்ட போராட்ட உத்திகளைப் பார்த்து அமெரிக்காவே வியந்தது. ஆனையிறவு வெற்றி குறித்து புலிகள் போராடிய முறையை அமெரிக்கா இலங்கையிடம் கேட்டிருந்தது என்பது வெளிப்படை. அதாவது போராட்டத்தில் சிங்களப் படைகளின் கை ஓங்கும் போது பின் நகர்வு ஒன்றை மேற்கொண்டு தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள். பின்னர் இராணுவப் பகுதிக்குள் ஊடறுப்பு செய்து சிங்களப் படைகள் எதிர்பாராத விதமாக தாக்குதல்களை மேற்கொண்டு வெற்றி ஈட்டுவார்கள். குவிந்து வரும் சிங்களப் படைகளுடன் சிறிய அணியை வைத்து தாக்குதலை மேற்கொண்டு பெரும் வெற்றியை ஈட்டுவது என்பது போர் உத்தியிலேயே தங்கியுள்ளது. இப்படிப்பட்ட போர் உத்திகளை விடுதலைப் புலிகள் சிறந்த முறையில் கையாண்டார்கள். இந்தத் திட்ட முறைதான் விடுதலைப் புலிகளுக்குக் கூடுதலான வெற்றியை ஈட்டிக் கொடுத்தது. விடுதலைப் புலிகளின் பின் நகர்வுகள் பெரும் போருக்கு தயார்ப்படுத்துவதாக மக்கள் நினைக்கத் தோன்றும் அளவுக்கு விடுதலைப் புலிகளின் தாக்குதல் களம் இருக்கும்.

வலிகாமம் பகுதியில் நடந்த முன்னேறிப் பாய்தல், வன்னிப் பகுதியில் நடந்த ஜெயசிக்குறு படைநகர்வுகள் போன்ற தாக்குதல்கள் இந்த முறையையே சாரும். பின்நகர்வுகள் விடுதலைப் புலிகள் வரலாற்றில் வெற்றியைத் தந்தனவாகவே இருந்தன. வன்னி இறுதிப் போரில் பல நாடுகள் சிங்களப் படைகளுடன் ஒன்று சேர்ந்து விடுதலைப் புலிகளுடன் போராட்டத்தை மேற்கொண்டன. இந்தப் போரில் விடுதலைப் புலிகள் பின்னடைவுகளை தொடர்ச்சியாகச் சந்தித்து வந்தனர். அதாவது மன்னார் பகுதியூடாக முன்னேறிய படைகளால் கூடுதலான பின்நகர்வை விடுதலைப் புலிகள் சந்தித்தனர். இந்தக் காலப்பகுதியில்தான் முகமாலைப் பகுதியில் ஓர் அடிகூட சிங்களப் படைகளால் முன்னேற முடியாத அளவுக்கு சண்டை நடந்தது. முகமாலை சண்டையில் விடுதலைப் புலிகள் ''பெட்டி கட்டி அடித்தல்'' உத்தியை பயன்படுத்தினர். இந்த முறையில் முன்னேறும் படையினரை தமது வலைக்குள் வரவழைத்து மாட்டிக் கொள்ள வைப்பர். விடுதலைப் புலிகள் அமைத்த இந்த வியூகத்தில் படையினர் உள் சென்று விட்டால் அந்தப் பகுதியில் இருந்து மீண்டும் முன்னேறவும் முடியாமல் பின்நகரவும் முடியாமல் அகப்பட்டுவிடுவர். இந்த நிலையில் சண்டை வெடிக்கும். புலிகள் வெற்றி பெறுவார் கள். இதனால் படையினர் முகமாலைப் பகுதி ஊடாக முன்னேற முடியாமல் இருந்தனர்.

பரந்தன் சந்தியைப் படையினர் கைப்பற்றிய போதுதான் முகமாலைப் பகுதியை விட்டு புலிகள் பின் நகர்ந்தனர். தொடர்ச்சியாகப் பின் நகர்ந்த விடுதலைப் புலிகள் புதுக்குடியிருப்பையும் படையினர் கைப்பற்றிய போது ஆனந்தபுரத்தில் ஒன்று கூடி பெரும் தாக்குதலுக்கு ஆயத்தமாகினர். இதனை முந்திக் கொண்டு படையினர் தாக்குதலை நடத்தினர். எதிர்பார்த்திருக்காத புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள் அந்த இடத்திலியே மடிந்தனர். ஆனால் எத்தனை விடுதலைப் புலிகள் இந்தப் பகுதியில் நடந்த தாக்குதலில் இறந்தனர் என்ற விவரம் இதுவரை வெளியாகவில்லை. இந்தப் பகுதியில் இருந்து தப்பித்து புலிகள் சென்றதாக இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்படியாக வன்னியில் நடந்த இறுதி யுத்தத்தில் புலிகள் தப்பித்துச் செல்வதற்கே முயற்சி செய்தார்கள் என்ற செய்தியும் ஊடகங்களில் வெளிவந்தது. தடுப்பு முகாம்களில் இருந்து வெளியே வந்த முன்னாள் போராளிகள் இது சம்பந்தமாகத் தெரிவிக்கும் போது கடைசிக் கட்டடத்தில் தங்களை வழி நடத்த யாருமே இல்லாமல் போனதாகவும் தாங்களாகவே துப்பாக்கிகளை கீழே போட்டு விட்டு இராணுவத்திடம் சரணடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். சரணடைந்தவர்களில் கூடுதலாக புலிகளின் அரசியல் பிரிவு, நிதிப் பிரிவு, வளங்கள் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு போன்ற நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களாகவே அதிகம் காணப்படுகின்றனர். புலிகளின் இராணுவப் பிரிவு களமுனைகளில் இறந்ததா அல்லது தப்பித்து வெளியே சென்று விட்டதா என்று கூட இன்றுவரை தெரியாமல் உள்ளது. ஆனால் புலனாய்வுப் பிரிவினர் புலிகள் மீண்டும் வருவார்கள் என்று சொல்வதைப் பார்த்தால் தப்பித்து புலிகள் சென்றனர் என்றுதான் நம்ப வேண்டி இருக்கிறது. புனர்வாழ்வளிக்கப்பட்டு வெளியே வந்த முன்னாள் போராளிகள் மீண்டும் போராடு வதாக இல்லை. அவர்கள் போராட்டத்தை விரும்பவில்லை. அவர்கள் வாழ்வுக்கு திரும்பியுள்ளனர். தடுப்பு முகாமில் இருந்து வெளியேறிய முன்னாள் போராளிகளை இக்கட்டான சூழலுக்கு கொண்டு சென்று மீண்டும் அவர்களைக் கைது செய்யப் பார்க்கிறார்களா? பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இப்போது எந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதும் வெளிநாடுகளில் புலிகள் இன்னமும் தீவிரமாக செயற்படுவதாக எச்சரிக்கத் தவறுவதில்லை. ஆனால் அவர் கூறும் அளவுக்கு வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் எதையும் செய்வதாகத் தெரியவில்லை. புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட பின்னர் வெளிநாடுகளில் இருந்த புலிகள் பிரிந்து போயுள்ளனர் என்பது உண்மை. நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமராக இருக்கும் உருத்திரகுமாரன் தலைமையில் செயற்படும் அமைப்பு ஆயுதப் போர் ஒன்றுக்கான ஆற்றலைக் கொண்டதில்லை. நெடியவன், விநாயகம் போன்றோர் தலைமையில் வெளிநாடுகளில் இயங்குவதாகக் கூறப்படும் புலிகள் கூட வலுவான கட்டமைப்புடன் செயற்படவில்லை. மீண்டும் ஆயுதப் போராட்டத்தை நடத்துவதற்குத் தலைமை தாங்கும் ஆற்றலோ அல்லது வலிமையோ இருப்பதாகத் தெரியவில்லை. தலைமை தாங்குபவர்கள் என்று கூறப்படுவோர் வெளிநாடுகளில் எதையும் செய்யமுடியாமல் உள்ளனர். அண்மையில் கொழும்பில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றிய பேராசிரியர் றொகான் குணரட்ண, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கடற்படை, விமானப்படை, பீரங்கிகள் மோட்டார்கள், ஆயிரக்கணக்கான 56, ஏ.கே.47, ஜி.பி.எம்.ஜி. துப்பாக்கிகள் ஆயிரக்கணக்கான போராளிகளைக் கொண்டிருந்தும் தமிழீழத்தைப் பெற முடியவில்லை. இவற்றை எதையுமே கொண்டிராத நெடியவன் எவ்வாறு தமிழீழத்தைப் பெற்றுக் கொடுக்கப் போகிறார் என்று கேள்வி எழுப்பி இருந்தார். இந்த உண்மை அரசுக்கும், பாதுகாப்பு தரப்புக் கும் தெரியாத விடயமல்ல. ஆனாலும் விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுக்கவுள்ளனர் என்ற மாய விம்பத்தை உருவாக்க முனைகின்றனர் மீண்டும் புலிகள் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர் என்ற செய்தியானது அரசின் திட்டவட்டமான ஒரு உளவியல் போர் நகர்வாக இருக்கலாம். அல்லது மூன்று தசாப்த காலம் நடைபெற்ற விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் அச்ச உணர்வாக இருக்கலாம். அதாவது புலம் பெயர்ந்த விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களில் வடக்கு, கிழக்கில் எந்த ஒரு நடவடிக்கை யையும் மேற்கொள்ள முடியாமல் தடுப்பதற்குமான, தமிழ் மக்கள் சுயமாக ஒன்று கூடுவதைத் தடுப்பதற்கும் முயற்சியாக இதனைக் கருதலாம். போருடன் தொடர்பு பட்ட முன்னாள் போராளிகள் பலர், புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டாலும் அவர்கள் மீதான சந்தேகம் முற்றாக விட்டுப் போகவில்லை. அதனால்தான் அவர்களைத் தொடர்ந்தும் தமது கண்காணிப்பில் வைத்திருக்கிறது அரசு. தமிழர்களின் தீர்வு விடயத்தில் பின் நிற்கும் அரசு இதனால் காலப்போக்கில் மீண்டும் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளதாக சொல்லுகிறது. ஆனால் அப்படி பிரச்சினை இருக்கும் என்றால் எதற்காக தீர்வு விடயத்தில் அரசு பின்னடிக்கிறது என்பதுதான் புரி யாத புதிராக உள்ளது. பிரச்சினை மீண்டும் ஏற்படுமாக இருந்தால் தமிழர் தீர்பு விடயத்தில் அரசு முன் நின்று செயற்படும். நிரந்தரத் தீர்வை நடைமுறைப்படுத்தாது போனால் மீண்டும் மோதல்கள் ஏற்பட சாத்தியம் அதிகம் உள்ளது என்பதை நிரூபித்துள்ளன உலகவரலாறுகள். இதனைச் சுட்டிக் காட்டியே அமெரிக்கா அரசில் தீர்வை வலியுறுத்தி வருகிறது. போர் முடிவடைந்து மூன்றாண்டுகளாகப் போகின்ற நிலையில் அரசியல் தீர்வு எதையும் வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியும். வடக்கு, கிழக்கில் புலனாய்வுப் பிரிவுகள் உசார்ப்படுத்தப்பட்டிருக்கலாம். புலிகள் மீண்டும் போராட்டத்தை மேற்கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளுகிறார்கள். என்ற பூச்சாண்டியின் மூலம் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளைத் தீவிரப்படுத்தும் திட்டம் அரசிடம் இருக்கலாம். விடுதலைப் புலிகள் தப்பி இருந்தாலும் இப்போதைக்கு ஆயுதப் போர் ஒன்றை முன்னெடுக்கச் சாத்தியமில்லை அதற்கான தலைமைத்துவம் புலிகளிடம் இப்போது இல்லை. ஆனால் நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுமேயானால் இன்னொரு ஆயுதப்போர் பற்றிய அச்சம் உண்மையாகவே மாறிவிடலாம்.

**துன்னாலைச் செல்வம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (18)

**இராகு ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விவரங்கள் மேலும் தொடர்கின்றன.**

**பிறப்பு எண் 4 விதி எண் 7**

இவர்கள் தவறான வழியிலும், முறைதவறியும் போகமாட்டார்கள். குருட்டு அதிர்ஷ்டத்தை நம்பாதவர்கள். தைரியசாலிகள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1, 10, 19, 28, 6, 15, 24

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம், பச்சை

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

கோமேதகம், நீலக்கல், முத்து, வைடூரியம், சந்திரகாந்தக்கல், அக்கோமரின், ஜேட், ஓபல், டைகர்ஸ் ஐ

**பிறப்பு எண் 4 விதி எண் 8**

இராகு சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் தன்னம்பிக்கை மிக்கவர்கள். பூரணமான சுதந்திரப் பிரியர்கள். யாரிடமும் அனுசரித்துப் போகக் கூடியவர்கள். முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும்.

நண்பர்கள் இவர்களை எல்லா விசயமும் தெரிந்தவர்கள் என்று மதிப்பார்கள். கடினமான வேலைகளைச் சுலபமாக முடிப்பார்கள்.விவாதத்திறன் உடையவர்கள். ஆரம்பம் தோல்வியடைந்தாலும், விடா முயற்சி யால் வெற்றி பெற்றுவிடுவார்கள். எளிதில் இவர்கள் தவறுகள் செய்ய மாட்டார்கள். தோல்வியைக் கண்டு பயப்படமாட்டார்கள்.

**அதிர்ஷ்ட தேதிகள்**

1, 10, 19, 28, 5, 14, 23, 6, 15, 24

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம்

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

கோமேதகம், நீலக்கல், அக்கோமரின், இந்திர நீலக்கல், ஓபல்

**பிறப்பு எண் 4 விதி எண் 9**

இராகு செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் மிடுக்கான தோற்றமுடையவர்கள். மக்களிடம் செல்வாக்கு உள்ளவர்கள். மிக உயர்ந்த சிந்தனை வளமிக்கவர்கள். மனதில் நினைத்த காரியத்தைச் சாதிப்பார்கள்.

எல்லோரிடமும் எளிதில் பழகிவிடுவார்கள். நினைத்ததைச் சாதிக்க வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள். யாரிடமும் ஏமாற இவர்களை யாரும் ஏமாற்றவும் மாட்டார்கள்.கௌரவத்தைப் பெரிதாக மதிப்பார்கள். நினைத் ததைச் சாதிக்க வேண்டுமென்ற எண்ண முடையவர்கள். இரண்டு தார அமைப்பும் ஏற்பட்டு விடும். அயராத உழைப்பு மிக்கவர்கள். அதிகமாக உணர்ச்சி வசப்படுவார்கள். ஆதலால் நரம்புச் சக்தி குறைந்து நோய்வாய்ப்படக் கூடும்.


**அதிர்ஷ்ட தேதிகள்**

1, 10, 19, 28, 5, 14, 23, 6, 15, 24, 9, 18, 27

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம், சிவப்பு நிறம்,நீலம், சந்தனம்

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**



கோமேதகம், நீலக்கல், பவளம், அக்கோமரின், கார்னட், ப்ளட்ஸ்டோன், ஓபல்

**அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்**

இராகு ஆதிக்கத்தினர் தங்கள் பெயரை அதிர்ஷ்டகரமானதாக்க, இராகு, சூரிய ஆதிக்க எழுத்துக்களையும், விதி எண் சார்ந்த எழுத்துக்களையும் சரியான முறையில் முரண்பாடு இன்றி சேர்த்துப் பெயரமைக்க வேண்டும். கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக் கொண்டு வளமான வசியமான வாழ்க்கையைப் பெறலாம். 1ம் எண் பெயர்கள் மிகுந்த அதிர்ஷ்டத்தை நல்கும். 10, 19, 37, 46, 55, 82,73 போன்ற எண்களின் வரிசையில் பெயரமைக்கவும். நல்ல விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும். பெயரமைக்கும் போது மாத, வருட எண்களையும் கவனத்தில் கொண்டு பெயர் அமைக்கவும்.

**அதிர்ஷ்டப் பெயர் மாற்றம்**

| பிறப்பு எண் | கூட்டு எண் | அதிர்ஷ்டப் பெயர் எண் |
|---|---|---|
| 4 | 1 | 1, 5, 6 |
| 4 | 2 | 1, 5, 6 |
| 4 | 3 | 1, 5 |
| 4 | 4 | 1, 5, 6 |
| 4 | 5 | 1, 5 |
| 4 | 6 | 1, 5 |
| 4 | 7 | 1, 5, 6 |
| 4 | 8 | 1, 5, 6 |
| 4 | 9 | 5, 6 |

## எண் 5 (புதன்)

**(வியாபார வித்தகன்)**

5 ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 5,14,23 தேதிகளில் பிறந்தவர்களாவர். எந்தவொரு மாதமாக இருந்தாலும் மேற்கண்ட தேதிகளில் பிறந்தவர்கள் 5 எனும் புதன் ஆதிக்கத்தில் பிறந்தவர்களாவார்கள். எந்த துறையில் இவர்கள் நுழைந்தாலும் ஆராய்ச்சிகள் செய்யாமல் விடமாட்டார்கள்.

5ம் எண்ணில் பிறந்தவர்கள் அனைத்துத் துறைகளிலும் மிகச் சுலபமாக முன்னேற முடியும். பொதுஜன தொடர்புடைய தொழிலால் சிறப்படைவார்கள்.மிகுந்த சுறுசுறுப்புடன், திடகாத்திரமாக எந்தக் காரியத்திலும் இறங்கித் தன்னம்பிக்கையுடன் வெற்றி பெறுவார்கள். தேவையற்ற காரியத்தில் இறங்கி மாட்டிக் கொள்ள மாட்டார்கள். எப்பொழுதும் எச்சரிக்கையாகவே தன்னை உயர்த்தும் வழிகளில் செல்வார்கள்.

இவர்களை யாரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாது.பேச வேண்டிய இடத்தில் மிகவும் கவர்ச்சிகரமாகப் பேசி, அமைதியாக இருக்க வேண்டிய இடத்தில் அமைதியாக இருந்து, காரியம் சாதிப்பதில் வல்லவர்கள். பிறரைக் கவர்வதில் கைதேர்ந்தவர்கள். ஆடை, ஆபரணம், நறுமணப் பொருட்கள் விசயத்தில் மிகுந்த ஆர்வம் உடை யவர்கள்.


ஆழ்ந்த சிந்தனை வளமிக்கவர்கள். சுறுசுறுப்பானவர்கள்.கூர்மையான புத்தியுடையவர்கள். வாழ்க்கையின் தொடக்கம் முதலே முக்கியப் பிரமுகராக வலம் வருவார்கள். குழந்தைகள் போல அனைவரிடமும் எளிதில் பழகுவார்கள். எதையும் மறைத்து வைக்கத் தெரியாது. பிறர் செய்யாததைத்தான் செய்ய வேண்டும் என்று எண்ணுவார்கள். நாகரிகம் தெரிந்தவர்கள். நல்ல மனிதர்கள். எல்லோரும் பாராட்டும் செயலைச் செய்வார்கள்.நிலையாக ஒரு இடத்தில் இருக்கமாட்டார்கள்.

சுலபமாக பெரும்பணம் சம்பாதிப்பதிலேயே குறிக்கோளாக இருப்பார்கள்.எத்தொழிலிலும் செல்வந்த ராகும் யோகமுடையவர்கள். புதன் ஆதிக்கப் பெண்கள் சபல புத்தியுடையவர்கள். திருமணவிடயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

9 ம் எண் ஆதிக்கத்தில் பிறந்த நபர்கள் இவர்களை எளிதில் கவர்ந்து விடுவார்கள்.

(தொடரும்)

# மக்கள் முகம்



மீசாலைக் கிழக்கைச் சேர்ந்த சதாசிவம் துளசிதாசன் அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் அகில இல்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் ஆங்கில பாட ஆசிரியராக கடமையாற்றுகிறார்.

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணிப்பட்டமும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டமும் பெற்று தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா முழுநேரக் கற்கை நெறியினைத் தொடர்ந்து வருகிறார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சமூக அமைப்புகள் பலவற்றுடன் இணைந்து செயற்படுபவராவார்.

நாயன்மார்கட்டு வீதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தபால் திணைக்கள உத்தியோகத்தரும் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானுமாகிய இளையதம்பி மயில்வாகனம் அண்மையில் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச் சினால் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் தலைவரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் கிழக்கு பிரிவின் தலைவரும் ஆயுட்கால உறுப்பி னரும் கோப்பாய் அஞ்சல் அலுவலக அபிவிருத்தி ஆலோசனைக் குழு உறுப்பினருமாவார்.

மேலும் சிறந்த சமூக ஆர்வலரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்மாவட்ட கிளையின் பரப்புரை உத்தியோகத்தரும் இருபாலை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் துணைச் செயலாளரும் மூத்த பத்திரிகையாளரும் யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனுமாவார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி கற்று மாவட்ட கல்விப் பணியில் பல்வேறு பணிநிலைகளில் பணியாற்றி முப்பத்தாறு ஆண்டுகள் அளப்பரிய சேவை புரிந்து கடந்த 9 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார் கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சின்னராசா.

1989 ஆம் ஆண்டு தரம் I அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று கிளிநொச்சியில் போட்டிப் பரீட்சை மூலம் தரம் I அதிபர் பதவியைப் பெற்றார்.

1992 இல் வட்டக்கச்சி ம.வியின் அதிபராகவும், வட்டக்கச்சி கொத்தணி அதிபராகவும் கடமையேற்றுப் பணியாற்றினார்.

1995 ஆம் ஆண்டு கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்ட போது கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்றும் அதே ஆண்டிலேயே கல்வி முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிந்தார். 2002 ஆம் ஆண்டில் நிர்வாகத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்றார்.

இவ்வாறு கல்விப் புலத்தில் கடமையாற்றிய காலத்தில் 1993 இல் இருந்து 2008 வரை தேசிய கல்வி நிறுவனத்தின் கிளிநொச்சிப் பிராந்திய நிலைய கல்வி மாணிக் கற்கை நெறியின் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

அத்துடன் பல்வேறு சமூகப் பணியிலும் மாவட்ட அபிவிருத்திப் பணியிலும் முன்னின்று செயற்பட்டுள்ளார்.

## வேலணைப் பிரதேச சபையின் செயலாளராக ரமேஷ் நியமனம்

வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்பின் பேரில் தீவகம் தெற்கு-வேலணை பிரதேச சபையின் புதிய செயலாளராக செ.ரமேஷ் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்


வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ளூராட்சி உதவியாளராகவும் பின்னர் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டத்தில் (இரணைமடு) சமூகவியல் நிபுணராகவும் பணியாற்றிய இவருக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி வேலணை பிரதேச சபையின் புதிய செயலாளர் செ.ரமேஷுக்கான நியமனக் கடிதத்தை வழங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைப் பாம்பும் மான் குட்டியும்

குறட்டி என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூட பயப்படும். இருபது அடிக்கும் நீளமாக, மரங்களின் கிளைகளில் படர்ந்து இருக்கும் அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமையாக இருந்தன.

கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள் இருக்குமே தவிர இப்படி லட்சணமான கரும்புள்ளிகளுடன் பார்ப்பது மிகவும் அரிது. மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முறல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சில சமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக் கூடத் தாக்கும்.





ஆனால் குறட்டி சற்று வித்தியாசமானது. காட் டெருமைக்கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குறட்டிப்பிடியில் நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு குறட்டி என்று பெயர் வழங்கி வந்தது. குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது. மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான் குட்டி அதன் கண்ணில் பட்டது. நீண்டு கிடந்த தனது உடலை வேகமாக தன்னை நோக்கி இழுத்தது. அநேகமாக அந்த மான்குட்டி மிகவும் குறுகலாக ஓடும். அந்த ஆற்றைக் கடந்து வரலாம். அப்படிக் கடந்து வந்தால் குறட்டி இருக்கும் வழியாகத்தான் வரவேண்டும். அந்த மிளா மான் ஆற்றில் இறங்கியது. குறட்டியில் வாயில் நீர் சுரந்தது. மீதமுள்ள குறட்டி தனது உடலை கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் மீது இருந்தது.

ஆற்றில் மான் நீந்தியது. இதே மரத்திலிருந்துதான் குறட்டி ஒரு நாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது. ரப்பர் போன்ற தனது உடம்பை கயிறு போல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமடவென்று முறிந்தன. மான் கரையேறி விட்டது. குறட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்துக்கு அருகில் வந்த பாதையில் சுற்றிப் பார்த்தபடி நடந்து வந்தது அந்த மான். சொல்லி வைத்ததுபோல் அந்த மரத்தடியில் வந்து நின்றது குறட்டி. மான்குட்டியின் கழுத்தில் மாலையாய் விழுந்தது.

அம்மா என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது. குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்தது. பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி ரப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றியது. மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

**(தொடரும்)**

## மூன்றெழுத்தில் வாழ்க்கை

**உலகில் உள்ள உயிர் மூன்றெழுத்து**
**உயிரை இயக்கும் சக்தி மூன்றெழுத்து**
**சக்தியின் வடிவம் அன்னை மூன்றெழுத்து**
**அன்னை காட்டும் அன்பு மூன்றெழுத்து**
**அன்பை உயர்த்தும் அறிவு மூன்றெழுத்து**
**அறிவை வளர்க்கும் பள்ளி மூன்றெழுத்து**
**பள்ளியில் கற்கும் கல்வி மூன்றெழுத்து**
**கல்வியால் உருவாகும் பதவி மூன்றெழுத்து**
**பதவியை சிறப்பிக்கும் இளமை மூன்றெழுத்து**
**இளமை தரும் மணம் மூன்றெழுத்து**

**நா.பிரயதர்சினி**
**தரம்-7 டி, வேம்படி ம.உ.பாடசாலை.**


## கானா




மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடாகும். இதன் மேற்கே ஐவரி கோஸ்ட்டும், கிழக்கே டோகோவும் வடக்கில் மால்ட்டாவும், தெற்கே கினி வளை குடாவும் உள்ளன. இதன் தலை நகர் அக்ரா, இரண்டு லட்சத்து முப்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து சதுர கிலோ மீற்றர் பரப்பளவு உடையது. இங்கு வசிக்கும் மக்கள் ஆங்கிலம் மற்றும் ஒன்பது தேசிய மொழிகளை பேசும் ஆற்றல் உடையவர்கள் ஆவார். இருப்பினும் எழுத்தறிவு 74.8% ஆகும். இவர்கள் கிறிஸ்தவம், இஸ்லாம், பழங்குடி மதம் ஆகியவற்றை பின்பற்றுகின்றனர். கொக்கோ, உற்பத்தி செய்வதில் முதல் இடம் பிடித்துள்ளனர். இவற்றை விட பருப்பு, வாழை, கோப்பி, சோளம் போன்றவற்றைப் பயிரிடுவதுடன் பனம் பொருள்களையும் உற்பத்தி செய்கின்றனர். அலுமினியம், இலகுரகத் தொழில் புரிவதிலும் வல்லுநராக காணப்படுகின்றனர்.

**சா.ஜிந்துஜா,**
**கோண்டாவில்.**

## அரிவாள் மூக்கன்





அரிவாள் மூக்கன் என்பது நீண்ட கால்களையும் வளைந்த அலகையும் கொண்ட ஒரு பறவை இனம். இதன் அலகு வளைந்து அரிவாள் போன்று தெரிவதால் இந்தப் பெயர் பெற்றது. கூட்டமாக இரை தேடும் இந்தப் பறவைகள் சேற்றில் வாழும் உயிரினங்களைத் தின்கின்றன. மரங்களில் கூடு கட்டி வாழ்கின்றன.




மன்னார் சாவக்கட்டு ஹல்லாறி முன்பள்ளியின் ஒளி விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் இடம்பெற்ற முன்பள்ளி மாணவர்களின் குழு நடனத்தைக் காணலாம்.

## மாதங்களின் பெயர் வந்த கதை

**ஜனவரி - சொர்க்கத்தின் வாயிற் காப்போனாகிய (Janus) என்பவரின் பெயரால் அழைக்கப்படுகின்றது.**
**பெப்ரவரி - பாவங்களுக்குப் பரிகாரம் தேடும் கால் பெப்ருவாலியா (Februalia) என்பர்.**
**மார்ச் - யுத்த தேவதையான மார்ஸ் (Mars) என்பவரின் பெயரால் அழைக்கப்படுகின்றது.**
**ஏப்ரல் - ஏப்பிறிரே (Aperire) என்ற லத்தீன் வார்த்தை, அதன் அர்த்தம் - மலர்வு அரும்புதல்.**
**மே - தாவரங்களை வளரவைக்கும் தேவதையான மேய்யா (Maia) வின் பெயர் ஆகும்.**
**ஜூன் - ஜூவனின் (Juvenis)**
**ஜூலை - யூலியர் சீஸரின் பெயர் ஆகும்.**
**ஒகஸ்ட் - முதலாவது ரோமானியச் சக்கரவர்த்தி ஆகஸ்தஸ்சின் (Augustus) பெயராகும்.**
**செப்ரெம்பர் - லத்தீன் வார்த்தை செப்ரம் (Septem) அதன் அர்த்தம் ஏழு.**
**ஒக்ரோபர் - லத்தீன் வார்த்தை ஒக்டோ (Octo) அர்த்தம் எட்டு.**
**நவம்பர் - லத்தீன் வார்த்தை நவம் (Novem) அர்த்தம் ஒன்பது.**
**டிசெம்பர் - லத்தீன் வார்த்தை டிசம் (Decem) அர்த்தம் பத்து**

**வி.லோகினி**
**ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுமணம் கமழும் சந்தன மரம் மகிமை காண்பீர்!



வையகத்தில் கற்பனைக் கோடான பூமத்திய ரேகையை(EQUATOR) அண்டிய நாடுகளில் தான் சந்தன மரம் மிகச்சிறப்பாக வளருகின்றது எனலாம். ஆன்மிகவாதிகள் நீங்கலாக ஏனைய பொதுமக்களுக்கு சந்தனம் தினமும் அவசியமான மங்கள விழாக்கள், இந்துக்களின் சுவாமி அனுட்டானங்கள், ஆலயங்களில் நிகழும் நித்திய பூஜைகள் என்பனவற்றுக்கு சந்தனம் அவசியம் பயன்படுகிறது எனலாம்.

நறுமணம் கமழும் சந்தனத்தை இந்துக்கள் அனைவரும் பொட்டுவைத்துக் கொள்வதுடன் கைகளிலும் கழுத்திலும் அவ்வப்போது பூசிக்கொள்வது வழக்கம். இயற்கைச் சந்தனத்தை சந்தனமரக்கட்டைகளை அரைத்துப் பெற்றுக் கொள்ள முடியும். நன்கு விளைந்த சந்தன மரத்திலிருந்து பெறப்படும் சந்தனம் அதிக நறுமணம் கமழும்.

வெப்பநாடுகளில் பயிராகும் சந்தனமரம் அருகிலுள்ள தாவரங்களிலிருந்து பெருமளவு சத்துப் பொருள்களை இரகசியமாக உறுஞ்சும் தன்மை கொண்டது. எனவே இது ஒரு ஒட்டுண்ணி(PARASITE) வகைத் தாவரமெனவும் கொள்ளலாம்.

சந்தன மரங்களின் இலைகள் மெலிந்தும், முனையில் கூராகவும், பூக்கள் சிறிதாகவும் சிவப்பு நிறமுடையதாகவும் காணப்படுகின்றன. கொத்துக் கொத்தாக மலரும் செம்பழுப்பு நிறத்திலிருந்து சிவப்பு நிறமாக மாறிக்கொண்டே வரும். நன்றாக விளைந்த சந்தன மரத்திலிருந்து பெறப்படும் பயன் தரக்கூடிய பிரதானமான ஒரு பொருள் சந்தனத்தைலம் ஆகும். இதிலிருந்து வாசனைத்திரவியம், சோப்பு மருந்துகள் வகைகள் தயாரித்து விற்பனைக்கு அறிமுகப்படுத்தும் பழக்கம் தமிழ் நாடு, கர்நாடகம் போன்ற பகுதிகளில் அவ்வப்போது நடைமுறையிலுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்துக்களும் அனேகமான பௌத்தர்களும் தம் மதச்சடங்குகளில் சந்தனத்தைப் பயன் படுத்துகின்றனர். அதேவேளை சித்திர வேலைப் பாடுகளுடன் கூடிய பெறுமதிவாய்ந்த சிலைகளும் செதுக்குவதற்கு சந்தனமரம் பயன்படுகிறது. அத்துடன் அழகிய பேழைகள் முக்கியமான ஆவணங்களைப் (DOCUMENTS) பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கான சிறு அலுமாரிகள் போன்றவற்றை சந்தன மரத்திலிருந்து தொழில்நுட்ப யுக்தியைப் பயன்படுத்தி பரிணமிக்கச் செய்கின்றனர்.

சந்தனமரம் சிறப்பாக தென் இந்தியாவில் மைசூர், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களிலும், தூரகிழக்கு நாடுகளிலும், ஆஸ்திரேலியாவிலும் செழித்து வளருகின்றது.

இந்து பௌத்த நாடுகளில் நாட்டின் தலைவர், சமய குரவர், ஞானி, சித்தர்கள் போன்றவர்கள் உயிர்நீத்தால் அவர்களுடைய வெற்றுடலைத் தகனம் செய்யும் போது விலையுயர்ந்த சந்தன மரக்கட்டைகளையே பயன்படுத்துகின்றனர்.

''எப்போ முடிந்தகாரியம் முழுதும் உண்மை'' என்ற அருள்வாக்கை தமிழ் மக்களுக்கு புரியவைத்தவரான யோகசுவாமிகள் கூட உயிர் நீத்த பின்னர் சந்தனக் கட்டைகளில் எரியூட்டப்பட்டு அக்கினிக்கு சங்கமமானார் என்பது வரலாற்று உண்மை.

உலகெங்கும் சந்தன மரத்தின் மகிமை பரவலாக வியாபித்துக் கொண்டிருப்பதற்கு அதன் நறுமணம் கமழும் தன்மையே பிரதான காரணமெனலாம்.

- அருணா



ந.சுந்தரம்பிள்ளை

# நாடகம் எழுதுவது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாடகம் எந்த இடத்தைக் களமாகக் கொண்டு எழுதப்படுகிறதோ, அந்த இடத்துப் பேச்சு வழக்கிலேயே உரையாடலை எழுதுவது நல்லது. அது அந்தப் பாத்திரத்தை அந்த மண்ணுக்கே உரியவன் என்று இனம் காட்டுவதுடன், நாடகத்துக்கும் ஒரு நம்பகத்தன்மையைக் கொடுக்கும். அந்தப் பாத்திரங்களின் குணாம்சங்கள், கல்வி அறிவு, திறமைகள் முதலியவற்றையும் பேச்சு வழக்கே காட்டி நிற்கும். நாடகப் பாத்திரங்கள் தங்களுக்கே உரிய இயல்பான பேச்சு வழக் கிலேயே தாங்கள் சொல்ல வந்தவை எல்லாவற் றையும் இலகுவாகவும் திறம்படவும் வெளியிடும். பேச்சு வழக்கு உரையாடலை எழுதுவது எளிது. பேசி நடிப்பது இனிது!

**கருத்து:**

கருத்துள்ள நாடகமும் எழுதலாம் கருத்தில்லா நாடகமும் எழுதலாம். கருத்து நாடகத்துக்கு ஓர் ஒளியைக் கொடுத்து அதன் தரத்தையும் உயர்த்தும். பார்ப்பவர்களும் வாசகர்களும் அதனால் பயன் பெறுவர். கருத்தில்லா நாடகம் வெறும் பொழுது போக்காகவும், கேலிக் கூத்தாகவும் காட்சியளிக்கும். ஆசிரியர், அந்தக் கருத்து வாசகர் மனதில் நன்கு பதியும்படி செய்ய வேண்டும். நெற்றிப் பொட்டில் அடித் தாற் போல கருத்தை நேரடியாகச் சொல்லாமல், கதை முழுவதிலும் அதைச் செறிந்து கிடக்கச் செய்து, வாசகரை அதை உய்த்துணர வைப்பதே சிறந்த நாடகத்துக்கு அழகு!

**முடிவு:**

சிறுகதையைப் போலவே நாடகத்துக்கும் முடிவு கொடுக்கலாம். கொடுக்காமலும் விடலாம். ஒரு முடிவு கொடுத்தால் வாசகர்கள்/ பார்வையாளர்கள் திருப்திப்படுவர். முடிவு கொடுக்காமல் முடிக்கு[ம்] பொழுது பல கேள்விக் குறிகள் தோன்று[ம்]. அவை பார்வையாளரைச் சிந்திக்கவும் செ[ய்] யும். முடிவு கொடுத்தாலும், ஒரு நா[ட]கத்தில் எல்லாவற்றையும் சொல்லி முடிக்[க] முடியாது. பல அந்தரத்தில் தொங்கத் தா[ன்] செய்யும். நாடகாசிரியர் சொல்கின்ற வி[ட]யங்கள் வாசகர் மனதில் நன்கு பதி[ய] வேண்டும். சொல்லாது விடுகின்ற வி[ட]யங்களும் வாசகர்களது மனதில் அதிர்[வ]லைகளை எழுப்பி, அவர்களைச் சிந்திக்க[ச்] செய்யவும் வேண்டும். நாடகம் முடிந்[த] பின்பும் நாடகத்தில் வந்த விடயங்க[ளை]ப் பற்றி பார்வையாளர்களைச் சிந்திக்க[ச்] செய்யும் நாடகங்களே, சிறந்த நாடகங்க[ள்] என்று பாராட்டப்படுகின்றன!

**நாடகம் எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொடுக்க முடியாது**

நான் சிறுகதை எழுதுவது கட்டுரையி[ல்] கூறியதையே இங்கே திரும்பவும் கூறு[கி]றேன். நாடகங்கள் பற்றி விளக்கிக் கூ[ற]லாம். அதன் சிறப்புகளைப் புகழ்ந்துரை[க்]கலாம். ஆனால் நாடகம், எழுதும் ஆ[ற்]றலை ஒருவர் இன்னொருவருக்குக் கற்று[க்] கொடுக்க முடியாது! உலகத்தில் நாடக[ம்] பற்றிப் பேசுபவர்கள் பலர் இருந் தார்கள்[,] இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனா[ல்] நாடகாசிரியர்கள் ஒரு சிலரே! உங்[க]ளுக்குக் கருவிலே திரு இருந்தால் தா[ன்] உங்களால் இலக்கியம் படைக்[க] முடியும்! யார் கண்டது அந்தத் திறமை[] உங்களுக்குள் ஒளித்துக் கொண் டிருக்கலா[ம்]. நல்ல நாடகங் களைத் தேடி எடுத்[து] வாசியுங்கள், தொடர்ந்து எழுதுங்கள்[.] வெற்றி கிடைக்கலாம்.

(முற்றும்)

# வெற்றி

-பாஷோவின் கரும்பல[கை]

ஓர் இடத்தில் நிலத்தினை மக்கள் பலர், பல்வேறு உபகரணங்களோடு தோண்டிக்[...]
பாஷோ அந்த இடத்தைக் கடந்து செல்லும் போது கேட்டார்.
''என்ன தோண்டுகிறீர்கள்?''
''இந்த இடத்தில் தங்கம் கிடைக்குமென்று ஒரு பெரியவர் சொன்னவர். அ[...]கிறோம்...''
பாஷோ புன்னகைத்துக் கொண்டே போய்விட்டார்.
சில நாட்கள் கழித்து மறுபடியும் பாஷோ அந்த இடத்தைக் கடந்தபோது கவ[...]
இப்போதும் சிலர் தோண்டிக் கொண்டிருந்தார்கள்.
''தங்கம் கிடைத்ததா?...''



''இல்லை..''
''நிறையப் பேர் தோ[...] எங்கே மீதி ஆட்கள்?''
''கொஞ்ச நாள்[...] போய்விட்டார்கள்...''
பாஷோ புன்னகைத்[...]
சில வாரங்கள் கழிந்த[...]
பாஷோ அந்த இடத்[...]
அங்கே இப்போது இ[...] கொண்டிருந்தார்கள்.
''தங்கம் கிடைத்ததா?''
''இல்லை...''
''தங்கம் இங்கே [...] செய்துவிட்டுப் போய்வி[...]''
பாஷோ அந்த இருவ[...]
''உங்களுக்கு இன்[...] இவ்வளவு ஆழமாகத் [...] தரைதானே இருக்கிறது?''
ஒருவன் ''பார்க்கலாம்[...]''
மற்றவன் ''இதைவிட வேறு வேலையே இல்லை...'' என்றான்.
பாஷோ அடுத்தவாரம் அங்கே வந்தார்.
ஒருவன் தோண்டிய இடத்தில் தண்ணீர் பெருகி வந்தது. அவன் பாஷோவைப் பார்த்[...]
''எதையோ தேடப் போக நல்ல தண்ணீர் கிடைத்து விட்டது... இது போதும்...''
பாஷோ கிளம்பிவிட்டார்.
பாஷோ பிறகு வெவ்வேறு வேலையாக அவனைக் கடக்கும் போதெல்லாம் கவ[...]
அவன் மட்டும் தனியாக அந்த இடத்தைத் தோண்டிக் கொண்டிருந்தான் பல நாள்[...]
ஒருநாள் காலை பாஷோ அவனைக் கடக்கும் போது அவன் உற்சாகக் கூச்சலிட்[...]
''பாஷோ.. இங்கே பாருங்கள்... தங்கம்..''
நீண்ட, கடுமையான தோண்டலுக்குப் பிறகு அவன் அந்தத் தங்கத்தை அடைந்தி[...]
''பாஷோ... என் கஷ்டமெல்லாம் இனி போய்விடும்...''
பாஷோ புன்னகைத்தார்.
'ஆம்.. போய்விடும்... அது இயற்கையின் விதி..''

# நுளம்பார் படுத்தும் பாடு

எங்கும் நுளம்பார் என்பதே பேச்சு
இப்போ அவரின் இராச்சியம் ஆச்சு
தங்கும் இடமோ வசதி யாச்சு
தாராளமாகத் தருகிறார் குத்து

மங்களப் புகழே அவருக்கு இப்போது
மரண தண்டனை தருகிறார் தற்போது
எங்கள் இரத்தம் குடிப்பதில் ஆசை
ஏனோ நுளம்பார்க்கு இத்தனை மோகம்

ஒன்றா இரண்டா எத்தனை குத்து
ஒவ்வொரு தரமும் நாம்படும் பாடு
நன்றாய் தருகிறார் டெங்கு மலேரியா
நாசமான யானைக் கால்நோய்

இன்றே அவரைப் பூண்டோடழிக்க
ஏதாவது ஒரு வழியும் இல்லையா


என்றுதான் எங்கள் விஞ்ஞானிகளால்
இதற்கு மருந்து கண்டுபிடிபடும்

நுளம்பாரை யொழிக்க நுளம்புத்திரி
நுளம்பு வலையென் றெத்தனை
சாதனம்
அளவே இலாது உற்பத்தியாகும்
அருமையான படைப்பு இதுதான்

மளமளவென்று மனிதனை மொய்த்து
மகிழ்ந்து இரத்தம் குடிப்பார் நுளம்பார்
வளமான வாழ்வைச் சிதைக்கும்
நுளம்பார்க்கு
வழங்குவோம் மரண தண்டனை
நாமே.

கவிஞர்.வயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- மணி

# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஹரிப்பிராகையில் சியாம கங்கையும் ஜலந்தர் கங்கையும் சங்கமமாகும் இடத்தைப் பார்வையிட்ட பின்னர் அங்குள்ள பல ஆலயங்களைத் தரிசித்து வணங்கிய பின்னரே கௌரி குண்டத்தை அடைந்தோம்.


நாம் சென்றவேளை மழை பெய்து கொண்டிருந்தது. அதனைப் பொருட்படுத்தாமல் கடுங்குளிரின் மத்தியிலும் கௌரி குண்டத்தில் சுடுநீரில் நீராடி அதன் அருகில் உள்ள பார்வதி அம்பாள் ஆலயத்தின் மூலஸ்தானத்திலுள்ள கௌரி சங்கர்,லக்ஷ்மி நாராயணர், அன்னபூரணி, விநாயகர், கருடன் ஆகியோரைத் தரிசித்து வணங்கிய பின்னர் இரவுப் பொழுதை விடுதியில் கழித்தோம்.

### கேதாரநாத்

இமாலயத்திலுள்ள நாற்படை புனித தலயாத்திரையின் போது மூன்றாவதாகத் தரிசிக்க வேண்டிய இடம் கேதாரநாத் ஆகும். இது 3591 மீற்றர் (11970 அடி) உயரத்தில் அமைந்துள்ள மலைக்கோயிலாகும்.

கௌரிகுண்டத்திலிருந்து 14 கிலோமீற்றர் தூரம் ஏறக்குறைய 5500 அடிகள் உயரத்திற்கு மலையேறியே கேதாரநாதனைத் தரிசிக்க முடியும். இத்தூரத்தை குதிரைகள் மூலமோ அல்லது நடந்து மலையேறியோ செல்லலாம். நாம் குதிரைகள் மூலமே செல்வதற்கு தீர்மானித்து ஒழுங்குகள் செய்தோம்.

மறுநாள் அதிகாலையிலேயே குதிரைக்காரர் எமது விடுதிகளுக்கு வருகை தந்து எம்மைத் துயிலெழுப்பி விட் டார்கள். அப்போதும் மழை பெய்துகொண்டே இருந்தது. நாம் கௌரிகுண்டத்திற்குச் சென்று சுடுநீரில் அசதிதீர நீராடினோம். பின் கௌரிகுண்டத்தின் அருகே அமைந்திருந்த பாலத்தைக் கடந்து குதிரைகள் மூலம் கேதாரநாத்தை நோக்கிப் புறப்பட்டோம்.



குதிரையில் இருந்து பயணம் செய்வது எமக்கு முதல் அனுபவமாக இருந்ததால் பெரும் அச்சத்துடனேயே பிரயாணத்தை மேற்கொண்டோம். ஒரு புறம் ஆழ்ந்த பள்ளத்தாக்கு அதனூடே மந்தாகினி சீறிப் பாய்ந்து ஓடுகின்றாள். மறுபக்கம் மலைச் சாரலின் கற்கள் இடையிடையே தலைநீட்டிக் கொண்டிருந்தன. இவை எமது தலையைக் காயப்படுத்தி விடுமா என்ற பயம். இதனால் மிகவும் அவதானமாகவே செல்ல வேண்டி இருந்தது. எமது உடல் உளம் எல்லாம் கேதாரநாதனையன்றி வேறு ஒன்றையும் சிந்திக்காத நிலையிலேயே இருந்தோம். குதிரை சற்றுக் கால் சறுக்கி வலது பக்கம் விழுமாயிருந்தால் அதில் பிரயாணம் செய்தவரின் எலும்புகளைக்கூடப் பொறுக்கி எடுக்க முடியாத நிலை. அவை அதள பாதாளத்தில் விழுந்து மந்தாகினி அழைத்துச் சென்றுவிடுவாள். ஏதோ கேதாரநாதனின் அருட்கடாட்சமே எந்தவிதமான விக்கினமும் இல்லாமல் அவனுடைய திருவடியை வணங்க அழைத்துச் சென்றது என்றே கூறலாம்.

வழியில் பல நீர்வீழ்ச்சிகள் மூலம் நீர் கொட்டிக் கொண்டிருந்தது. நாம் முன் கூட்டியே பொலித்தீன் மழை அங்கிகளை வாங்கி அணிந்த வண்ணம் சென்றதால் மழையினால் எமக்கு எவ்விதக் கஷ்டங்களும் ஏற்படவில்லை. சில இடங்களில் குதிரைகளுக்கு தீனிகளும், தொட்டிகளில் குடிப்பதற்கு தண்ணீரும் வைக்கப் பட்டிருந்தன.

இவ்விடத்தில் குதிரைகள் முட்டி மோதும் போது பயப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இடையிடையே சிற்றூண்டிச் சாலைகளைக் கண்டவுடன் குதிரைச் சேவகர்கள் எம்மை இறக்கி தேநீர் அருந்தி இளைப்பாற உதவினார்கள்.

வழியில் சீடுவாலா என்ற இடத்தில் சிறிய வைரவர் ஆலயத்தையும், பீம்பலி என்ற இடத்தில் பாண்டவர்களுள் ஒருவரான பீமனின் சிலையையும், கருடச்சட்டி என்ற இடத்தில் கருட பகவானின் விக்கிரகத்தையும் தரிசித்து வணங்கி மேலே சென்ற போது 'கேதாரநாத் மகாராஜ்கி ஜெய்' என்ற கோஷம் கேட்டு நாமும் பார்த்த போது கேதாரநாத் தரிசனம் முதலில் தென்பட்டது.

(தொடரும்)

# வரலாற்றுச் சிறப்புமிக்க சிவ தொண்டன் நிலையம்




மீன்பாடும் தேன் நாடாகத் திகழ்வது கிழக்கில் அமைந்துள்ள மட்டக்களப்பு ஆகும். இங்கு இயற்கை வளம் நிறைந்த ஏறாவூர்ப்பற்றில் செங்கலடிச் சந்தியிலிருந்து சுமார் ஐநூறு மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது தான் 'செங்கலடி சிவதொண்டன் நிலையம்'. எனவே இந்த நிலையத்தின் தோற்றம், வரலாறு, ஆன்மிகப் பணிகள் என்பவற்றை விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.

''சிவதியானம் தான் ஒருவனைப் பாக்கியவனாக்கும். மற்றவை எல்லாம் பிரயோசனம் அற்றவை, எனவே இடைவிடாது சிவதியானம் செய்!'' என்பது யோக சுவாமிகளின் கூற்றாகும்.

இலங்கையில் தோன்றிய சிவஞானிகளின் பட்டியலில் யோகசுவாமிகள் முன் வகித்தார் என்பது கண்கூடு. சுவாமிகளின் திருவுளப்படிதான் கிழக்கில் சிவதொண்டன் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

1965 ஆம் ஆண்டு இந்நிலையம் சிவ தொண்டன் சபையினரால் நிர்மாணிக்கப்பட்டது.

நம்நாடு 1948 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடம் இருந்து, சுதந்திரம்(INDEPENDENCE) பெற்றுக் கொண்டதை நாமறிவோம். சோல் பரியாப்பு தயாரிப்பதற்கும் சுதந்திர பிரகடன நிகழ்வில் கலந்து கொள்வதற்குமாக சோல்பரி பிரபு அவ்வப்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இங்கிலாந்திலிருந்து மேற்கொண்ட பயணத்தின் போது சோல்பரிப்பிரபுவின் மகனான லோர்ட் ராம்ஸ் போதமும் தந்தையாருடன் இணைந்து கொண்டார்.

இங்குவந்த லோர்ட் ராம்ஸ் போதம் அவர்கள் இந்துமத சம்பிரதாயங்கள், கோட்பாடுகள் என்பவற்றால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். இதன் பிரகாரம் 1968 முதல் 77 ஆம் ஆண்டு வரை இவர் செங்கலடி சிவதொண்டன் நிலையத்தின் பிரதான பரிபாலகராக விளங்கினார் என்பதையும் அறியமுடிகின்றது.

இவரைக்கிழக்குவாழ் சைவப்பெருங்குடியினர் 'வெள்ளைக்கார சுவாமி' என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைத்தனர். இவருக்கு சந்தசுவாமி என்ற நாமமும் சூட்டப்பட்டது.

சிவ தொண்டன் நிலையத்தில் 1965 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் முதல் நாளன்று, கால்கோல்விழா சம்பிரதாய முறைப்படி இனிதே நடைபெற்றது. இதற்கு யோகசுவாமிகளின் அடியார்கள் பூரணபங்களிப்பை நல்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவ தொண்டன் நிலையத்தின் நிர்மாணம், அக்காலகட்டத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிவபக்கத்தர்களுக்கு ஒருவரப்பிரசாதமாக மிளிர்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. இதனையடுத்து வெள்ளைக்கார சுவாமியாகிய ராம்ஸ்சந்த சுவாமிகள் செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் நிலை கொண்டிருந்த யோகசுவாமிகளின் அடியார்களுக்கு சிவபக்தியைப் போதித்தார்.

இனி சிவ தொண்டன் நிலையத்தின் அமைப்பை நோக்குவோம். இந்தநிலையம் இருபிரதான மண்டபங்களாக வகுக்கப் பட்டுள்ளது. மேல்மாடி தியான மண்டபமாகவும், கீழேயுள்ள மண்டபம் புராணமண்டபமாகவும் செயற்பட்டு வருகின்றமை ஒரு விசேட அம்சமெனக் கொள்ளலாம். தியான மண்டபத்தில் சிவபத்தர்களின் நலன்கருதி திருவடி வணக்கம் நிகழ்கின்றது, சிவபெருமானின் திருவடியை வணங்கி அனேகமானோர் சிவபத்தியை மேம்படுத்துகின்றனர் என்று கூறினாலும் மிகையாகாது.

புராண மண்டபத்தில் யோகசுவாமிகளின் திருவுருவம் அழகிய விமானத்தின் கீழ் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

மேலும் நான்கு நாயன்மார்களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் நிழல் படங்கள் மெருகூட்டிய நிலையில் காணப்படுகின்றன. அதேவேளை இங்கு பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல்புராணம் ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாக ஓதப்படுகின்றன.

(தொடரும்)

நம்பலகை-
தோண்டிக் கொண்டிருந்தார்கள்.
னவர். அதுதான் தோண்டிக் கொண்டிருக்
போது கவனித்தார்.
இல்லை..''
பேர் தோண்டிக் கொண்டிருந்தீர்களே?..
ட்கள்?''
கொஞ்ச நாள்கள் தோண்டிப் பார்த்துவிட்டுப்
ர்கள்...''
புன்னகைத்துக் கொண்டே போய்விட்டார்.
கள் கழிந்தன.
அந்த இடத்திற்குச் சென்றார்.
ப்போது இரண்டுபேர் மட்டுமே தோண்டிக்
ார்கள்.
டைத்ததா?''
இங்கே கிடைக்காது என்று முடிவு
போய்விட்டார்கள்...''
அந்த இருவரிடமும் கேட்டார்:
க்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறதா?
ஆழமாகத் தோண்டிய பிறகும் வெறும்
ருக்கிறது?''
பார்க்கலாம்...'' என்றான்.
வைப் பார்த்துச் சந்தோஷமாகச் சொன்னான்:
ாதும்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத அடிப்படையில் அரங்கேறிய அராஜகம்

**நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் (04.01.1974- 10.01.1974) படுகொலை செய்யப்பட்டவர்களின் 38 ஆவது நினைவு தினம் கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்டது**

ஈழத்தமிழர்கள் அறுபத்தைந்து வருடகாலத்தில் பலதரப்பட்ட இனப் படுகொலைகளை சந்தித்தே வந்துள்ளனர். பெரும்பான்மையின ஆட்சியாளர்களாலும், சகலதரப்புப் படையினராலும் காலம் காலமாக தென்னிலங்கையிலும் சரி, தமிழர் தாயகப் பிரதேசங்களிலும் சரி தமிழர் மீதான படுகொலைகளை அரங்கேற்றியே ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழர் படுகொலை, தமிழ் மொழிப் படுகொலை, பண்பாட்டுப் படுகொலை என அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த வரிசையில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் ஒன்பது படுகொலைகள் இடம்பெற்றமையும் மாநாட்டினையும் திட்டமிட்டுக் குழப்பியமையும், தமிழர் வரலாற்றில் எப்போதும் மறக்க முடியாத ஒன்று.

தமிழர்கள் தமது மொழியை ஆய்வு செய்வதற்கும், மொழியை வளர்ப்பதற்கும், நிலைநாட்டுவதற்கும், எழுச்சி பெறுவதற்கும் உரித்துடையவர்களாவர். இதனடிப்ப டையிலேதான் வண. தனிநாயகம் அடிகளார் தலைமையில் தமிழறிஞர் குழு உருவாக்கப்பட்டு கடல் கடந்த நாடுகளில் மூன்று தமிழாராச்சி மாநாட்டை சிறப்பாக நடத்தி முடித்த நிலையில் இலங்கையில் மாநாட்டை நடத்துவதற்கு தமிழாராய்ச்சி மாநாட்டுக் குழு முடிவெடுத்தது.

1974 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் நாள் தொடக்கம் ஒன்பதாம் நாள்வரை நடத்துவதற்கு முடிவாகின. அதேநேரம் ஜனவரி 10 ஆம் நாள் பரிசளிப்பு விழாவாக ஒரு நாள் கூடச் சேர்க்கப்பட்டிருந்தது.

மாநாட்டுக் குழுவினர், நடைபெறப் போகின்ற தமிழாராச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு தமிழகத்திலிருந்தும் ஏனைய ஆசிய, ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தமிழறிஞர்களை, ஆய்வாளர்களை வரவழைப்பதற்கு இலங்கையில் அப்போதைய சுதந்திரக் கட்சியின் தலைமையிலான சிறிமாவோவின் ஆட்சியிடம் அனுமதி கோரப்பட்ட போது, யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அனுமதிமறுக்கப்பட்டு, அதனை கொழும்பில் நடத்துமாறு பணிக்கப்பட்டது. குழுவினர் மறுத்து விட்டனர். முழுக்க முழுக்க தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதே பொருத்தமென அரசுக்கு எடுத்துரைத்தனர்.

அரசு ஒருவாறு வேண்டாவெறுப்பான நிலையில் அனுமதியை வழங்கியிருந்தனர். அப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பான அரசியல் நிர்வாகமே யாழ்ப்பாணம் மாநகரசபையில் இருந்தது. மேயராக பதவி வகித்தவர் காலஞ் சென்ற அல்பிரட் தங்கராசா துரையப்பா ஆவார். இவர் யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவதற்கு பூரணமான ஒத்துழைப்பை வழங்க முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு தமிழர் தரப்பில் கடுமையாக இருந்தது எனலாம்.

ஒருவாறாக ஜனவரி 4 ஆம் திகதி மாநாடு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு மங்களச்சுடர் ஏற்ற மங்களப்பேரிகை முழங்க கோலாகலமாக ஆரம்பமாகியது. தமிழரின் சிறப்பை எடுத்துக்காட்ட ஆய்வுகள், பட்டிமன்றங்கள், கவிதை அரங்கேற்றம், பரத நடனங்கள் என ஒருங்கே ஆரம்பமாகின.

ஏழு நாள்களும் யாழ் மாநகரம் இந்திரலோகமாகக் காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் மகரதோரணங்கள், வாழை, கமுகுகள், சிகரங்கள், சப்பறங்கள், அலங்காரவளைவுகள், மின்சாரபல்புகள் கொண்ட வளைவுகள் எனக் காட்சியளித்தன. அலை அலையென மக்கள் தினமும் யாழ்மாநகரை நோக்கிப் படையெடுத்தனர்.

தமிழுக்கு விழா, தமிழருக்கு விழா, தமிழ்மண்ணுக்கு விழா தமிழன்னைக்கு விழா என்ற புளகாங்கிதத்தோடும், பூரிப்போடும் தமிழ்மக்கள் இந்த விழாவில் இரண்டறக் கலந்திருந்தனர்.

மாநாட்டுக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் தமிழர் கலாசாரத்தை, வாழ்வியல்புகளை, பண்பாட்டு விழுமியங்களை அழகாக எடுத்தியம்பிய வண்ண மிருந்தனர். தமிழர்கள், தமிழை வளர்த்த புலவர்கள், அறிஞர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு பெருமைப்பட்டனர்.

தமிழர் தாயகத்தை ஆட்சிபுரிந்த மன்னர்களான சங்கிலியன், பண்டார வன்னியன் மற்றும் வீரபாண் டிய கட்டபொம்மன் போன்றவர்களின் திருவுருவப் படங்கள் தாங்கிய ஊர்திகள் எடுத்துவரப்பட்டபோது பொலிசார் அவற்றைத் தடுத்து நிறுத்தினர். ஆனால் உணர்வு கொண்ட மக்கள் அதனைக் கவனத்தில் எடுக்காது ஊர்திகளை முன்னெடுத்துச் சென்றனர்.

''தேமதுரத் தமிழோசை பரவுக உலகமெல்லாம்'' என்ற உயர்ந்த கருத்துக்கமைவாக மாநாட்டின்போது ஆய்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. யாருடைய கண் திருஷ்டிபட்டதோ மின்சாரம் தாக்கி இரு தமிழர்கள் உயிரிழந்தனர். மாநாடு தொடர் நிகழ்ச்சி நிரல் வரிசையில் முன்னெடுக்கப்பட்டு, இறுதி நாளை எட்டியது. ஏழாம் நாள் நிகழ்வுக்கு வடக்கு கிழக்குப் பகுதி எங்குமிருந்தும், மலையகம், தென்னிலங்கையிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

தாங்களும் கலந்திடல் வேண்டும், தமிழின் சுவையினைப் பருகிட வேண்டும், தமிழரின் பெருமையை, சிறப்பை, பண்பாட்டை அறிந்தவற்றையும், அறியாதவற்றையும் அறிந்து தெரிந்திடல் வேண்டும் என்ற ஆவாவோடு வீரசிங்கம் மண்டபம் நோக்கி பிற்பகலுக்குப் பின்னர் திரண்டவண்ணமிருந்தனர். பொங்குதமிழுணர்வுடன் ஐம்பது ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டிருக்க பரிசளிப்பின் இறுதிநாள் நிகழ்வு ஆரம்பமாகியது.

தமிழன் இல்லாத நாடில்லை, தமிழர்க்கென்றொரு நாடில்லை என்ற ஆதங்கம் ஒவ்வொரு தமிழர் உள்ளங்களில் மனதாரப்படிந்திருந்தது. தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்திருந்த தமிழ்த்துறைப் பேராசிரியர் நைனா முகம்மது மிகவும் அழகாக தமிழ்மொழியின் சிறப்பை எடுத்தியம்பிக் கொண்டிருந்தார்.

தேன்சொட்டுவது போல் அவரது நாவிலிருந்து தேனினும் இனிய தமிழ் வெளிவர மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ் மக்கள் மெய்மறந்து அதனைச்

**■ மு.ஈழத்தமிழ் மணி**

சுவைத்துக் கொண்டிருந்த வேளையில்தான் அந்தப் பயங்கர நிகழ்வுகள் இடம்பெற்றன.

வீரசிங்கம் மண்டபம் முன்றல், முற்றவெளி, திறந்தவெளி அரங்கு, றீகல் திரையரங்கம், புல்லுக்குளப் பகுதி எனக் காணுமிடமெங்கணும் மக்களாகவே காட்சியளிக்க பொலிஸ் வாகனம் தபால் கந்தோர் தலைமையக பிரதான வீதியூடாக வந்து கொண்டிருந்தது. பெரும் வீதியை நிறுத்தி வைத்திருந்த மக்கள் வாகனம் செல்ல முடியாத நிலையில் பொலிஸார் தவிக்க, பொலிஸார் தங்களது அராஜக நடவடிக்கையை கட்டவிழ்த்து விடுகின்றனர்.

கண்ணீர்ப்புகைக் குண்டு வீசப்படுகின்றது. புல்லுக்குளம் பக்கமாக மின்சாரவயர்க் கம்பிகள் அறுத்து வீழ்த்தப்படுகின்றன. மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. திரண்டிருந்த மக்கள் செய்வதறியாது சிதறி ஓடுகின்றனர். குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்களின் அவலக் குரல்கள் ஒருபுறம். மரணஓலம் மறுபுறம்.

எங்கு ஓடித்தப்புவது?, எப்படிப் போவது? என்ற ஏக்கநிலையில் மக்கள் துன்பப்பட்டனர். புல்லுக் குளப் பகுதிக்குள் மக்களைப் போகவிடாது ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தடுத்து நிறுத்தினர். துரிதமாக செயற்பட்ட இளைஞர்களின் இந்த நடவடிக்கையினால் அதிகளவு உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. மின்சாரவயரினால் தாக் குண்டு ஒன்பது தமிழர்கள் சாவடைந்தனர். மக்கள் பலர் காயங்களுக்குள்ளாகினர். திரையரங்குகளில் திரையிடப்பட்டுக் கொண்டிருந்த படங்கள் நிறுத்தப்பட்டு மக்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தனர்.

பொலிஸார் ஏராளமானோர் நகர் முழுவதும் நிறுத்தப்பட்டிருந்தனர். ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் வீடுகள் செல்ல முடியாதவாறு போக்கு வரத்தச் சேவை நிறுத்தப்பட்ட நிலை யில் பெரும்பரிதாபத்துக்குரிய நிலை யில் இரவுப்பொழுதைக் கழித்திருந்தனர்.

ஏழு நாள்கள்வரையில் யாழ்.நகரில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடானது திட்டமிட்ட ஒரு சதியே எனக்கூறப்பட்டது. கொழும்பில் நடத்துங்கள் நாங்கள் சகலவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்கின்றோம் என்று அப்போதைய பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருந்த லக்சுமன் ஜெயக் கொடி தெரிவித்திருந்தார்.

ஆனால், அதனை மறுத்து மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் தாங்கள் ஏற்பாடு செய்த பொருத்தமான இடத்தில் மாநாட்டை நடத்துவ்தே சிறப்பு என முடிவெடுத்திருந்தனர். இது அப்போதைய அரசுக்கு நல்லதாகப்படவில்லை. அதிலும் தமிழர்கள் அப்போது ஆரம்பகால போராட்டத்தை அஹிம்சை வழியில் ஆரம்பித்திருந்தவேளை மாநாடு தமிழ்ப் பிரதேசத்தில் நடப்பதை அரசும், அதன் அடிவருடிகளும் விரும்பவில்லை என்பதே உண்மை. இந்த மாநாட்டினூடாக தமிழர்கள் வலுப்பெற்றுவிடுவார்கள், ஒன்று திரண்டுவிடுவார்கள் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க இம்மாநாடு உயிர்கொடுத்துவிடும் என்ற பிற்போக்குவாதமும், இனவாதச் சிந்தனையுமே இம்மாநாட்டை சிதைப்பதற்கு காரணமாகும்.

ஒன்பது தமிழர்களைக் காவுகொண்ட மாநாடு, தமிழ் மக்கள் மத்தியில் பல உண்மைகளைச் சொல்லியுள்ளது. தமிழர்கள் தமிழர்களாக வாழக்கூடாது, மாநாடு நடத்துவதற்கும், தமிழை ஆய்வு செய்வதற்கும் தமிழர்களுக்கு உரிமையில்லை, அருகதையில்லை என்ற இனவாத உணர்வு அப்போதும் மேலிட்டிருந்தது.

அதன் விளைவே நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளாகும். பின்னர் நினைவுத் தூண் நிறுவப்பட்டு மக்கள் வணக்க நிகழ்வை மேற்கொண்ட பின்னர், இனம் தெரியாத விஷமிகளால் நினைவுத் தூண் இடித்தழிக்கப்பட்டதையும் நினைவு கூர வேண்டும். மாநாட்டின் போது படுகொலை செய்யப்பட்ட ஒன்பது தமிழர்களை, தமிழர்கள் வரலாற்றிலிருந்து நீக்கிவிடல் வேண்டும், அவர்கள் நினைவு கூரப்படலாகாது என்ற இனவாத அடிப்படையில்தான் நினைவுத் தூணும் இடித்தழிக்கப்பட்டது.

வருடா வருடம் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளை நினைவு கூருகின்ற வேளை இந்தச் சம்பவத்தை எத்தனை தமிழர்கள் மறந்திருக்கின்றார்கள். மாநாடு நடந்த இடத்திற்கு முன் இப்போது நிறுவப்பட்டுள்ள நினைவுத் தூண்களைக் கொண்ட நினைவாலயம் உரிய வணக்கம் செலுத்தும் இடமாக வில்லை.

அவ்விடம் உரிய முறையில் அமைக்கப்படல் வேண்டும். இன்று 38 ஆவது ஆண்டு நினைவு நாளை மக்கள் நினைவு கொள்ளும் இவ்வேளையில் அனைத்துத் தமிழ் மக்களின் இதயங்களிலும் இது பதிவாக அமைய வேண்டும்.

அப்போதைய ஆட்சியாளர்களாலும், படையினராலும் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலையே நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளாகும். 38 ஆண்டுகளில் மற்றுமொரு தமிழாராய்ச்சி மாநாடு ஈழத்தமிழ் மண்ணில் இடம் பெறாமல் போனதற்கு தமிழர்கள் சொந்தமண்ணில் சுதந்திரமாக, தங்களைத் தாங்கள் ஆளும் உரிமை பெற்றவர்களாக வாழமுடியாமல் போனமையே காரணமாகும். ஆனாலும் இந்த மாநாட்டுப் படுகொலைகளானது ஈழத்தமிழர் படுகொலைகளில் ஒன்றாக வரலாற்றுப் பதிவாகியுள்ளது எனலாம்.

1958 ஆம் ஆண்டு இனப்படுகொலை தொடக்கம் 2009 முள்ளிவாய்க்கால் படுகொலை வரிசையில் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவு நாளையும் தமிழர்கள் என்றென்றும் மறக்காமல் நினைவு கூருவார்கள். இருப்பினும் தலைமுறையினருக்கு இந்த மாநாட்டின் போது இடம்பெற்ற இறுதிநாள் சம்பவங்களைத் தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்டு.

> “ஒன்பது தமிழர்களைக் காவுகொண்ட மாநாடு, தமிழ் மக்கள் மத்தியில் பல உண்மைகளைச் சொல்லியுள்ளது. தமிழர்கள் தமிழர்களாக வாழக்கூடாது, மாநாடு நடத்துவதற்கும், தமிழை ஆய்வு செய்வதற்கும் தமிழர்களுக்கு உரிமையில்லை, அருகதையில்லை என்ற இனவாத உணர்வு அப்போதும் மேலிட்டிருந்தது.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயன்பு

ஒரு வயதான அம்மா வீதியில் போய்க்கொண்டிருந்தார். அவர் கையில் எதையோ வைத்துக்கொண்டு, அதை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருந்தார். ஒருத்தர் மெதுவாக அந்த அம்மாவிடம் போய்'' கையில் என்ன இருக்கிறது என்று எட்டிப் பார்த்தான். பார்த்தவனுக்கு ஆச்சரியத்துடன் கூடிய அதிர்ச்சி ஏற்பட்டது. ஏனென்றால் அந்த அம்மாவின் கையில் நான்கு பற்கள் இருந்தன. அவன் மிகுந்த ஆச்சரியத்துடன் அந்த அம்மாவைப் பார்த்தான் '' ஏனம்மா உனக்கு என்ன பைத்தியமா? யாருடைய பல் இது? இதை ஏன் கையில் வைத்து அலைந்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான். அதற்கு அந்த அம்மா விவரம் சொல்ல ஆரம்பித்தார்.

'' எனக்கு ஒரு மகன் இருந்தான். அவனை மிகவும் செல்லமாக வளர்த்தேன். அவனைத் தரையில் நடக்க விடுவதில்லை எப்போதும் தூக்கி வைத்துக் கொண்டிருப்போன். அவன் பெரியவனாகி பாடசாலை போகும் போது கூட அவன் புத்தகப்பையை நான்தான் சுமந்துகொண்டு போவேன். பார்க்கிறவர்கள் கூடக் கேலி செய்வார்கள் '' ஏனம்மா படிக்கப் போறது நீயா? உன் பிள்ளையா?'' என்று கேட்பார்கள். நான் எந்தக் கேலியையும் பொருட்படுத்துவதில்லை. எனது முழுக் கவனமும் என் பிள்ளையை எந்தக் கஷ்டமும் அனுபவிக்க விடாமல் பாதுகாப்பதிலேயே இருந்தது.

அவன் இன்றைக்கு எவ்வளவோ பெரியவனாகி விட்டான். வெளிநாட்டில் உத்தியோகம் பார்க்கின்றான். சமீபத்தில் இங்கே வந்துவிட்டுப் போனான். ஒருநாள் ஏதோ கோபத்தில் என்னை அறைந்து விட்டான். அப்போது இந்த நான்கு பற்களும் விழுந்து விட்டன. இன்னமும் கூட விழுந்திருக்கும். ஆனால் என் வாய்க்குள் வேறு பல் எதுவும் இல்லை. என் பிள்ளை அறைந்ததனால் வீழந்த பல் அல்லவா இது? அதனால்தான் இதை எப்போதும் கையில் வைத்துக்கொண்டு ஆசையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அவன் தான் வெளிநாடு போய்விட்டான். அவனைப் பார்க்க முடியாத ஏக்கத்தை நான் இந்தப் பல்லைப் பார்த்துப் போக்குகிறேன்'' என்றார் அந்த அம்மா.

இந்தக் கதை எதற்காக என்றால் '' தாயன்பு'' எப்படிப்பட்டது என்பதைப் புரிந்துகொள்வதற்காகத்தான் . கல்யாண ஆசைக்கு அப்புறம் தாயை மறந்துவிடுகின்ற எத்தனையோ பேர் இந்த உலகத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் காதில் விழ வேண்டும் என்பதற்காக மட்டுமன்றி இதைப் படித்தாவது தமது தவறை உணர்ந்து செயற்பட அவர்கள் முயற்சிப்பார்கள் என்ற நம்பிக்கையிலும் தான் இந்தத் தகவலைக் கூறுகிறேன்.

ஆனால் ஒருவிடயம் மட்டும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண் டும். தாயை மதிக்கத் தெரிந்தவர்கள் தான் இன்றைக்கு வாழ்க் கையில் எல்லா விதத்திலேயும் முன்னுக்கு வந்திருக்கிறார்கள.

இன்னொரு அம்மா தினமும் கோயிலுக்குப் போய் '' கடவுளே'' நான் இறந்து போனால் நரகத்துக்குப் போகவேண்டும் என்று வேண்டிக்கொள்வாராம். எல்லோரும் சொர்க்கத்துக்குத்தான் போக ஆசைப்படுவார்கள். ஆனால் இந்த அம்மா ஏன் இப்படி வேண்டிக்கொண்டிருக்கிறார் என்று ஆலய அர்ச்சகருக்கு சந்தேகம். ஒருநாள் நேரடியாகவே அதை அவரிடம் கேட்டு விட்டார். அதற்கு அந்த அம்மா இப்படிச் சொன்னார். '' ஐயா எனக்கு கல்யாணம் ஆகி நீண்ட நாள்களாகக் குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருந்தது. கோவில் குளம் எல்லாம் வழிபட்டு வந்தேன். அதன்பின் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அவனை நான் மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்தேன். அதன் விளைவு அவன் மோசமான ஆளாகி விட்டான். கெட்ட பழக்கம் எல்லாம் கற்றுக்கொண்டான்.

அவன் இறந்துபோனால் நிச்சயம் அவனுக்கு நரகம் தான் கிடைக்கும். அந்த அளவுக்கு கெட்டவன் என்று பெயர் வாங்கிவிட்டான். எனக்குத் தெரியும் இவனுக்காக நரகத்திலும் யாரும் தயவு காட்டமாட்டார்கள். அதனால் இவனுக்கு முதல் நான் இறந்து நரகத்துக்குப் போய்விட்டால், இவனுக்குப் பணிவிடை செய்யலாம். அதனால் தான் நரகத்துக்குப் போக வேண்டும் என்று தினமும் ஆண்டவனை வேண்டுகின்றேன்'' என்று கண் கலங்கிக் கொண்டே கூறினார்.

அதுதான் தாய் உள்ளம். தாயின் பெருமையைச் சரியாக உணர்ந்து கொண்டால் அவர்களுக்கு எப்போதும் எந்தக் கஷ்டமும் வராது. இது ஏதோ உபதேசத்துக்காகச் சொல்கிற வார்த்தை இல்லை. உண்மையின் வார்த்தை . ஒருத்தார் கையில் நான்கு பற்களை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். ''என்ன நடந்தது ?'' எப்படி வந்தது இந்தப் பற்கள்?'' என்று விசாரித்தார்கள்.

''இந்த உலகத்தில் எல்லோரையும் தாயாக நினைக்க ஆரம்பித் தேன். ஒரு அம்மாவைக் கடைத் தெரு வில் பார்த்து ' தாயே' என்று கூப் பிட்டேன். உடனே '' பளார் '' என்று என்னை அறைந்து விட்டார் அந்த அம்மா. அது தான் பற்கள் வீழ்ந்து விட்டன. அவற்றைத்தான் பொறுக்கி கையில் வைத்திருக் கின்றேன்'' என்றார்.

''தாயே என்றுதானே கூப்பிட்டீர் கள்? அதற்கு ஏன் அறைந்தார்?'' என்று கேட்டேன். நான் 'தாயே' என்று கூப்பிட்டது அவர் காதில் 'நாயே ' என்று விழுந்துவிட்டதாம். அதுதான் இப்படி ஆகிவிட்டது'' என்றார் அவர்.



கேசவாரிநதன்

# வாசகர் திருமுகம்

## நாய்களும் தொல்லைகளும்

கடந்த காலங்களில் நாய்கள் பெருகிய போது அரசு, பணியாளர்களைக் கொண்டு நாய்களை அழிக்கச் செய்தது.

தற்போதைய அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புத்த சமயக் கோட் பாட்டின்படி ''நாய்களைக் கொல்லுதல் பாவம்'' என்று நிறுத்தியுள்ளார்.

கண்ணன் பகவத்கீதையில் '' தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம்'' எனக் கூறுகின்றார்.

இந்த நாய்கள் கிணற்றுக் கட்டுகள், வீட்டின் கேற்றடிகள் முதலிய இடங்களில் மலசலம் கழிக்கின்றன. மழை காலத்தில் மழை நீருடன் சேர்ந்து கிணற்றுக்குள் அசுத்தங்கள் செல்கின்றன. இதனால் கொடிய நோய்கள் பரவும் நிலைமையும் காணப்படுகின்றது.

வீதிகளில் நாய்கள் கூட்டம் கூட்டமாக நின்று போக்குவரத்துச் செய்வோரின் உயிரை எடுத்து வருகின்றன.

இந்த நாய்களின் தொல்லைகளில் இருந்து விமோசனம்பெற சுகாதார அதிகாரிகள், சூழலுடன் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் வீட்டுக்கு ஒரு நாயை விட்டு ஏனைய நாய்களை அழிக்க உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

பாதிக்கப்பட்ட மக்கள்.

## எமது நிலையையும் கவனிப்பார்களா?

1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆண்டு மார்ச் மாதம் வரை பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் வசித்து வந்தோம். இரண்டு முறை முகாம் எரிந்து உடமைகள் இழந்து அரச, அரச சார்பற்ற நிறு வனங்களின் உதவியில் ஓரளவு நிம் மதியுடன் வாழ்ந்தோம். பின்பு எமது அரசினால் வழங்கப்பட்ட காணியில் 2011 ஆண்டு மூன்றாம் மாதம் மீளக் குடியமர்ந் தோம்.

நாமே எம்மால் முடியுமான அளவில் ஒரு சிறு வீடு கட்டி வாழ்ந்து வருகின்றோம் எம்மை எமது பகுதி கிராமசேவையாளரிடம் பதிவு செய்து நான்கு மாதம் நிவாரணம் பெற்றோம். மிகுதி நிவாரணம் வெட்டப் பட்டுள்ளது. ஆனால் எமக்கு அடிப்படை வசதி கூட இல்லாத நிலையில் காலைக் கடன் கழிக்க மலசலகூட வசதிகூட அற்ற நிலையில் எமது கிராமசேவகர் ஊடாக அரச அதிபருக்கு மனு ஒன்றும் வழங்கினோம்.

இன்று வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் அற்ற நிலையில் ஒரு சில தனியார் நிறுவனங்கள் தற்காலிக கொட்டகை அமைக்க தடி, தகரம், கதவு, ஜன்னல், கல்லு கொடுத்துள்ளன. சிமெந்து மணல் தரவில்லை. கல்லு தரமற்றது. எனவே எமது அவல நிலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்த பார்த்து எமக்கும் உரிய நிவாரணத்தைப் பெற்றுத் தருவார்களா?

பாதிக்கப்பட்டவர்கள்.

## இளைஞர்களின் அட்டகாசத்துக்கு தீர்வு இல்லையா?

திருநெல்வேலி கிழக்கில் இருக்கும் செங்குந்த இந்துக் கல்லூரியின் விளை யாட்டு மைதானம் தற்போது சமூக விரோத கும்பலின் விளையாட்டு மைதானமாக மாறி இருக்கின்றது. இந்த மைதானத்துக்கு பாதுகாப்பு அரண்கள் இல்லை.

இது பாடசாலையில் இருந்து சொற்ப இடை வெளி தூரத்தில் அமைந்துள்ளது. இந்த மைதானத்திற்கு தினமும் இரவு, பகல் நேரங்களில் பல இளம்சமூகத்தினர் சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஓட்டோ போன்ற வாகனங்களில் வருகை தருகிறார் கள்.

இவர்கள் மைதானத்திற்குள் இருந்து மது அருந்துதல், அடிதடி அடித்தல் போன்ற சம்பவங்கள் தினமும் நிகழ்கின்றன.

இதனால் வீதியில் பயணிப்போர் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடு கிறது. குறிப்பாக பெண்களோடு மோதுகி றார்கள். அவர்களைத் தட்டிக் கேட்க முற்பட்டால் சண்டைக்கு வருகிறார்கள். அதனால் யாரும் அதைப் பொருட்படுத்து வதில்லை. அயலவர்களும் பயப்பீதியில் ஏனோதானே என்று இருக்கிறார்கள். மைதா னத்தில் விளையாடும் வெளி மாணவர் களை மது அருந்த, புகைப்பிடிக்க அழைக்கி றார்கள்.

இந்த நிகழ்வுகள் அயலில் உள்ள சிறுவர்களின் எதிர்காலத்தையும் பாதிப்புக் குள்ளாக்க நேரிடுகிறது. அண்மையில் மது அருந்த ஓட்டோவில் வந்தவர்களில் ஒருவர் அயலில் உள்ள வயோதிபப் பெண் இருந்த வீட்டிற்குள் மழையை சாட்டாக கூறி நுழைந்து அந்தப் பெண்ணுக்கு உதவி ஏதா வது செய்ய வேண்டுமா? என கேட்டு அவருடன் நன்றாகப் பேசிவிட்டு திருட முற்பட்டுள்ளார். அப்பெண்மணியின் உற வினர் வந்ததையடுத்து அவர்கள் ஓடிதலை மறைவான சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

அத்துடன் கடந்தகாலத்தில் இளைஞர் கள் குழு ஒன்று மது அருந்தியதில் ஏற்பட்ட தகராறில் ஓர் இளைஞர் உயிரிழந்த சம்பவம் ஒன்றும் நிகழ்ந்ததை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்டுவது பொருத்தமானதாகும்.

ஆகவே சம்பந்தப்பட்ட மைதானத்தில் அரங்கேறும் சமூக விரோத செயல்களை தடுத்து நிறுத்தி சமுதாயத்திற்கு நன்மை பயக்க பாடசாலை அதிபர் பாதுகாப்பு அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு ஆவன செய்வார் என எதிர்பார்க்கிறார்கள்.

அயலில் வசிப்பவர்கள்

## கலைகளை அவமதித்த கலாசார விழா

புத்தாண்டு தினமான 01.01.2012 அன்று மாலை, யாழ்.நகரப் பகுதியில் இருக்கும் புகழ்பெற்ற மண்டபம் ஒன்றில் இடம் பெற்ற கலாச்சார விழாவானது எமது கலைஞர்களையும் கலைகளையும் அவமதிக்கும் வகையில் நடாத்தப்பட்டதை இங்கே மன வேதனையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். தமிழிசை அரங்கு, வேப்பிலை நடனம், பரதநாட்டியம், பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கலைஞர் கள் பலர் இணைந்து மிகச் சிறப்பாக வழங்கிக்கொண்டிருந்த போது மேடையின் இரண்டு பக்கங்களிலும் வைக்கப்பட்டி ருந்த ஒளிதெறிப்பான்கள் மூலம் வேறு ஒளிப்படக் காட்சிகள் இடைவெளி யில்லாமல் ஒளிபரப்பப்பட்டன. இதனால் மேடையில் நடைபெற்றுக் கொண்டிருக் கும் கலை நிகழ்வை ரசிப்பதா அல்லது ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் ஒளிப்படக் காட்சிகளைப் பார்ப்பதா என் னும் சங்கடமான நிலைக்குச் சபையோர் தள்ளப்பட்டனர்.

சிறு வயது மாணவர்களே மண்டபத்தில் அதிகமானவர்களாக இருந்ததால் அவர்கள் திரையரங்கில் இருப்பதைப்போன்று அமைதியற்று காணப்பட்டனர். ஏனையோ ரால் எதுவும் செய்யமுடியாத நிலையில் அன்றைய நிகழ்வானது அர்த்தமற்ற ஒரு நிகழ்வாக நடந்து முடிந்தது. கலாச்சார நிகழ்வின் பிரதான அனுசரணையாளர்கள் அன்றைய நிகழ்வைத் தமக்கான விளம்பரக் களமாக மாற்றிக்கொண்டமையே இதற் கான காரணம் என்பதை அங்கிருந்த போது உணர முடிந்தது.

அத்துடன் ஏற்பாட்டாளர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளும் அனுபவ மின்மையும் இவ்வாறான கலைகளை அவமதித்த கலாச்சார விழா நடப்பதற்குக் காரணமாக அமைந்தது எனலாம்.. எதிர் காலத்திலாவது இவர்கள் பொறுப்புடன் சிந்தித்துச் செயற்படுவார்களா..?

கலாவித்தகர் ஏ.எஸ்.கரன்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலகப் பெண்கள் அழகு மிளிர.....



இந்தக் காலத்தில் அதிகமான பெண்கள் வேலைக்குச் செல்பவர்களாகவே இருக்கின்றனர்.

வாழ்க்கையை சுல பமாக எதிர்கொள்ளும் இவர் களின் பெரிய மனக்குறை தங்கள் அழகு பற்றியதாகவே இருக்கின்றது.

அவசர உல கில் அழகை சரிவரப் பராமரிக்க முடிவதில்லை. அதிலும் வெளியில் செல்பவர்கள் அதிகமான அழகுப் பிரச்சினையை எதிர் கொள்கிறார்கள்.

சருமம், முடி போன்றவை வெயில், தூசியினால் பாதிக்கப்படுகின்றன. வெயில் படும் பகுதிகள் கறுத்து விடுகின்றன. பருத் தொல்லை மற்றும் பொடுகுத் தொல்லை என்பன குறைவதில்லை.

பெண்களின் அழகுப் பராமரிப்புப் பற்றி இனி பார்க்கலாம்.

**பருக்களைப் போக்க**

வெயிலாலும் தூசியினாலும் பருக்கள் எற்படலாம். ஓமோன் மாறுபாட்டினாலும் கொழுப்புச் சத்துள்ள உணவு சாப்பிடுவதாலும் பருக்கள் அதிகமாகும்.

- சாதிக்காய், வசம்பு, அதிமதுரம் போன்றவற்றை பொடி செய்து தலா 2 கிராம் எடுத்து பன்னீர் கலந்து பருக்கள் மீது தடவிவந்தால் அது அமர்ந்துவிடும். வடுக்களும் மறைந்து போகும். வாரம் ஒரு முறை இதைச் செய்யலாம்.
- பருக்கள் இருந்தால் கைக்குட்டையினால் முகம் துடைக்கக் கூடாது. ஏனெனில் மீண்டும் அதே கைக்குட் டையைப் பயன்படுத்தும் போது அதில் ஒட்டியுள்ள பக்ரீரியாவால் மறுபடியும் பருக்கள் உண்டாகும். ரிசு பேப்பரினால் முகம் துடைக்கலாம்.
- நொறுக்குத் தீனிகளைத் தவிர்த்து பழங்கள், பழச்சாறு என்பவற்றை சாப்பிடலாம். மாதுளை, ஒறேஞ் என்பன மிக வும் நல்லது. பருக்கள் தோன்ற மலச்சிக்கலும் ஒரு காரணம். அது இல்லாமல் பார்த்துக் கொள்ளவும். நார்ச் சத்துள்ள சலட் வகைகளை சாப்பிட்டால் மலச் சிக்கல் ஏற்படாது.



**பொடுகு நீங்க**

20 கிராம் வெந்தயத்தை சூடாக்கி பொடி செய்து கொள்ளவும். இரும்புப் பாத்திரத்தில் தயிருடன் கலந்து முதல் நாள் இரவே ஊற வைக் கவும்(இருப்புப் பாத்திரம் தயிரின் குளிர்மையைக் குறைக் கும்). காலையில் வெந்தயம் தடிப்பாகிப் பொங்கி வரும். 10 மில்லி தேங்காய் எண்ணெய்யை தலையில் தடவிக்கொள்ளவும். பின்னர் வெந்தயக் கலவையை தலைமுடியை சிறிது சிறிதாகப் பிரித்து பூசவும். அரை மணி நேரம் ஊறிய பிறகு மிருதுவான சம்பூவினால் தலையை அலசவேண்டும். வாரம் ஒரு முறை செய்தால் பொடுகு மறைந்துவிழும்.

**வெயில் கருமையைக் குறைக்க**

வெயிலில் போவதற்கு முன்போ பின்போ கீழ்க்கண்ட சிகிச்சையை செய்து கொள்ளலாம்.

கடலை மா 6 தேக்கரண்டி, பாலாடை 2 தேக்கரண்டி, எலுமிஞ்சைப் பழச்சாறு 10 துளி, கிளிசரின் 1 தேக்கரண்டி கலந்து தினம் ஒரு முறை முகம், கை, கழுத்துப் பகுதிகளில் தடவினால் வெயிலினால் ஏற்படும் கருமையைப் போக்கலாம். பப்பாளிக் கலவையுடன் தேன் கலந்து முகம், கை, கழுத்துக்களில் பூசி வந்தாலும் நல்லது.

**கருவளையம், கண் எரிச்சல் நீங்க**

- 10 ரோஜா இதழ்களை சூடான நீரில்போட்டு அதன் சாறு இறங்கியதும், கண்களுக்கு கீழே தடவி முகத்தையும் கழுவவேண்டும். முகம் பொலிவு பெற்று கருவளையம் குறையும்.
- வெள்ளரிக்காயை வெட்டி கண்களில் வைத்துக் கொள்ளலாம்.
- முகத்தில் லைட்டாக foundation போட்டுக் கொள்ளலாம். லேசான ஐ லைனர், லிப்ஸ்ரிக் போட்டுக் கொள்ளலாம்.

இவை தவிர யோகா, தியானம், உடற்பயிற்சி போன்றவற்றில் ஏதாவது ஒன்றை தினமும் செய்துவந்தால் நல்லது.

திருமதி அஜந்தா ராஜேந்திரா
Dip. in Beauty Therapy
& Hair Dressing(India),
City&Guilds(UK)

# மணப்பெண் மேக்அப் (Bridal Make-Up)



Make up வகைகளில் மிக முக்கிய மானது மணப் பெண்ணுக்குரிய Make up ஆகும். இது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். வாழ்க்கையில் ஒரு முறைவரும் நிகழ்வாகையால் பெண்கள் இந்த மணப் பெண் அலங்காரத்தைத் திட்டமிட்டு தம்மை அழகாக அலங்கரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

இது சாதாரண Make up போல் அமையக் கூடாது. இந்த அலங்காரம் முகத்தில் 8 மணி நேரமாவது கலையாது இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள கொண்டுMake up போட்டு கொள்வது அவசியமாகும். இதற்கு திருமண நாளுக்கு முன்னரே மணப்பெண் தன் முகத்தை தயார் படுத்திக் கொள்ள வேண் டும்.

கடைசி 3 மாதங்களுக்கு முன்னரே ஒரு அழகுக் கலை நிபுணரிடம் சென்று தன் சருமத் தன்மையை அறிந்து அவ ரின் ஆலோசனைகளைப் பெற்று தேவைப்படின் அதற்குரிய சிகிச்சைகளைச் செய்து கொள்வது மிகவும் நல்லது. அத்துடன் கை, கால்களைக்கூட அழகுக் கலை நிபுணரின் ஆலோசனைப்படி பராமரித்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு திட்டமிட்டு அழகா கத் தன் அலங்காரத்தை மணப் பெண் செய்து கொண்டால் ஒரு முழுமையான அழகிய மணப் பெண்ணாக மிளிர முடியும்.

தற்காலத்தில் மிகவும் நவீன மேக் அப் சாதனங்கள் மணப்பெண் அலங்காரத்துக்கென்றே வருகிறது. இதனை முறையாக உபயோகிப்பது மிகவும் அவசியமாகிறது.

தற்சமயம் புதிய நவீன நுட்பங்கள் மூலம் Make up செய் யும்முறை அறிமுகப்படுத்தப் பட்டு இருக்கிறது.

இதனை மிகவும் Advanced Make up என்று சொல்வார்கள்.

இதனைப்பற்றிய விவரங்களைத் தொடர்ந்து உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.



திருமதி யோகினி
சண்முகநாதன்
அழகுக்கலை நிபுணர்.

# அழகாகத் தோன்ற



மாநிறம் கொண்ட பெண்களைப் பொறுத்தவரை மேக்கப்பின் போது சற்றே அதிகமாக ரோஸ் பவுடரை பூசினால் பொலிவு பெறுவர்.

ஓரளவுக்கு மேல் பவுடர் பூச்சு அதிகரித்து விடாதவாறு கவனமாக மேக்கப் செய்தல் அவசியம்.

உதட்டுச் சாயத்தைப் பொறுத்தவரை, மாநிறம் கொண்டோர் தேவைப் பட்டால் மட்டுமே போட்டுக் கொள்ளலாம்.

மாநிறம் கொண்டவர்களும், கருப்பான நிறம் கொண்டவர்களும் ரோஸ் பவுடரை விரும்பினால் மட்டுமே பூசிக் கொள்ளலாம். இல்லையேல் சாதாரணமாக அன்றாடம் பயன்படுத்தும் முகப்பூச்சு பவுடரை குறிப்பிட்ட அளவில் எப்போதும் போல உபயோகிக்கலாம்.

கருப்பு நிற பெண்கள் அவர்களது நிறத்துக்கு ஏற்ற வகையிலான உதட்டுச் சாயத்தை வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும். இளம் சிவப்பு நிறம், உதட்டுச் சாயங்கள் நல்ல எடுப்பான தோற்றத்தைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org